T.D. RC No 220
R. R No 191 – 4 – 1912
[illegible]
[illegible]

R673
N13
117679

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்தவிளக்கம்


இது

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள்

ஆதின வித்துவான் ஸ்ரீமத்

சுப்பிரமணியபிள்ளையவர்களால்

எழுதப்பெற்ற



தேவகோட்டை சிவநேயச்செல்வர்

ஸ்ரீமாந். அரு. அரு. சோம.

சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

1913



*Copy Right Registered.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்தவிளக்கம்

இது

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள்
ஆதீன வித்துவான் ஸ்ரீமத்
சுப்பிரமணியபிள்ளையவர்களால்
எழுதப்பெற்று

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9 - OCT 1913
MADRAS.

தேவகோட்டை சிவநேயச்செல்வர்
ஸ்ரீமாந். அரு. அரு. சோம.
சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்
பொருளுதவியால்

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்
மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்
மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிடப்பெற்றது.

1913

Copy Right Registered.

R673
N13

MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

இம்மலர்தலையுலகத்துள்ள மக்கள் யாவரும் தத்தமக்குச் சிறப்புவகையானுள்ள சமய நெறிநின்று ஒழுகி அதனன் முடிவிற் பெறக்கிடப்பதாகிய இன்பத்தைப் பெறுதற்குரிய விருப்பமுடையவரென்பது யாவருமுணர்வர். அவ்வின்பம் பொறிகளானுகரப்படும் இன்பங்களுளொன்றாகவிருப்பின், அஃது இறைப்பொழுதிலழிந்தொழியு நிலைமைத்தாம்; ஆகலின், அத்தகைய இன்பத்தைப் பொருளாகக் கூறுஞ் சமயங்களை யொருவி என்றும் அழிவிலாப் பேரின்பத்தை முடிபொருளாகக் கூறுஞ் சமயத்தை யாராய்ந்து கைப்பற்றல் அறிவுடையார் கடனாம். அவ்வாராய்ச்சியை நம் வேதத்துக்குப் புறம்பான நூல்களின் மேற்கோடல் தகுதியின்று; என்னை? நம்பெரியோரால் அப்புறமதங்களின் போலித்தன்மை நாம் அறியவுபாயவாயிலாக மறுக்கப்பட்டுக் கிடத்தலானும், அப் புறமதத்தாருள்ளுஞ் சிலர் இற்றைஞான்று நம் மதநூல்களைப் படித்து உண்மையுணர்ந்து பாராட்டுகின்றமையானுமென்க.

இனி, அவ்வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டு வெளிப்பட்ட சமயங்களும் பலவுளவாதலின், அவற்றுள் எச்சமயத்தை யுண்மைநெறி யெனத் தெளிந்து கோடு மெனின்; வேதத்துட்பட்ட எல்லாச் சமயங்களும் பொது வகையாகக் கடவுளை யடைவதற்குரிய நெறியாமெனினும், சைவநெறியொன்று தவிர ஏனைய வெல்லாம் [illegible]ண்ட தத்துவங்களைப் பொருளெனக் கடைப்பிடித்து ஒன்றையொன்று மறுத்தொதுக்கு மியல்பின வாதலானும், சைவசமயம் அங்ஙன மின்றிப் பிற சமயங்களெல்லாம் தனக்குச் சோபானமாக வமையுமாறு அவையிற்றை யேற்றுத் தான் [illegible]வாதீதமாகிய

சிவபிரானையே பதிப்பொருளாக மேற்கொண்டுள்ளமையாலும்,
ஏனைய சமயங்களுக்குப் பிறதேவர்களும் இருடிகளும் ஆக்கியோராக,
அச்சமயத்தாரெல்லாரானு மேற்கொள்ளப்பட்ட வேதங்களை யரு
ளிச்செய்த ஆசிரியனாகிய சிவபிரானே அவ்வேதங்களோடு பேத
மில்லனவும், சைவசிமய தத்துவங்களாகிய பதி பசு பாசங்களி னியல்
களைக் குற்றமறத்தெளிந்துக் காட்டுவனவுமாகிய சிவாகமங்களுக்
கும் ஆசிரியனாதலானும், பல சிற்றாறுகளெல்லாம் இடை யிடையே
ஒரு பேரியாற்றிற் கலப்பஃதொன்று இடையறவின்றி நேரே கடலை
யண்மினாற் போலப் பல சமயநெறி யெல்லாந் தத்துவ முகமாகத்
தன்னுளடங்கத் தான் நேரே பேரின்பப் பிழம்பாகவுள்ள பரம்பொ
ருளைச் சார்தலானும், முற்பிறப்பிற் செய்த நற்றவத்தாற் றன்னை
யெய்தினரைப் பிறநெறிக் கட்செல்ல வொட்டாது அவரவராற்றற்
கேற்பத்தான் அரும்பு மலர் காய் கனிபோலொன்றுக்கொன்று சாத
னமாக வமைந்த சரியாதி நால்வகையாக நின்று முடிவிற் பேரின்ப
ளிக்க வல்லதாகலானும், இச்சைவ நெறியே வேதாகமங்களாற் சிறப்
புறவெடுத்துக் கூறப்படும் ஒப்புயர்வில்லா நன்னெறி யென்பது
[illegible]ளிடை மலைபோற் றெள்ளிதிற் புலப்படுமாதலின் இந்நெறியே
உண்மை நெறியெனக் கோடலமையும்.

இனி, நம் மக்களெல்லாம் முதலிற் கற்கப்படுங் கருவி நூல்களை
யெதற்காகக் கற்று அதன் பயனாகச் சமய நூலாராய்ச்சியிற்றலைப்
படல் வேண்டும். சமய நூலாராய்ச்சியைப் பயப்பித்தற்கே கருவி
நூல் வேண்டப்படும். "மொழித்திறத்தின் முட்டறுத்த நல்லோன்
முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்" என்றவிட
த்து முதனூலென்பது சமய நூலையே குறித்தது முணர்க. சமய
நூலாராய்ச்சி யின்றி ஆயுள் காலம் [illegible]களையே பயிறல்,
"நூலெலாம் விண்ணே நாற்குப் பருத்தி வைப்பார், போலே கற்றவி
ன்னூற் போதம் பராபரமே" என்னும் பெரியார் வாக்குக் கிலக்கா
கும். ஆதலின், ஒவ்வொருவரும் தத்தஞ் சமய நூல்களைப்பயின்று
அதன் கட்கூறப்படுந் தத்துவ வியல்களைத் தெரிந்து கொள்ளல் வேண்
டுவது இன்றியமையாத தொன்றாம்.



நம் சைவ மக்களெல்லோர்க்கும் ஸ்ரீ மெய்கண்டதேவர் முத
லிய சந்தான குரவர்களும், ஏனைப் பெரியாரும், நம்மாட்டுள்ள
பெருங்கருணையே காரணமாகக் கொண்டு வேதாகமங்களின் சார
மாக அருளிச்செய்த சிவஞானபோதமுதலிய சைவசாத்திரங்களைக்
குருமுகமாக விதிப்படி கேட்டுணர்ந்து கோடலே இன்றியமையாக்
கடமையாகும். அங்ஙனம் அச்சாத்திரங்களை யுணர்தற்கு அவை
கடினமான சூத்திரஞ் செய்யுள் வடிவாக இருப்பதால் முதலில்
இலகுவாக உணர்ந்து கோடற்கு வசன வடிவமாகச் சைவ வியல்
களைப்பற்றிச் சுருக்கியும் விளக்கியும் சில நூலெழுதப்பட்டு வெளிப்
படுதல் சிறந்த உபகாரமாகும்.

இவ் வுபகாரத்தைப் புலப்படுத்துவனவற்றுள் "சைவசித்தாந்த
விளக்கம்" என்னும் இந்நூல் மிகச் சிறந்ததாகும். இதன்கண்
திருவருட் பயனிலுள்ள "ஏகனநேகன்" என்னும் ஒரு குறள்
வெண்பாவின் விருத்தியுரையாகப் பதி பசு பாச வியல்கள் நன்கு
விளக்கியுஞ் சுருக்கியும் எழுதப்பட்டுள்ளன. "முன்னோர் மொழி
பொருளே [illegible]வர் மொழியும் பொன்னே போற் போற்று[illegible]
[illegible]தை மேற்கொண்டு இதனிடையிடையே சிவஞானபோதமா
பாடிய வசனங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் சைவசித்தா
ந்த வாராய்ச்சி செய்யப் புகுவார்க்கு முதற்படியாக மிக்குபயோகப்
படுமென்பதி லையமின்று. இதனை யெழுதிய ஆசிரியர் மதுரைத்
திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்துவானாக இருந்து சிவபத
மெய்திய ஸ்ரீ இராமசுவாமிப்பிள்ளை யென்று வழங்கும் ஸ்ரீ ஞான
சம்பந்தப் பிள்ளையவர்களின் பௌத்திரரும் ஷை ஆதீன
வித்துவானுமாகிய ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையவர்க ளாவார். இப்
பிள்ளையவர்கள் [illegible] பிரமசரிய ஒழுக்கநெறி நின்று சைவ
சாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்து காலந் தவறாது சிவ
பூஜை செய்துகொண்டிருக்கின்றனர். இவர்களின் சிவநேயமும்,
உள்ளும்புறம்பும் ஒத்த தூய்மையும், யாவர்மாட்டும் பேரன்பு
டைமையும், மிக்க சாந்தநிலையும் யாவராலும் பாராட்ட விரும்பத்தக்க
வாவாம். இவர்களைப் போற் சத்தியசீல முடையாரை யிக்காலத்துக்
காண்டலரிதாகும்.

# முகவுரை.

இந்நல்லோ ரெழுதிய "சைவ சித்தாந்த விளக்கம்" என்னும் இந்நூலி லுள்ள விஷயங்கள் முன்னரே மதுரை விவேகபாநுப் பத்திரிகையி லிவர்களாற் சிறிது சிறிதாக வெளியிடப்பட்டு வந்துள்ளன. அவை அக்காலத்துப் பத்திரிகை படித்தார் சிலர்க்கன்றியேனை யோர்க்குப் பெறக்கூடாமை கருதி முன்னர் மதுரை விவேகபாநுப் பத்திராதிபராகவும், இப்பொழுது "வித்தியாபாநுப்" பத்திராதிபராகவுமுள்ள ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் சிறிது சிறிதாக வெளிப்பட்ட விஷயங்களனைத்தையும் ஒருங்கே தொகுத்து உள்ளுறை, பொருளடக்க அகராதிகளுடன் சேர்த்துத் தம் விவேகபாநு அச்சியந்திரசாலையில் நன்கு அச்சிட்டு யாவருமின்புறப் புத்தக வுருவாக்கி வெளிப்படுத்தினார்கள்.

இஃதன்றித் தேவிகோட்டைச் சிவநேயப்பெருந் திருவாளர் ஸ்ரீ அரு. அரு. சோம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் இப்புத்தகப் பிரகடன விஷயமாகச் செலவாகிய பொருளை மிக்க அன்புடன் உதவி செய்தார்கள். இவர்கள் தம்முன்னோர் போலப் பல சிவபுண்ணியங்களைச் செய்து அவற்றின் பயனாக இரு பெருஞ்செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்கள்; இடைவிடாது செயற்கருஞ் சிவபூசைசெய்து சிவபக்தி அடியார் பக்திகளிற்சிறப்புற்றோங்குகின்றவர்கள்; கல்வியுடையாரிடத்துப் பேரன்புடையவர்கள். இவர்கள் நன்றி நம்மக்களெல்லாரானு நினைவு கூர்தற் பாலதே.

நமது அதால நவீநத்துவ சக்தியானும், பிரசங்க நயத்தானுந் தமிழ்மக்கள் பலரையு மின்புறுத்தி வருகின்ற ஸ்ரீ கவிராயரவர்கள் இத்தகைய புத்தகப்பிரகடனத்தானும் யாவரையு மகிழ்வுறுத்த முற்பட்டது அவர்கள் பெருமைக்கு ஏற்ற தொன்றேயாகும்.

முடிவாகக் கூறுவதாவது:—நந்நாட்டிற் சைவ சமய வுண்மைகளைத் தெரிய விரும்பும் நண்பர்கள் ஒவ்வொருவரிடத்தும் இப்புத்தகம் அவசியம் இருத்தல் வேண்டு மென்பதேயாம்.

இந்நூலாசிரியரவர்களும், இதன் பிரகடனகர்த்தாவும், இதற்குப் பொருளுதவி புரிந்த புண்ணிய சீலரும், நலனொடு நீண்டவாணாளையும், இத்தகைய உபகாரச் செயல்களில் மேன்மேல் விருப்பத்தையும், பிறநலன்களையுங் குறைவின்றிப் பெற்றின்புற எல்லாம் வல்ல சிவபிரான் திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

29—9—1[illegible] } மபொலன்பட்டி }

இங்ஙனம்.
மு. கதிரேசன்.



சிவமயம்.

# சைவசித்தாந்த விளக்கம்.

## உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | பதியியல்பு. | ௨ |
| ௨. | பசுவியல்பு. | ௧௨ |
| ௩. | ஆணவமலவியல்பு. | ௮௫ |
| ௪. | கன்மமல வியல்பு. | ௮௭ |
| ௫. | சுத்தமாயையினியல்பு. | ௬௩ |
| ௬. | அசுத்தமாயையினியல்பு. | ௧௧௩ |


## பொருளடக்க அகராதி.


| | |
|---|---|
| அஞ்ஞானம் ஐந்துவகைப்படுமெனல் ... ... | ௧௨0 |
| அட்டவித்தியேசுவரர் ... ... ... | ௧௩ |
| அநுசதாசிவர்பதின்மர் ... ... ... | ,, |
| அதர்மம் பத்துவகைப்படுமெனல் ... ... ... | ௧௨0 |
| அதர்வவேத உபநிடதங்கள் ௩௧ ... ... ... | ௧0௪ |
| அந்நுவாவும் இறைவன் திருமேனியாதல் ... ... | ௪ |
| அத்துவித சம்பந்தம் ... ... ... ... | ௩௪ |
| அத்துவிதப்பொருள் ... ... ... ... | ௨௩ |
| அவகுண்டனம் ... ... ... ... | ௪௩ |
| அவைராக்கியம் அநைஸ்வரியங்களின் வகை ... | ௧௨0 |
| அறுபத்து நான்கு கலைகள் ... ... ... | ௧௧௨ |
| ஆகமங்கள் இறைவன் அவயவங்களாதல் ... ... | ௯௮ |
| ஆகமங்களின் சிவபேத உருத்திர பேதங்கள் ... ... | ,, |
| ஆகமங்களைக் கேட்டவரும் உபபேதங்களும் ... ... | ௯௯ |
| ஆகமங்கள் ஐந்துவகைப்படுமெனல் ... ... | ௧00 |
| ஆகமமென்பதன் பொருள் ... ... ... | ௯௭ |
| ஆசாமியம் ... ... ... ... | ௮௮ |
| ஆசனவகை ஒன்பது ... ... ... ... | ௪௮ |
| ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம். ... | ௮௯ |
| ஆரணிமுதலிய மூலவகைச்சத்திகள் ... ... ... | ௧௧ |

| | பக்கம். |
|---|---|
| ஆவாகனம் ... ... ... ... | ௬௩ |
| ஆ...ஸ்திரங்களும் அவை கூறும் பொருள்களும் ... | ௯௧ |
| ஆன்ம சுத்தி ... ... ... ... | ௮௩ |
| ஆன்மசொரூபலக்ஷணம்... ... ... ... | ௨௰ |
| ஆன்மதடத்த லக்ஷணம்... ... ... ... | ௨௰ |
| ஆன்ம தரிசனம் ... ... ... ... | ௮௩ |
| ஆன்ம ரூபம் ... ... ... ... | ௮௧ |
| இருக்குவேத உபநிடதங்கள் பத்து ... ... | ௧௦௫ |
| இருபத்தெட்டாகமங்களும் கிரந்த எண்களும் ... | ௬௮ |
| இருவினையொப்பு ... ... ... ... | ௬௧ |
| உடல் பொருளாவிகளை இறைவன் என்று கொள்ளல் ... | ௩௧ |
| உண்மை ஞானம் பத்துவகைப்படுமென்பது ... ... | ௮௰ |
| உபாகமங்கள் இருநூற்றேழு ... ... ... | ௧௦௩ |
| உருத்திரர்கள் வகை ... ... ... ... | ௩௪ |
| உலகவினை முதலிய ஐவகை வினைகள் ... ... | ௮௪ |
| ஐஸ்வரியம் எட்டுவகைப்படுமெனல் ... ... | ௧௩௧ |
| ஞானக்கிரிதீக்கையின் ஞானவதி கிரியாவதிப்பிரிவுகள் ... | ௭௰ |
| கடவுளின் ஆறுகுணங்கள் ... ... ... | [illegible] |
| கன்ம மலத்தின் ஆறுகுணங்கள் ... ... ... | ௮௮ |
| கிரியையியல்பு ... ... ... ... | ௪௧ |
| கேவல முதலிய மூன்று அவத்தைகள் ... ... | ௩௮ |
| சகலர் ... ... ... ... | ௧௫ |
| சகளீகரணம் ... ... ... ... | ௪௩ |
| சஞ்சிதம் ... ... ... ... | ௮௮ |
| சத்திநிபாதம் ... ... ... ... | [illegible] |
| சத்திபேதங்கள் ... ... ... ... | [illegible] |
| சந்நிதானம் ... ... ... ... | [illegible] |
| சமாதி ... ... ... ... | [illegible] |
| சரியையியல்பு ... ... ... ... | ௪௧ |
| சன்னிபோதனம் ... ... ... ... | ௪௩ |





| | பக்கம். |
|---|---|
| சாக்கிர முதலிய ஐந்தவத்தைகள் ... ... ... | ௩௪ |
| சாதார தீக்ஷை ... ... ... ... | ௭௰ |
| சாத்திர தீக்ஷை ... ... ... ... | ,, |
| சாமவேத உபநிடதங்கள் ௧௬ ... ... ... | ௧௦௫ |
| சிவ தரிசனம் ... ... ... ... | ௮௩ |
| சிவபுண்ணியம் பத்து வகைப்படுமெனல் ... ... | ௩௬ |
| சிவ போகம் ... ... ... ... | ௮௪ |
| சிவயோகம் ... ... ... ... | ௮௩ |
| சிவ ரூபம் ... ... ... ... | ,, |
| சிவனென்னும் நாமம் சிவனுக்கே உரிமையாதல் ... | ௬ |
| சிகண்டருத்திரன் ... ... ... ... | ௬ |
| ஞான கன்ம பிரதான முறை ... ... ... | ௭௬ |
| ஞானேந்திரியங்கள் ... ... ... ... | ௧௨௨ |
| தசகாரியம் சுத்தாவத்தை ஐந்து ளடங்குமுறை ... | ௮௪ |
| தத்துவங்கள் ஒடுங்கு முறை ... ... ... | ௧௨௭ |
| தத்துவ சுத்தி ... ... ... ... | ௮௧ |
| தத்துவ தரிசனம் ... ... ... ... | ௮௰ |
| தத்துவ ரூபம் ... ... ... ... | ,, |
| தாரணை ... ... ... ... | ௫௫ |
| தியானம் ... ... ... ... | ௫௬ |
| தீக்ஷை ... ... ... ... | ௬௭ |
| தீக்ஷையின்றி மோக்ஷமில்லையெனல் ... ... | ௬௮ |
| தேனுமுத்திரை ... ... ... ... | ௬௪ |
| நயன தீக்ஷை ... ... ... ... | ௬௬ |
| நாராயண நாமம் சிவனுக்குரிமையாதல் ... ... | ௬ |
| நால்வகை வாக்கு ... ... ... ... | ௬௫ |
| நான்கு வருணத்தாருக்கும் குருத்துவமுண்டெனல் ... | ௬௫ |
| நான்கு வேதங்கள் ... ... ... ... | ௧௦௫ |
| நித்தியாநித்திய விவேகம் ... ... ... | ௬௭ |
| நியமவகை பத்து ... ... ... ... | ௬௪ |
| நிராதார தீக்ஷை ... ... ... ... | ௬௯ |
| நிவிர்த்தி முதலிய ஐவகைத் திருவருள் ... ... | ௧௰ |

# பொருளடக்க அகராதி.


| | பக்கம். |
|---|---|
| பசு நல்வினை சிவ நல்வினைகளின் வகைகள் ... ... | சுO |
| பஞ்சேந்திரியங்கள் ... ... ... ... | அ |
| பஞ்சக்கிலேசம் ... ... ... ... | கரு |
| பஞ்ச கோசங்கள் ... ... ... ... | கரு |
| பஞ்சதன் மாத்திரை ... ... ... ... | கஉரு |
| பதிபசுகர்த்திருத்துவ வேற்றுமை ... ... | உச |
| பதினெண்புராணங்களும் கிரந்த எண்களும் ... ... | கOஅ |
| பதினெண் புராணங்கள் கூறும் பொருள் ... ... | கOசு |
| பரிச தீக்ஷை ... ... ... ... | எO |
| பாசசத்தி முதலிய இருவகைச்சத்திகள் ... ... | கO |
| பிரத்தியாகாரம் ... ... ... ... | சுங |
| பிரளயாகலர் ... ... ... ... | கரு. |
| பிராணாயாமவகை மூன்று ... ... ... | ருO |
| பிராரத்தம் ... ... ... ... | அஅ |
| பிராரத்தத்தின் ஆறுவகை ... ... ... | ,, |
| புத்தி தத்துவத்தின் எண்வகைக் குணங்கள் ... ... | ககஅ |
| புறக்கருவி அறுபது ... ... ... ... | கஉகூ |
| மலபரிபாகம் ... ... ... ... | கசஉ |
| மானத தீக்ஷை ... ... ... ... | எO |
| முத்தியினும் ஆன்மாக்களடிமையாதல் ... ... | [illegible] |
| முத்தியையளிப்பவர் சிவபிரானே யென்பது ... ... | கரு.க |
| முத்திநிலைகளினிலக்கணம் ... ... ... | ருச |
| மூலமலத்தின் காரியம் ஏழு ... ... ... | அச |
| மூவகையான்மாக்களின் பொதுவியல்பு ... ... | கஉ |
| யசுர்வேத உபநிடதங்கள் நிக ... ... ... | கOகூ |
| யோக தீக்ஷை ... ... ... ... | எO |
| யோகவகை எட்டில் இயமவகை பத்து ... ... | சுச |
| வருணாச்சிரம தருமானுட்டானம் வேண்டுமெனல் ... | எகூ |
| வாசக தீக்ஷை ... ... ... ... | எO |
| விஞ்ஞானகலர் ... ... ... ... | கஉ |
| வேதாந்த சூத்திரம் ... ... ... ... | கOஎ |
| வைராக்கியம் பத்துவகைப்படுமெனல் ... ... | ககஅ |
| ஸ்தாபனம் ... ... ... ... | சரு |




சிவமயம்.

# கடவுள் வாழ்த்து.

## விநாயகர் துதி.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

## மெய்கண்டதேவர்.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு கயநாலல் முறைசொல்லாங்
கண்டிதிப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

## உமாபதி சிவாசாரியர்.

அடியார்க் கெளிய னெனத்தில்லை யண்ண லருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப் பரம முத்தி யப்பொழுதே
உடலுங் கரைவுற் றடைந்திடவா னுயர்தீக் கையினை யருளுக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார் கமல மலரின் கழல்போற்றி.

## சிவஞானயோகிகள்.

கருணைபொழி திருமுகத்திற் றிருநீற்று நுதலுங்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு அறவோடு பொறையுளத்திற் பொறுத்தே
பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத மனமு
மருவினர்க் கலாத ஞானமே வடிவாம்
வளர்துறைசைச் சிவஞான மாமுனிவன் மலர்த்தாள்
ஒருபொழுது நீங்காம லெமதுளத்திற் சிரத்தில்
ஒதிநிரா விளிமிலென்று முன்னிவைத்தே யுரைப்பாம்.

சிவமயம்.

# சைவ சித்தாந்த விளக்கம்.

சந்தானாசாரியர்களு ளொருவராகிய உமாபதி சிவாசாரியசுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பயனிலுள்ள "ஏகனனேகன்" என்னுங் குறள் வெண்பாவின் விருத்தியுரை.

ஏகனனே கனிருள் கரும மாயையிரண்
டாகவிவை யாறு மாதியில்.

(இதன் பொருள்.) ஏகன் - ஒருவனாகிய பதியும், அனேகன் - அளவில்லவாகிய பசுக்களும், இருள் - இருள் வடிவமாகிய ஆணவமலமும், கருமம் - நல்வினை தீவினைகளாகிய கரும மலமும், மாயை யிரண்டாக - சுத்தமசுத்தமென்னு மிருவகை மாயைகளுமாகிய, இவை ஆறு - இப்பொருள்கள் ஆறும், ஆதி இல் - ஆதியில்லை, அநாதியாகிய பொருள்களாமென்க. அநேகன் என்பது சாதியொருமை.

சாதியொருமை ஈறு தோன்றிய சாதியொருமை, ஈறு தோன்றாத சாதியொருமை என இரண்டு வகைப்படும். "ஈறுதோன்றிய சாதியொருமையும் ஈறு தோன்றாத சாதியொருமையும் எனி விரு திறப்படு மிருதிணை மருங்கினும்." அவைகளில் அனேகன் என்பது ஈறு தோன்றிய சாதியொருமை, சிவிகை பொறுத்தான் என்புழிப் போல.

இவையாறுமென அஃறிணை வாசகங்கொண்டு முடிந்தது திணைவழுவமைதி. ஆறுமென்னு முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

முற்றுணர்வும், அளவிலாற்றலும், பேரருளும், சுதந்திரமுமாகிய நிரதிசய குணங்களையுடைய முழுமுதற்கடவுள் ஒருவனே யென்பதை அறிவித்தற்குப் பதியை ஏகனென்றும், அளவிறந்த ஆன்மாக்கள் முத்தியடையவும் உலவாக்கிழிபோலப் பின்னும் இவ்வளவென்று அளவுபடுத்தற்கு அரியனவாய் நிற்றலின் பசுவை அநே

ணன் என்றும், ஒளிவடிவமான சிவசத்தியியல்பையும் ஆன்மவியல்பையும் தன்னியல்பையும் ஆன்மாவுக்குக் காட்டாது மறைத்து இந்திரிய விடயங்களையே காட்டி நிற்றலின் ஆணவமலத்தை இருளென்றும், திரோதான சத்தியின் பலத்தை விரும்பிச் செய்தபடியால் வினைகளைக் கன்மமென்றும், சுத்தமாயையைப்போல அசுத்தமாயையும் அநாதியே யென்பதை அறிவித்தற்கு மாயை இரண்டென்றுங் கூறியருளினர்.

இந்நூலாசிரியர் பௌட்கர முதலிய ஆகமங்களின் கருத்து நோக்கி நித்திய பதார்த்தம் ஆறென்று கூறியருளினர்.

சுவாயம்பு முதலாகிய ஆகமங்களில் பதார்த்தம் ஏழாகவும், பௌட[illegible] முதலிய வாகமங்களில் பதார்த்தம் ஆறாகவும், பராக்கிய முதலிய ஆகமங்களில் பதார்த்தம் ஐந்தாகவும், சர்வஞ்ஞானோத்தர முதலிய ஆகமங்களில் பதார்த்தம் நான்காகவும், இரௌரவம் மிருகேந்திர முதலிய ஆகமங்களில் பதார்த்தம் மூன்றாகவும் சங்கியா பேதம் சொல்லப்படினும் எல்லாம் பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தத்தில் அடங்குமென்பதுவே சகலாகம சம்மதமென்க.

## பதியியல்பு.

இந்த ஆறு பதார்த்தத்தில் முதற்கணுள்ள ஏகனாகிய பதியியல்பு யாதெனின், நால்வகைத் தோனியுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறப்பனயாவை அவையெல்லாஞ் சீவவர்க்கம்; அவ்வாறு பிறத்தலில்லது யாது அது பதிப்பொருள். இது ஒன்றே வினைச்செயல்களான் வேற்றுமையறியவாராக அவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்பதாகலின் ஏனைத்தேவர் முதலாயினர் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படுதலானும், சிவபிரானுக்கு அங்ஙனங் கொண்டு யாண்டானுங் கேட்கப்படாமையானும், சிவபிரானொருவனே உலகிற்கு முதற்கடவுள் என்க.

நித்தியமாய் வியாபகமாய் அப்பிரமேயமாய்த் தனக்கொருவாற்றானும் உவமையில்லாததாய் முதல், ஈறு, நடு, வீடு இவைகளொன்றுமில்லாததாய்ப் பெருமையதாய் நுண்ணியதாய்ப் பாசஞான பசுஞானங்களால் அறியப்படுதலின்றிச் சிவஞானத்தால் அறி



யப்படுவதாய்த் தன்னியல்பினிற்கும் சிவப்பொருளாகிய அம்முதற் கடவுள்,

இருண்ட ஆணவமலத்தின் மூழ்கி உய்யும் வண்ணமறியாத பசுக்களைப் பெருங்கருணைத் திறத்தினாலே அம்மலத்தினின்றும்விடுவிக்கவேண்டி மாற்றான் பஞ்சகிருத்தியஞ் செய்யவெண்ணிச் சிவசத்தியோடு பிரிவின்றி நின்று, சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களை நிலைக்களமாகக் கொண்டு, இலயபோகவதிகாரமென்னு மூன்றவத்தையினும் முறையே அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று திருமேனி கொண்டு, சத்தன் உத்தியுத்தன் பிரவிருத்தன் எனவும், சிவன் சதாசிவன் மகேசன் எனவும் பெயர்பெற்றுச் சுத்தமாயையின் கிருத்தியம் ஐந்தும் தாமே செய்வர். அசுத்தமாயையின் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுவரரை அதிட்டித்து நின்று செய்வர். பிரகிருதிமாயையின் கிருத்தியம் ஐந்தும் ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்து நின்று செய்வர். இத்தப்பிரகாரம் சிவம், சத்தி, விந்து, நாதமாகிய அருவம் நான்கும் சதாசிவமாகிய அருவுருவம் ஒன்றும், பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன் என உருவம் நான்கும் ஆகியமுத்திறத்து ஒன்பது வடிவத்திலும் நின்று பஞ்சகிருத்தியஞ் செய்வாராயினும், ஞாயிறு தன் சந்நிதிக்கண் சூரியகாந்தக்கல்லின்கண்ணே நெருப்பைக்காலச்செய்தும், தாமரையை மலரச்செய்தும், பூமியின் கண் நீரைச் சுவறச்செய்தும் விகாரமெய்தாமை போலவும், பாம்பினிடத்து விடம்போலவும், அக்கினியிடத்துச் சூடுபோலவும், இந்திரசால வித்தையினிடத்துப் பண்ணுகின்றவர்கள் போலவும் விகாரமின்றி நிற்பர். பஞ்சகிருத்தியஞ்செய்ய இச்சையுடையவர் இலயசிவன். எழுச்சியுடையவர் போகசிவன். கிருத்தியத்தைச் செய்தலுடையவர் அதிகாரசிவன். இன்னும் இலயபோக அதிகாரம் மூன்றுக்கும் வேறுபட்டால் பல திறப்படும். அவையாவன: சூக்குமமாகிய ஞானக்கிரியை சேர்ந்து நிருவிகற்பமாய் நிற்கும் அவதரம் சூக்குமாவையம். அது சிவம். இச்சாஞானக்கிரியை ஸ்தூலமாக விளங்கி ஸ்தூலமான நிருவிகற்பமாயுள்ள அவதரம் ஸ்தூ[illegible]மாம். அது சத்தி. பரனுக்குந் தயிருக்கு மத்தியிலுள்ள அவ[illegible]ம்போனும் போகாவஸ்தை. அது சதாசிவம். அதிகார மிரண்டு வகைப்படும்.

அவையாவன: சூக்கும அதிகாரம், ஈசத்துவம், ஸ்தூல அதிகாரம் கர்த்தவித்தை.

இந்த ஐந்தும் சிவன், சதாசிவன், மகேசன் என மூன்றுபடும். மகேசுவரமூர்த்தி யிருவாய திருமேனியே பரமசிவனுக்குச் சந்நிதி வடிவமென்றுணர்க. பஞ்சகிருத்தியமாவன: சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரக மென்பனவாம். முறையே யிவற்றின் இலக்கணங்களாவன: ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றும் தநுவாதிகளைத் தோற்றுவித்தலும் நிலைபெறச் செய்தலும் இளைப் பொழித்தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலும் கன்மஒப்பினை வருவித்து மலங்களை முதிர்வித்தலும் பந்தம் விடுத்தலுமாம். இன்னும் இதன் விரிவை ஆசிரியர் சிவஞானயோகிகள் இயற்றியருளிய திராவிட மகாபாடியத்திற் காண்க.

இவ்வாறு அறியப்படும் முழுமுதற்கடவுளுக்கு முற்றறிவும், அளவிலாற்றலும், பேரருளும், பேரின்பமும், இயல்பாகவே பாசங்களினீங்குதலும், வரம்பிலின்பமும் ஆகிய ஆறுகுணங்களும் இன்றியமையாத இலக்கணங்களாம். இந்த ஆறு குணங்களும் முதற்கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணங்களாதல் யாங்ஙனமெனின், கூறுதும்: சடசித்துக்களெல்லாவற்றையும் ஒருங்கே ஓரியல்பாக அறியுமறிவு இல்லாதவழி அச்சடசித்துக்களைத் தொழிற்படுத்துதல்கூடாமையால் சருவஞ்ஞத்துவமென்னும் முற்றறிவும், அஞ்ஞானமறைப்பினாலே ஒன்றோடொன்றொவ்வாத அறிவு இச்சை தொழில்களையுடைய அளவிறந்த உயிர்களின் பொருட்டுப் பல வேறுவகைப்பட நின்று தொழில் செய்தல் வேண்டுமாதலால் பூரண சத்தி யெனப்படும் அளவிலாற்றலும், சிற்றறிவினையுடைய உயிர்களைப்பற்றிய அஞ்ஞானப்பிணியை நீக்கி ஆநந்தப் பெருவாழ்வை யுயிர்களுக்கு அருளுதல் பேரறிவாளனுக்குக் கடப்பாடாதலால் அநுக்கிரகசத்தி யெனப்படும் பேரருளுடைமையும், எண்ணியதை இடையூறின்றி எண்ணிய பயன் கைக்க வேண்டுமாதலால் சுதந்திரமெனப்படும் தன்வயத்தனாதலும், இயல்பாகவே அஞ்ஞானத்தினின்று நீங்கிவிளங்கும் அறிவு தனக்கில்லையாயின் உயிர்களுற்ற அஞ்ஞானத்தை நீக்குதல் செல்லா



மையால் அநாதிபோத மெனப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதலும், தன்னிடத்துக் குறைவுள்வழி உயிர்களுக்கு ஆனந்த பூர்த்தி செய்தல் கூடாமையால் பூர்த்தி யெனப்படும் வரம்பிலின்பமும் கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணமாதல் காண்க.

இன்னும் பலவிதமாகக் கூறப்படும் குணங்களெல்லாம் இவற்றுள் அடங்கும். அவற்றை அறிந்து அடக்கிக்கொள்க. இந்த ஆறு குணங்களும் சிவபிரானுக்கு இலக்கணமாதல் பெறப்படவே இவற்றின் மறுதலைக் குணங்களாகிய சிற்றறிவு, சிறுதொழில், செயற்கையறிவு, சிற்றின்பம், பரதந்திரம், பசுத்துவம், பிறப்பு, இறப்பு, ஏகதேசவாசமுதலியன எல்லாம் சீவகுணங்களாவனவன்றிக் கடவுட்குணங்களாகா வென்பது தானே சித்திக்கும். கடவுள் உயிர்கள் எளிதிற்கண்டு வழிபட்டுய்யும்பொருட்டு அருளே வடிவமாய் வெளிப்பட்டருளுதலையுங் குணமாகக்கொண்டவன்; அதனால் அவன் ஏகதேசப்பட்டுத் தடைக்குறான். விகாரப்படுதற்குக் காரணம் பரதந்திரமும், ஏகதேசப்படுதற்குக் காரணம் சிற்றுணர்வு சிறுதொழில்களும், தடைக்குறுதற்குக் காரணம் விருப்பு வெறுப்புக்களுமாம்; இவ்வுபாதிகள் அவனுக்கு இல்லாமையால் இக்குற்றங்களுமில்லை. ஈண்டுக் கூறியவாற்றால் முதல்வனுக்குக் கருணை வடிவேயன்றி மாயை வடிவமில்லையாயின், ஆகமங்களில் முதல்வனுக்கு அத்துவாக்கள் ஆறையும் வடிவமாகக் கூறுதல் என்னையெனின் நிறைவுற்று அவ்வத்துவாக்கள் முழுதினுங் கலந்து எல்லாமாய் நிற்றலானும், அவையல்லனாய் நிற்றலானும் சடசித்துக்களையெல்லாம் செலுத்தி உடனுமாய் நிற்றலானும் அவ்வியல்புடைய முதல்வனுக்குத் தன்னுடைய திரோதான சத்தியான் அவற்றோடு உளதாகிய இயைபு நோக்கி அத்துவாவையும் உபசாரம்பற்றித் திருமேனியாக ஆகமங்கள் கூறின.

சாந்தியதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலை மார்பு, பிரதிட்டாகலை குய்யம், நிவிர்த்திகலை முழந்தாள்கள், திருவடி; இப்படிப் பஞ்சகலைகள் அங்கமும், புவனங்கள் உரோமமும், வன்னங்கள் தோலும், மந்திரங்கள் உதிரமும், பதங்கள் நரம்பும், தத்துவங்கள் எலும்பும், தசையுமாம். இவ்விதமாக அத்துவாக்

கள் ஆறும் சிவபிரானுக்குத் திருமேனியாமுறைமை உணர்ந்து கொள்க.

இந்த அத்துவாவடிவத்தானும் மந்திரவடிவத்தை ஒப்பற்ற வடிவமாக ஆகமங்கள் சிறந்தெடுத்தோதியது யாது காரணம்பற்றி எனின், உலகத்துக்கு முதற்காரணங்கள் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை என மூன்று. இம்மூன்றுள் மேலாகிய சுத்தமாயையில் தோன்றிய நல்லமையானும், பசுத்திற்கு அதீதமெனப்படும் சிவசத்தி மேற்பட்டு நிற்றலானும், அர்ச்சகர் செபிக்குமாறு செலுத்தி செபித்தபின் பயன் கொடுத்தற்பொருட்டு அவற்றை வாயிலாகக்கொண்டு போக மோக்ஷங்களைக் கொடுத்தலானும் என்க.

மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திரவடிவத்தை ஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத்தோதியது என்னையெனின் ஏனைய மந்திரங்களுக்கெல்லா முற்படத் தோன்றியதால் என்க. இங்ஙனங் கூறிய அத்துவாமூர்த்தி மந்திரமூர்த்தி பஞ்சப்பிரமமூர்த்திகளெல்லாம் அவற்றைத் திகழ்த்தி நிற்குந் திரோதான சத்திக்கு இசையச்செய்த உபசாரவடிவமென்றுணர்ந்து கொள்க. பஞ்சமந்திர வடிவம், அநுக்கிரகம், திரோதானம், சம்காரம், திதி, சிருட்டிகாரணமாக ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், மூர்த்தங்கள் இருதய ஆதிய மூர்த்திகளாகச் சொல்லப்பட்டது.

இனி, சிவனென்னும் நாமம் நிரதிசயவின்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பது பற்றிச் சிவபிரான் ஒருவனுக்கே உரியது. மற்றைத்தேவர்கள் அது கொடுக்கும் ஆற்றலில்லாதவர்களாதலால் அவர்களுக்கு உரித்தன்று. இதற்குச் சுருதி "சிவனெனுநாமந்தனக் கேயுடைய செம்மேனியெம்மான்" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத்தானுணர்க. சிவபிரானுக்குரிய இயற்கை நாமம் "சிவன்", என்பதே. மற்றவைகளெல்லாம் செயற்கை நாமம்.

இனி நாராயணனென்னும் நாமம் சிவபெருமானுக்கு அவயவப் பொருள் படுமாறு யாங்ஙனமெனின், கூறுதும்.

நாரது தொகுதி நாரமென்னுந் தொகுதிப்பொருள் பற்றி அண் விகுதிவரு மென்னும் பாணினிசூத்திரத்தால் ணகரவித்தையுடைய



அண்விகுதிபெற்றுநின்று, மேலாசாரப் பொருள்பற்றிக் ககர டகர வித்துக்களையுடைய யகர விகுதி பெற்று அயல் நீண்டு நாராயவெனநின்று, அதுவும் பகுதித்தன்மைப்பட்டு வினைமுதற்பொருளில் வரும் லகர டகர வித்துக்களையுடைய யுகர விகுதிவந்து அகரமாகத்திரிந்து நிற்ப, நாராயந என நின்று வினைமுதற்பொருளில் வரும்பெயர் விகுதி நகரம் ணகரமாமென்பதனால் நகரம் ணகரமாகி நாராயணன் எனமுடிந்து நாரது தொகுதியை சேர்ந்து நிற்பவனென்னும் பொருளில் நாராயணன் என்னும் பெயர் சிவனுக்கு அவயவப்பொருள் படுமாறு கண்டுகொள்க. நாரது தொகுதியைச் சேர்ந்து நிற்றலாவது உயிர்களோடு கலந்து நிற்றல். உயிர்களுக்கு அந்தரியாமி என்பது பெயருள். அற்றாகவின்றே பெண்பாலில் ஈகார விகுதிபெற்று நாராயணியென உமாதேவியாருக்குத் திருநாமம் போந்தவாறென்க. ஆதலால் முத்தியை விரும்பினவர்கள் சிவபெருமானையே ஆராதிக்கவேண்டும், அவனை மறந்து செய்யுந் தொழில்களெல்லாம் வீண்செயற்பாலனவாம்,

உதாரணம்: "அவ்வடிக்கன்புசெய்வதே பயன்படும் அரன்றன் பாதமறந்துசெய்யுந்தன்மைகளெல்லாம் வீண்செயல்" எனவும், "மானிடன் விசும்பைத் தோற்போற் சுருட்டுதல் வல்லோனாயினும் சிவனைக் காணுதிறம்பைதிர் விடுபெய்து, மாசுபார் சுருதி நுமம் வழக்கில் வையாத லாலே, யானும் நிறையைக் கருது முபாயமே யதிலவேண்டும்"

"அவனை மறுவற்ற சம்பிரமம் புராணனவனே
முழுதுந் தருகாரணமாக்கிகலர்க்கு
மவனே இறைவன் றொழுவார்க்கருள் விடலப் பேர
னவனே யெனவோதிடு மெல்லா மறைப்புலங்கள்"

"எச்சன்றனக்கு மிமையோர்க்கும் மெய்வேதியர்க்கு
மச்சங்கரனே யரசன் விசுவாதிகன் சீர்
நச்சும் முனிவர் அருட்பார்வையி னோக்கிலர்க்கு
மெய்ச்சித்தருவென் றறியென்ற திருக்குவேதம்"

"தோலாவனைத்தீ வினைகடத் தருப்பு நட்டு
மாலாகி நின்றேனை யொத்து மொழிற்ற வல்லோ
னாலமுண்டான் வனையலங்கநெக்கு
மேலாயவேதமெனவின்டாசாமவேதம்"

"வெளிதாழ்விசும்பைப்பசுக்கோலிற்சுருட்டவல்லோ
ருளரேற்புடைவிங்கியெழுந்துதிரண்டு நண்டு
விளவெம்முலைபங்கனையன்றியுமின்பமுத்தி
வளவிற்பெறலாமெனவிண்டநர்வகைகும்"

எனவுமோதியவாற்றுணர்க.

சதா சிவம் விளங்குதற்கு ஏதுவாய் நிற்போன் சதாசிவன் எனவும், மாயையுடையவன் மகேசன் எனவும் காரணக்குறியாமாறு காண்க.

சரம் அசரங்களாகிய உடம்புகளுக்கெல்லாம் ஒருயிரான் ஜீவராதலானும், உயிரையின்றி உடம்பு இயங்காமையாலும் தனக்கென ஒன்றில்லாதவராகிய சிவபெருமான் தான் போகியாயிருந்து உயிர்களுக்குப் போகங்களை ஊட்டியும், யோகியாயிருந்து உயிர்கள் யோகமாற்றி மெய்ஞ்ஞானம் உற்று உயர்சிவயோகத்தேகமாகி வீடெய்திடச்செய்தும் நிற்பர். நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் யோகிருந்துழி வேட்கைக்குக் காரணமாகிய காமன் இருக்கவும் விட்டு தேவர்கள் இன்பநுகர்ச்சியின்றி மெலிவுற்றதும், அம்மெலிவு கெடும்படி கருதிக் காமனை ஏவுதல் செய்ய அவன் நெற்றிக்கண்ணை விழித்தெரித்து உமாதேவியைக் கலந்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பத்தை அருளிச்செய்ததுமாகிய இந்நிகழ்ச்சியே இதற்குச் சான்றென்க. இதற்குச்சுருதி,

"போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிதலோரார்
யோகியாயோகமுத்தியுதவுதலதுவுமோரார்
வேகியானாற்போற்செய்தவினையினைவீட்டலோரார்
ருகியாமுடலெல்லாமும்பரிசொருவனென்பர்."

இவ்வுண்மைகளைச் சிறிதுமறியாது நமது சிவபெருமானை மும்மூர்த்திகளோடு ஒருவனாகவைத்தெண்ணுவோரை நோக்கி "நம்மவரவரே, மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணிவிண்ணாண்டுமண்மேற், தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே" எனத் தாயுமானவர் இரங்கிக் கூறிய திருவாக்குமறிக.

இன்னும் "தேவரிலொருவனென்பர் திருவுருச்சிவனைத்தேவர், மூவராய் நின்றதோரார்" எனவும்,



"தேவராயுமசுரராயுஞ் சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும் விண்ணெரிகாலிரு
பேராயவிரைமலரோன் செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன் மேயதுமூதுகுன்றே" எனவும்,

"மாவையுரித்ததள்கொண்டங்கமணிந்தவனை
வஞ்சர்மனத்திறையு நெஞ்சணுகாதவனை
மூவருருத்தனதா மூலமுதற்கருவை" எனவும்,

"வரியாயமலராணும்வையந்தன்னை
யுரிதாயபவளந்தானுமுள்ளுதற்கு
கரியானமுமறியாதகன்னின்மேயான்
பெரியானென்றறிவார்கள்பேசுவரே" எனவும்,

"படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை" எனவும்,

"தேவர்கோனறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர்கோனாய்நின்ற முதல்வன்" எனவும்,

"முந்தியடிமுடியுமாகிப் மூவராகி
சிந்தூரச்சேவடியானை" எனவும்,

"முந்தியமுதனடுவிறுதியுமானாய்மூவருமறிகிலர்" எனவும்,

"அரியாகிக்காப்பானயனாய்ப்படைப்பா
னரனாயழிப்பானுந்தானே" எனவும்,

"வீரனயனரியாருமறியாவகை யெங்களீசர்பரிசுகளே"

எனவும் வருந்திருவாக்குக்களானு மோர்ந்துணர்க.

இதுவே சுருதி மிருதி புராணம் இதிகாசம் எல்லாவற்றிற்குந் துணிபென்பது சிவதத்துவ விவேகமுடையார் குறுதிகொளென்னுஞ் சுலோகத்தில் கடாவிடைகளான் விரித்துக்காட்டிய வாற்றானறிக. நிகனமாயினுந் ஸ்ரீகண்டருத்திரன் அயன்மால் போலச் சகலரின் றிப் பிரளயாகலர்களிற் பக்குவமுடையோனாய்க் கட்டு நீங்கி முதலாயினவர்களானும், பரமசிவனுக்குரிய வெல்லாப் பெயர்களும் வடிவமுந் தொழிலும் பெற்றுடையவனாகலானும், சைவாகமங்களையறிவுறுக்கும் அயன்மாவிருவர்க்கு மேலாய்ச் சைவத்தினெய்திச் சமய்தீக்கை பெற்றோரால் வழிபடு கடவுளாயினானென்க.

இன்னும் சிவபெருமான் நிவிர்த்தி முதலிய ஐவகைப் பதிகளாயும், இருபத்தைந்து முதலிய வடிவங்களாயும், இன்னும் அநேக ரூபமாயும் விளங்குகிறார்; எனவும், இங்ஙனந் தொழில் பற்றி வேறுபட்டாரேனும் பொருளால் வேறுபாடில்லையெனவும் ஓர்ந்துணர்க. இவ்வாறெல்லா மடைந்துநிற்றல் ஆன்மாக்கள் பிறவி நீங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

இங்ஙனங்கூறிப்போந்த சிவமும் சத்தியும், சூரியனுங் கிரணமும்போல தாதான்மியத்தா லிருக்கிறப்பட்டியைந்து தன்னை நோக்காது புறப்பொருளை நோக்கி நிற்கு நிலையிற் சத்தியெனவும் பெயர் பெற்று நிற்கும். இனி சத்தி யொன்றுதானே காரிய வேறுபாட்டால் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்று ஐவகையாயும், ஆரணி, ஜெனனி, ரோதயித்திரி என்று மூன்றாயும், நிவிர்த்தி பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்று ஐவகையாயும், இன்னும் அநேக பேதமாயும் நிற்கும்.

பராசத்தியென்பது உயிர்களுக்கு அநுக்கிரகத்தைச் சங்குறித்துப் பொதுவகையான் அறிந்து மகிழ்ந்து நிற்பதாகிய ஞானமொன்றேயாம். திரோதான சத்தியாவது மலத்தின் வழிநின்று பாகம்வருவித்தற் பொருட்டு மோக முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பமேயாம். இச்சா சத்தியாவது:—உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித்தற்கு ளதாகிய கருணையேயாம். ஞானசத்தியாவது:—அதற்குச் செய்யக்கடவதாகிய உபாயங்களை யெல்லாமறியுமறிவேயாம். கிரியாசத்தியாவது:—அவற்றை அவ்வாறே சங்கற்பித்துச் செய்யுஞ் சங்கற்பமேயாம்.

இனி நிவிர்த்தி முதலிய ஐவகைத் திருவருளின் இலக்கணங் கூறுவன:—தாய் தந்தை மனை மக்கள் மண் பொன் முதலிய பந்தங்களினின்று நிவிர்த்திசெய்யுஞ் சிவசத்திக்கு நிவிர்த்தியென்று பெயர். அங்ஙனம் நிவிர்த்திபெற்ற ஆன்மாக்களை மீளநோக்கி ... பிரதிட்டைசெய்யுஞ் சிவசத்திக்குப் பிரதிட்டையென்று பெயர். அங்ஙனம் பிரதிட்டை பெற்ற ஆன்மாக்களுக்கு அநுமான ஞானம் ஆகமஞானமின்றி அநுபூதி ஞானத்தைப் பயப்பிக்கும் சிவசத்தி



க்கு வித்தையென்று பெயர். அங்ஙனம் அநுபூதி பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்புச் சங்கற்பமுதலிய வெல்லாத் துன்பங்களையுஞ் சாந்தமாகச் செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தியென்று பெயர். அங்ஙனஞ் சாந்தமாய் நின்றதும் ஒழியச்செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தியதீதையென்று பெயர்.

இங்ஙனைந்து சிவசத்தியாகிய திருவருட்சத்தி யொன்றுதானே காரியவேறுபாட்டால் ஐந்து பேதப்பட்டன. இங்ஙனமே சிவமும் நிவிர்த்திபதி முதலியவாக ஐந்து பேதப்பட்டன.

ஆரணி, ஜெனனி, ரோதயித்திரி என்னும் மூன்றுசத்திகளும் பிரமா விஷ்ணு உருத்திரன் என்ற மூன்றுபேரையும் அதிட்டித்து சிருஷ்டி, திதி, சங்காரமென்ற மூன்று தொழிலையுஞ் செய்து நிற்கும். இவற்றுள் சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் முதலாவது நிவிர்த்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். இரண்டாவது பிரதிட்டா கலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம். மூன்றாவது வித்தியா கலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம். நான்காவது சாந்தி கலையி லடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். இறுதியது சாந்தியதீதகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம். ஈண்டு உலகிற்கு முதற்கடவுளென்றது சுத்தமாயாபுவனந்தஞ் சங்கரிக்குஞ் சங்கார காரணனாகிய பரமசிவனை. அயன்மாலொடுங்கூடக் குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதிபுவனந்தஞ் சங்கரிக்குங் குணி ருத்திரனையன்றென வுணர்க. என்னை? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்கார காரணனன்மையின். இக்கருத்து நோக்கியே,

"தேவரி லொருவனென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றதேயார் முதலுருப் பதிமாத
ராவதுமுணரா ரியரிய யற்கரியவொன்று
மேவுரு நிலையுமோரா ரவனுருவினைவுந் தேரார்"

என்று சுருதி கூறிற்று.

ஈசனுடைய பதியியல்பு ஒருவாறு முடிந்தது. இன்னும் இதன் விரிவையெல்லாம் ஆசிரியர் சிவஞான யோகிகள் செய்தருளிய திராவிடமாபாடியத்திற் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

## பசு வியல்பு.

இனி அநேகமாகிய பசு இயல்பு யாதெனில், கூறுதும்.

நித்தியமாய், அருவருவாய் வசிப்புண்ணும் வியாபகமாய், அநாதியே பெத்தமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டிருக்கும் இச்சாஞானக் கிரியைகளை யுடையதாய், எல்லையிலதாய், பளிங்குபோல எதை எதைப் பற்றியதோ அதன் அதன் வண்ணமாய், சத்தையும் அசத்தையும் பகுத்துணர்தலின் சதசத்தாய், இருளும் ஒளியுமல்லாத கண்ணின் பண்பு போன்றதாய், சிவபெருமான் அருளால் பாசக்கட்டு நீங்கி முத்தியை யடையுந் தன்மையுடையதாய், உணர்த்த உணருஞ் சிற்றறிவிற் பலவித இயல்புடையதாய், பசுவெனப்படும் அவஸ்தைகளை யுடையதாய் விளங்கும் ஆன்மா பந்தவேறுபாட்டால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். ஆன்மாவென்னுஞ் சொற்குப் பொருள் வியாபகன் என்க. பசுவுக்கு ஆன்மா ஒன்றே இயற்கைநாமம். மற்ற நாமங்கள் உபாதிபற்றி வந்தன.

விஞ்ஞானகலர் விஞ்ஞானத்தால் கலையற்றவர், பிரளயாகலர் பிரளயத்திற் கலையற்றவர், சகலர் கலையோடு கூடினவர். இவை காரணப் பெயர்கள். இனி "விஞ்ஞானகலர் பிரளயாகலர் கலையோடு கூடினும் அகலரேயாவர்" என்னும் மகுடாகமத்தின் பொருளும் இதுவே யாமென்க.

விஞ்ஞானகலர் ஆணவபந்தமொன்றுமே யுடையர். பிரளயாகலர் ஆணவம், கன்மமென்னும் இரண்டு பந்தமுமுடையர். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றுபந்தமு முடையர். இனி விஞ்ஞானகலர் அநாதியே மலபந்த மாத்திரமுடைய விஞ்ஞானகலரும், அனுபவத்தானுதல், விஞ்ஞானத்தானுதல், சந்நியாசத்தானுதல், யோகத்தானுதல், தீக்கையானுதல், இவைகளால் மாயாபந்தம் கன்மபந்த முழுவதும் நீங்கி அசுத்தமாயையின் மேலுள்ள புவனங்களில் நுகரக்கடவனவாகிய போகங்கட்கு ஏதுவாய் நின்ற மலபந்தம் ஒன்றே உடையவாகிய விஞ்ஞானகலருமென இரண்டுவகைப்படுவர்.



இன்னும் விஞ்ஞானகலர் பக்குவர், அபக்குவர் என இருதிறப்படுவர். இவர்களுள் பக்குவராவார் மலபரிபாக மிகுதியினாலே சிவனுடைய அநுக்கிரகத்தைப் பெற்றுச் சாயுச்சியத்தை யடைகின்றனர். இனி அபக்குவராவார் அந்தமலபரிபாகமின்மையால் சிவன் அவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி யநுக்கிரகஞ் செய்யப்பட்டிருப்பினும் அந்தத் தத்துவாவுக்கு அதிகாரிகளாயிருக்கையால் அதிகாரமலத்தைப் பொருந்தியிருப்பார். இந்த அபரமுத்தி பெற்றவர்கள் யாவரெனின் முத்தராகிய பிரணவர், சதாக்கியர், சிவர், சித்தர், காரணர், சுசீலர், சூக்குமர், சாலர், தேசர், அம்சர் எனக்கூறிய அனுசதாசிவர் என்பவர். இவர்கள் அதிகாரமாயுள்ள தம்மனோர்க்குப் பக்குவம் வந்தவிடத்து அநுக்கிரகஞ் செய்து சதாசிவ தத்துவத்திற் போகங்களைப் புசித்து அந்தச் சதாசிவமூர்த்தியைச் சூழ்ந்து சேவித்துக் கொண்டிருப்பர்.

இனி மந்திரமாகிய அட்டவித்தியேசுரராவார் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி; இவ்வெண்மரு மீசுவரதத்துவத்திலிருக்கு மகேசுவரரைச் சூழ்ந்திருந்து மாயையின் கீழ்ப்பட்டனவாகிய சிருட்டியாதி கிருத்தியங்களைச் சிவனாணையாற் செய்பவர்கள். இவர்களுக்கு படைப்பு முதலிய தொழில்கள் எக்காரணத்தால் வந்தனவென்னில், சாந்தமூர்த்தியாயிருக்கிற சதாசிவர் இவர்கள் எண்மரையும் தமது திருமேனியினின்றுந் தோற்றுவிக்கையால் என்க. ஆனால் இவர்கள் எண்மரும் சமத்துவமுடையரோ அன்றி ஏற்றத்தாழ்ச்சி உடையரோவென்னில், அநந்த தேவநாயனாரை நோக்க மற்றவர்களுக்கு ஒவ்வொரு கலை குறைந்து வருதலால் ஒருவருக்கொருவர் தாழ்ச்சியுடையர் என்க. முற்பட்ட அநந்ததேவநாயனாருக்கு அதிகாரத்தில் வைராக்கியம் பிறந்தால் அவரை சிவன் சங்காரகாலத்தில் மோட்சத்தையடைவிப்பன். அதன் பின்பு அவர்க்கடுத்த சூக்குமர் அவ்வதிகாரத்தைப் பெற்றுக் கிருத்தியங்களை அவரைப்போலச் செய்வர். மற்றவர்களுமிப்படியே செய்வர் என்க.

இனி பிரளயாகலர் அநாதியே மலகன்மங்கள் மாத்திரமுடைய பிரளயாகலரும், இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்தமாத்

திரம் நீங்கி எனை இரண்டுமுடைய பிரளயாகலருமென இரண்டு வகைப்படுவர். இந்தப் பிரளயாகலருள் மலபரிபாகமுடையோராய்ப் பரமசிவன் அநுக்கிரகஞ்செய்யப் பெற்றவர் நூற்றெட்டு உருத்திரர் உளர். இவருள் ஸ்ரீகண்டருத்திரர் அந்த நூற்றெட்டு உருத்திரருக்குந் தலைவராய் மத்தியப்பிரளய முடிவில் பிரகிருதித்தத்துவத்திற்கு மேற்பட்ட தத்துவங்களெல்லாம் புவனங்களையுமுண்டாக்கி ஆணவம், கன்மம், மாயை என்னு மூன்று மலமுடைய சகலருள் ஞானத்தாலும், யோகத்தாலும், தவத்தாலும், தியானமுதலியவற்றாலும் சிறந்தவரைப் பிரமபதம் விண்டுபதங்களில் இருத்துவர். இந்த ஸ்ரீகண்டருத்திரர் மத்தியப்பிரளயகாலத்தில் அராக தத்துவத்தில் இருப்பர். பின்பு படைப்புக் காலத்தில் அசுத்தாத்துவாக்களைப் படைத்துப் பிர்மாவும் விண்டுவும் செய்யும் சிருட்டிகளை அதிட்டித்துநின்று மேற்பட்ட மகேசுவரரையும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் பிரமாண்டமுதலிய அண்டங்களையும் உண்டாக்குவர்.

முன் சொன்ன உருத்திரருள் நூறு உருத்திரர் ... மான பிரமாண்டத்திற்கு ... ராயிருப்பார். பிர்மா விட்டுணுக்களுடனே கூடக் குணதத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப்பிரளயம் வரையும அதிகாரஞ்செய்து கொண்டிருந்து பின் அந்தப்பிர்மா விட்டுணுக்களையும் ஒடுக்கிக்கொண்டு தாம் மிச்சிரத்துவாவில் அராகதத்துவத்திலிருப்பர். இவரோடுகூட வீரபத்திரரும் இருப்பர். கலைமத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். இவர்களோடு முன்சொன்ன ஸ்ரீகண்டர், வீரபத்திரர், சதஉருத்திரருமாக நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் பரமசிவன் அநுக்கிரகத்தால் பரமுத்தியை அடைவர். இந்த நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் மலபரிபாகத்தால் தீக்கைபெற்றுப் பரமசிவன் அருளால் பதங்களைப்பெற்றவர்; சுத்தவித்தியா தத்துவங்களிலிருப்போர், மலபரிபாகத்தால் பரமசிவன் அருளால் பதம்பெற்றவர். இந்தச் சுத்த தத்துவ வாசிகள் சரீரமும் வித்தியேசுரர் சரீரமும் வைந்தவம். நூற்றுப்பதினெட்டு உருத்திரர் சரீரம் மாயேயம். பிர்மா விட்டுணு முதலியோர் சரீரம் பிரகிருதி சம்பந்தம். பரமசிவனுடைய தெல்லாத்திருமேனியும் நூற்றுப்பதினெட்டு உருத்தி



ரர் வடிவும் வித்தியேசுவரர் வடிவும்போலத் தியானிக்கப்படும். பிர்ம விட்டுணுக்கள் சரீரம் பிரகிருதமாகலாலும் முன் பரமசிவன் அநுக்கிரகமில்லாமையாலும் இவர்கள் சரீரம்போலப் பரமசிவனைத் தியானிக்கலாகாது. பிர்மவிட்டுணுக்கள் பதம் பசுத்தானம். உருத்திரபதம், ஈசுரபதம், இரண்டும் பதித்தானம்.

இனிச் சகலர் தேவர் மக்கள்முதற் பலவகைப்படுவர். விஞ்ஞானகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயைக்கும் சுத்தவித்தைக்கும் இடையே உள்ளன. பிரளயாகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயை முதல் அராகமீறான தத்துவங்களில் உள்ளன. சகலர்க்குரிய புவனங்கள் மூலப்பகுதி முதல் பிருதிவி ஈறான தத்துவங்களில் உள்ளன. இன்னும் இம்மூவகை ஆன்மாக்கள் இயல்பெல்லாம் ஆசிரியர் சிவஞானயோகிகள் செய்தருளிய திராவிட மகாபாடியத்தில் காண்க. இனி அநாதியே ஆணவமலத்தின் மறைப்புண்ட ஆன்மா அதன்பின் அசுத்த மாயையின் அனந்த தேவரால் கலக்குண்ட பாகமாகிய காரண சரீரத்தைப்பொருந்தி அறிவு இச்சை செயல்கள் பொதுவகையால் சமட்டிரூபமாய் விளங்கப்பெறும். அதன்பின் அசுத்தமாயா தத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதி முதலிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தி அவை வியட்டிரூபமாய்ப் பிரிந்துதோன்றச் சிறப்புவகையால் விளங்கப்பெறும். அதன்பின்பு அத்தக்காரண முதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அவ்வறிவிச்சை செயல்கள் முன்னர்க்கூறப்படும் இரு சரீரங்களினிடமாகவரும் விடயங்களில் வியாபரிக்கப்பெறும். அம்மூன்றையும் முறையான் அடைந்தபின்பு சூக்குமதேகத்தைப்பொருந்திப் போக்குவரவு செய்து சூக்குமவினைப்பயன்களை ஈட்டியும் நுகர்ந்தும், தூலசரீரத்தைப்பொருந்திப்போக்குவரவுசெய்து தூலவினைப்பயன்களை யீட்டியும் நுகர்ந்தும் இவ்வாறு அநேகமுதல் அஞ்சவத்தைப்பட்டுநிற்கும். காரணசரீரமுதலிய ஐந்தும் அவ்வாறு மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்கு வடிவாய் முறையே ஆனந்தமயகோசமும், விஞ்ஞானமயகோசமும், மனோமயகோசமும், பிராணமயகோசமும், அன்னமயகோசமும் ஆகிய ஐவகைப்பெயர் பெற்று ஒன்றற்கொன்று தூலமாய் நிற்க கேவலத்திலொன்றுமின்றி மலமாத்திரையாய் நின்ற

ஆன்மா இந்த ஐந்து கோசங்களில் அது அதுவாய் வசிப்பதன்றி அக்கோசங்களைப் போக்குவரவுசெய்து நிற்கும்.

கேவலத்தில் ஒன்றுமின்றி மலமாத்திரையாய் நின்ற ஆன்மா மாயையில் அனந்ததேவநாயனாரால் அங்ஙனம் கலக்குண்ட பாகத்தை முதற்கட் பொருந்தி அறிவு இச்சை செயல்கள் பொதுவாமையால் அவ்வளவு விளங்கப் பெற்றமாத்திரையில் அம்மட்டிலே அறிவால் ஓர் ஆனந்தம் உண்டாகப் பெறுதலில் அஃது ஆனந்தமயகோசமெனப்பட்டது. பின்பு ஆன்மா கலை முதலிய தத்துவங்களைப் பொருந்தி ஞானம் வியட்டிரூபமாய் விளங்கப்பெறுதலில் விஞ்ஞானகோசமெனப்பட்டது. அதன்பின்பு ஆன்மா முக்குணத்தைப் பொருந்தி மனமுதலிய கருவிகளால் விடயங்களில் வியாபரிக்கப்பெறுதலில் மனோமயகோசமெனப்பட்டது. பின்பு ஆன்மா பிராணவாயுவை ஆதாரமாகக்கொண்டு விடயங்களை அநுபவித்தலால் பிராணமயகோசமெனப்பட்டது. அதன்பின்பு ஆன்மா அன்னத்தை ஆதாரமாகக்கொண்டு விடயங்களை அநுபவித்து நிற்றலால் அன்னமயகோசமெனப்பட்டது. இங்ஙனம் ஆன்மா இந்தத் தன்மை பாதலம் சுவர்க்கங்களில் கொள்ளிவட்டம் காற்றாடிபோல் நிமிடத்தின்கண் சுழலும்படி கொண்டு திரிதல்பற்றி இந்த ஐந்து கோசங்களை ஐந்துபறவையாகவும், அவற்றுள் ஒரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலிய உறுப்புக்களாகவும் வேதத்துள் உருவகஞ்செய்து உணர்த்திய வாறுணர்க.

ஆன்மாவின் உண்மையுணர்தற்கு இவற்றை இங்ஙனம் பகுத்தறிதலும் ஒரு சாதனமெனக்கொள்க. இன்னும் ஆன்மாச் சார்ந்ததின் வண்ணமாய் வசித்திடவருத்தற்குச் சருவஞானோத்தரத்தில் அவ்வச்சார்பு விசேடம்பற்றிப் பூதான்மா முதல நுவலகைப் படுத்துத் தொகுத்தும் விரித்தும் ஓதியதூஉம் ஈண்டு ஐயத்துறைத் துணர்ந்துகொள்க. அஃது எங்ஙனமெனில் கூறுதும். சருவ ஞானோத்தரத்தில் பசுவும் பாசமும் அதிகாரஞ்செய்து நிற்பதாகிய பதியும், அதிகாரத்தின் ஒழிந்து தன்னியல்பினிற்பதாகிய சிவமும் எனப்பதார்த்த நான்கென்றெடுத்துக்கொண்டு அவற்றிற்குத் தனித்தனி இலக்கணம் உணர்த்திப் பின்பு அதுகேட்ட அறுமுகக்



கடவுளுக்கு அங்ஙனம் அப்பிரமேயமாய் ஒன்றோடு உவமிக்கப்படாததாய் அதிசூக்குமமாய் வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை அறியுமாறு எங்ஙனமென்னும் ஆசங்கை நிகழாமைப் பொருட்டுச் சிவப்பொருள் அத்தன்மைத்தாயினும் அதனை யறிதற்கு உபாயங் கூறுகின்றாம்; அவ்வுபாயம் வாதிகள் எவராலும் அறியப்படாதன்றாய்க் குருபரம்பரையினறியப்படுவது. ஒருவருக்கும் யாங் கூறினமல்லேம் அதனை நீ கேட்பாயாகவென்று அதன் பெருமையையெடுத்துக்காட்டி அநாதிமுத்தனாய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும், அத்தன்மையனாகிய சிவனே நா[illegible]சிவோகம்பாவனை செய்யுமாறும், அவ்வாறன்றித் துவிதபாவனை செய்தாற் படுமிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித்; துவிதபாவனையைக் கைவிட்டுச் சிவோகமென அத்துவித பாவனை செய்வோன் ஏகதேசப்பட்டு நின்றறிவதாகிய சிற்றுணர்வுநீங்கிச் சிவனையறிந்து தான் சிவனேயாவனெனச் சிவனை யறிதற்கு உபாயங்கூறிப் பின் அதுகேட்ட அறுமுகக்கடவுளுக்குமேல் உத்தேசங்கூறும் வழியும் இலக்கணங் கூறும் வழியுஞ் சிவனும் ஆன்மாவும் இருபொருளென வைத்தோதுதலிற் சிவனின் வேறாகிய ஆன்மாச் சிவோகமெனப் பாவிக்குமத்துவித பாவனையாற் சிவனே தானாக ஐக்கியமாமாறு எங்ஙனமென்னும் ஆசங்கை நிகழாமைப் பொருட்டு, ஆன்மாத் தன்னியல்பை யறியாது பசுத்துவத்தோடு கூடியவழிப் பசுவாய் நின்றான். அதுபோலத் தன்னையறிந்து சிவத்துவத்தோடு கூடியவழிச் சிவமாய் நிற்பதற்கு ஐயமில்லை யாதலாற் றன்னையுஞ் சிவனையும் பராபர பேதத்தானுந் [illegible]ருக்கும் பேதத்தானும் எப்பொழுதும் பயின்றறிதல் வேண்டுமென்றோதி, அற்றேல் ஆன்மாவினியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடு கூடியவழிப் பசுவெனவுஞ் சிவத்துவத்தோடுகூடியவழிச் சிவமெனவும் பலதன்மைப்பட்டு நிற்குமாறென்னையென்று வினாவும் ஐயுறவைப்பொருட்டு "அதவா" வென்று எடுத்துக்கொண்டு தெளிவுபிறவாது மீள்மீள் மயங்குதற்கு ஏதுவாய வார்த்தைகளை விலக்கி, இங்ஙனம் பசுவாகச்சொல்லியவென்னையெனக்கூறியொழித்து எல்லாச் சங்கைகளு நீங்கித்தெளிவு பிறத்தற்கேதுவாய்த் தொகுத்தொரு வார்த்தையினுணர்த்து வான்புகுந்து "சர்வேகர்ம" என்றருளிச்செய்தார். இதன்பொருள்

ஆன்மா அங்ஙனம் இருதன்மைப்படுமாறு எங்ஙனமென்று ஐயுறுக கேள். எல்லாப் பொருளின் றன்மைகளும் ஆன்மாவுக்கு உளவாம். அஃதெங்ஙனமெனின் ஆன்மா யாதனை யாதனைப் பற்றினான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந் தன்மையுடைமையான் அதுவதுவாயே நிற்பன்; என்று இங்ஙனம் ஆன்மாவை யறியுமாறு தொகுத்துக் கூறினுங் கண்டுகொள்ளென்பதாம்.

இங்ஙனம் தொகுத்துணர்த்திப் பின்னும் இவ்வா[றி]யும் ஆன்மஞானத்தின் பெருமையும், அதனாற் பெரும்பேறும், அதனை யறிதற்கு உபாயமும், அஞ்ஞானது பெருமையும் விரித்துக்கூறி யிதற்கு மேற்சொல்லப்பாலது சிறிதுமில்லையாகலான் மனோ விகற்பங்களையொழித்து இங்ஙனந் தன்னுண்மையறிந்து உபாயங்களைச்செய்வோனிங்கே சீவன்முத்தனாய் அகம்புறமெங்கும் வியாபித்துத் தற்றருமதருமியாய்த் தற்றருமமெனப்பட்ட முற்றுணர்தல் முதலிய வெண்குணங்களுமுடையனாய் அங்ஙனஞ் சிவத்துவத்தைப்பெற்றுச் சிருட்டிப்படுந்தன்மை முதலியனவின்றிச்சிவசமமாவன். இத்தன்மையுடையானுக்குத் தபஞ்செபந் தியானம் பூசைமுதலியன வொன்றும் வேண்டாம். சத்தியஞ் சத்திய முக்காலுஞ்சத்தியம். இதற்குமேலறியற்பாலன வொருபொருளுமில்லையென வலியுறுத்திப் பின்னும் ஆன்மா வெல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்குமாற்றைப் பூதான்மா முதலாக வகைப்படுத்து விரித்து இன்னுங் கூறுதுங் கேட்பாயாகவென்றெடுத்துக்கொண்டு பூதபரிணாமமாகிய வுடம்பினியல்புகளும், ஆன்மா அவ்வுடம்பைப்பற்றியவழிப் பூதான்மாவென நிற்குமாறும், அகத்தின்கண்ணவாகிய வாக்குகளினியல்பும், ஆன்மா அவற்றைப் பற்றி அந்தரான்மாவென நிற்குமாறும், பூதமுதலிய தத்துவங்களினியல்பும், ஆன்மா அத்தத்துவங்களைப்பற்றியவழி தத்துவான்மாவென நிற்குமாறும், அத்தத்துவங்களுள்ளும் ஆன்மா எந்த எந்தத் தத்துவங்களைப் பற்றினான் அந்த அந்தத் தத்துவமயமேயாய் நிற்பனென்பதூஉம், ஆன்மாப் போதத்திருத்துவமெய்திப் புருடதத்துவமென நிற்குமியல்பும்; அங்ஙனம் புருடதத்துவமாய் நின்று பிரகிருதி குணங்களைப்பற்றி யின்பதுன்பங்களை நுகரும்வழிச் சீவான்மாவென நிற்குமாறும். சுரர் நரர் விலங்கு புள்ளுத் தாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வம் மந்திரங்களுளவெனவும், தாவர சங்கமங்களுள் மந்திரங்களான் அதிட்டிக்கப்படாத வுயிர்களில்லையெனவும், மந்திரங்களை யுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவும், இவ்வாறுமந்திரங்களினியல்பும், அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாப்படிகம்போல அவ்வம்மந்திரமயமேயாய் மந்திரான்மாவென நிற்குமாறும், தன்னின் வேறாகிய விவ்வைவகைப்பெயரு நீங்கியவழி மேற்கூறிய அத்துவித பாவனையாற் பரமான்மாவென நிற்குமாறும் விரித்துத்தொகுத்துங்கூறி ஆன்மாச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்குமென மேற்கூறியதனை மீளவும் வலியுறுத்தி இவ்வறுவகையுள் ஏனையவெல்லா முபாதிபற்றிச் செயற்கையாதலும், அத்துவித பாவனையாற் பரமான்மாவென நிற்றல் சித்தென்னுஞ் சாதிப் பொதுமைபற்றியியற்கையாதலுந் தெரித்துணர்த்தி யிங்ஙனமாகலான் அத்துவித பாவனையுடையோன் ஞானக்கண்ணாற் சிவனை ஆன்மாவிற்கண்டு முழுதும்வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையனாய் அவ்வப்பொருளியல்பெல்லாமறிந்து மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று முடிவுகாணில்லாப் பேரின்பத்தைப் பெறுவனென முடிந்தது முடித்துக்காட்டி யிங்ஙனஞ் சீகண்டருத்திரநாயனார் அறுமுகக்கடவுளுக்குச் சருவஞானோத்தரத்தின் ஞானபாதஞ் செவியறிவுறுத்தருளினார். இன்னும் இதனை யீண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க.



இவ்வாகமத்து விதத்தினை வலியுறுத்திச் சிவனோடொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்ம ஞானமொன்றுமே யப்பிரமேயமாய் ஒன்றோடும் உவமிக்கப்படாது நின்ற அச் சிவனை யறிதற்குபாயமென்றும், அங்ஙனம் பாவிக்கவே யச்சிவனோடொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவனென்றும், அசுத்தப்பொருளோடொற்றுமைப்பட்டு நின்ற ஆன்மாச் சுத்தப்பொருளோடொற்றுமைப்பட்டு நிற்குமா றெங்ஙனமென்னு மைய நீக்குதற்குத் தொகுத்தொரு வார்த்தையாற் கூறுதுமென் றெடுத்துக்கொண்டு ஆன்மா எதனை யெதனைச் சார்ந்தான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாய் அதுவதுவாய் நிற்பனென்றும், இங்ஙனமாகலாற் சிவனோடொற்றுமைப் பட்டு நிற்புழிச் சிவன் குணங்களாகிய எண்குணங்களுந் தன் றன்மையாகக்கொண்டு சிவனேயாய் நிற்பன். இஃதே சிவத்துவத்தைப் பெறுதலென்றும், இதற்கு மேலறியற்பாலன வொரு பொருளுமில்லை. முக்காலுஞ் சத்தியமென் றுவலியுறுத்தியும், ஆன்மா எவ்

லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றை யின்னும் விளங்கக் கூறுது மென் றெடுத்துக்கொண்டு பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, மந்திரான்மா, சிவான்மா, பரமான்மாவென அறுவகைப்படுத்தி அவ்வவற்றிற் கூடியவழி யவ்வப்பெயர் பெற்று அது வதுவாய் நிற்பனென ஆண்டாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தை யுவமை கூறியும், இங்ஙனம் ஏனையாகமங்கள்போலப் பொருள் கவர்ச்சிப்படுதற்கு இடங்கொடாதவண்ணம் அறுமுகக்கடவுண் மாட்டு வைத்த கருணை மிகுதியானுங்கையினெல்லிக்கனிபோல் ஆன்மாவினியல்பு விளங்க வுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி யெல்லா வாகமங்களினு மிது சிறந்ததென்பது தோன்றச் சருவஞானோத்தர மெனப் பெயருமிட்டருளிச் செய்த சிகண்டருத்திரக்கடவுளின் றிருவுளக்குறிப்பிங்ஙனமென்க. இவ்வான்ம இயல்பு திராவிட மகாபாடியத்தில் ஆறஞ்சூத்திரத்தினின்றுஞ் சுருக்கி எடுத்து எழுதப்பட்டது. இன்னும் இதன் விரிவை அப்பாடியத்திற் காண்க.

ஆன்மா மும்மலங்களு நீங்கிச் சிவன் குணங்களாகிய எண்குணங்களையும் பெறுதலால் தன்னிடத்தில் சுப்பிரகாசமாய் விளங்குதலென்னுஞ் சிவத்துவபூர்த்தி விளக்கமாகிய சிவானந்தத்தைப் பெறுதலே ஆன்மாவுக்கு சொரூப லக்கண மெனப்படுஞ் சிறப்பியல்பு.

ஆன்மா அநாதியே ஆணவமலத்தோடு கூடி அறிவின்றி நிற்றலால் அறிவு விளங்குதற்பொருட்டு சூழ்ச்சித் துணைவராகிய அந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிர முதலிய ஐந்தவத்தை அடைதல் தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல்பு. ஆக இருவகையியல்பும் கண்டுகொள்க. புத்திதத்துவத்தி லுள்ளதான சத்துவகுண விளக்கமே சுகமும், ரசோகுண விளக்கமே துக்கமும், தமோகுண விளக்கமே மோகமுமாமென்க.

சம்சாரத்தில் தனக்கு வேறான புத்தி தத்துவத்தி லுள்ளதாய் தன்பாட்டு விளங்குஞ் சத்துவகுண பூர்த்தியே போகானந்தமல்லது வேறில்லை யென்பது சர்வாகம சம்மதம். ஆகலால் முத்தியினும் தனக்கு வேறான அநாதிமுத்த சிவத்தி லுள்ளதாய்த் தன் கண் அத்துவித சம்பந்தமாய் விளங்குஞ் சிவசாட்குண்ணிய பரிபூர்த்தியே மோக்ஷாநந்தம். இங்ஙனமாகவில் சிவசாட்குண்ய சொரூபசிவத்து



வம் ஆன்மாவில் அத்துவிதமாய் மேலிட்டு விளங்கும் பொருட்டே தீக்ஷையில் ஆன்மாக்களைப் பிராசாத மார்க்கமாகக்கொண்டு சென்று துவாதசாந்தத்தில் அநாதிமுத்த சிவனிடத்தில் யோசித்து, பின்னர் சிவசாட்குண்ணியங்களை ஆன்மாவில்தலைக்கூட்டப்பண்ணி ஒவ்வொன்றிற்கு மும்மூன்றாகுதி செய்தல் வேண்டிற்று. இவ்வாறன்றி ஆன்மாவிற்கு சிவ சாட்குண்ணியங்களின் வேறாக சாட்குண்ணியந் தனியே யுண்டென்று ஓராகமமும் உரைத்திலது. அத்துவித சொரூபம் சிவஞானமாபாடியத்துள் விஸ்தாரமாக எடுத்துக்காட்டியுரைக்கப்பட்டது. அதையும் சுருக்கி யுரைப்பாம்.

அத்துவிதமென்னுஞ் சொல்லின் நகரம் அன்மை, இன்மை, மறுதலை என்னு மூன்றினுள் ஒன்று பயக்கும். அவற்றுள் இன்மைப் பொருள்கொண்ட மாயாவாதி இரண்டின்மை யொரு பொருளன்றி யிரண்டு முதலியவா யெண்ணப்படும் பொருள்களின் இல்லாமையா னத்துவித மென்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதே யாமெனவும், ஒரு பொருளாயினுங் குணகுணியின் வேற்றுமைதோன்ற நிற்பின் கேவலம் ஒன்றாதலின்மையின் அத்துவித மென்பது உபசாரச் சொல்லாய் முடியுமாகலிற் றன்னின் வேறொருபொருளுமின்றித் தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பரப்பிரமப்பொருளென்பது அத்துவிதமென்னுஞ் சொல்லிற்குப் பொருளெனக் கோடலின் அவர் கேவலாத்துவிதிகளெனவும் வழங்கப்படுவர்.

இராமாநுஜர் சிவாத்துவித சைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைபற்றி யொன்றெனப் பொருள்கொண்டு சத்தி சங்கற்ப முதலிய குணங்கள் பரம் பிரமப்பொருட்கு உளவென்று உபநிடதங் கூறுதலானும், அவை செயற்கையென்றற்கு ஓரியையின்மையானும், பசுபாச வுண்மையு முபநிடதங்களினோதலானும், அவையொடு முரணிக் கேவலாத்துவிதமெனக் கோடல் பொருந்தாமையின் தன்னோடு இயைபுடைய பசுபாசங்களானுந் தன் குணங்களாகிய சத்தி சங்கற்ப முதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரம் பிரமம் இரண்டில்லை, ஒன்றென்பதே யத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலின் அவர் விசிட்டாத்துவிதிகளென வழங்கப்படுவர்.

பேதவாதிகள் மறுதலைப் பொருள்பற்றி யிரண்டன் மறுதலையாகிய வொன்றெனப் பொருள்கொண்டு அங்ஙனங் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது முண்டென்றற்கு இழுக்கின்மையின் அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளேபடுமென்று போவர்.

அவரெல்லாம் அச்சொற்கு ஒன்றே பொருளெனக் கொண்டு தத்த மதங்களோடு முரணாமைப் பொருட்டுக் கேவலம் விசிட்டம் மறுதலை யென்னும் அடைகூட்டி யிடர்ப்பட்டுப் பொருள்கொள்வர். அவருள் மாயாவாதி கூறுங் கேவலமும், பேதவாதி கூறும் மறுதலையுஞ் சுருதியோடு முரணுதலினீண்டைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசிட்டம் பொருந்துமாயினும் அத்துவிதத்திற்குப் பொருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக் கூறவமையும். அவ்வாறின்றி அத்துவித மென வுய்த்துணர வைத்தோதல் வேண்டாமையானும் ஒன்றெனப் பொருள் கொள்ளின் மகா வாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவித மென்றது பற்றி ஆண்டொரு பயன் படாமையானுமென்க. மற்றென்னையோ அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனில், சித்தாந்த சைவருரைக்குமாறு காட்டுதும். அது நீயாகின்றாயெனவும், அது நானாகின்றேனெனவும், அது இதுவாகின்றதெனவும் மூவிடம் பற்றி நிகழுந் தத்துவமசி முதலிய மகா வாக்கியங்களைக் கேட்ட வழி அதுவென்பது ஒரு பொருள் நீயென்பது ஒரு பொருளாகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளாமாறு யாங்ஙனமென்றெழும் ஐய நீக்குதற்கு எழுந்ததாகலின் அதுவிதுவாதற்கேதுவா யவ்விரண்டிற்கு முள்ளதாகிய சம்பந்த விசேடமுணர்த்துதலே அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருளென்றுணர்ந்து கொள்க.

ஆன்மா பெத்தத்தில் சிற்றறிவும் பரதந்திரமு முடையவன் என்றும், முத்தியில் முற்றறிவும் சுதந்திரமு முடையவன் என்றும், முத்தியிலும் சிற்றறிவும் பரதந்திரமுமுடையவன் என்றும், முத்தியில் ஆன்மா பலவிதத்தாலும் அடிமை யென்றும், ஆன்மா முத்தியில் சிவனைப்போல எண் குணங்களையும் பெற்றுசிவ சமமாவன் என்றுங் கூறுகின்ற சுருதிகளின் தாற்பரியம் என்னை யெனின்:



சிவனுடைய ஞானக்கிரியைகளுக்கு சர்வ வஸ்துக்களிலும் முற்றும் வியாபகத்துவம் பிரசித்தம். ஆன்மாவின் ஞானக்கிரியைகளுக்குப் பற்றும்பதார்த்த மாத்திரையே வியாபகத்துவம். ஆதலின் முற்றும் வியாபகமாகுஞ் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்கு முத்தான்மாக்கள் பெத்தான்மாக்கள் சடவஸ்துக்கள் சர்வமும் விடயமேயாம். அங்ஙனமன்றி ஸ்படிக[illegible]சார்ந்ததன் வண்ணமாகுந் தற்பாவ பாவமுடைய ஆன்மாவினது சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்குத் தம்மாற் பற்றப்படும் பதார்த்த மாத்திரமே விடயமாம். இனிப் பெத்தகாலை மலத்தாற் றடையுற்றுக் கலாதிகளான் ஏகதேசத்தில்விளங்கி உபாதியோடு கூடினவாய் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கருத்திருத்துவங்களாம் ஆன்மாவின் ஞானக்கிரியைகள் அழுக்குப்போயவழி படத்திலுள்ள வெண்மை படமுழுவதும் விளங்குமாறுபோல மல நிவிர்த்தியான பின்பு ஆன்ம வியாபக முழுவதும் உபாதியில்லனவாய்ச் சர்வதோமுகமாய்ச் சர்வதாபிவியக்தமாய் விளங்கும். இந்த அர்த்தத்தை யபேக்ஷித்துச் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்களும் சமானமேயாம்.

அற்றாயினும் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்கள் முற்றும் வியாபகமாதலின் சர்வ வஸ்துக்களையும் விஷயீகரிக்கும். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் அவ்வாறன்றி ஸ்படிகம்போலத் தற்பாவ பாவமாய் வியாபிக்குமாதலின் இவ்வொன்றனையே விடயீகரிக்குமல்லது மற்றை வஸ்துக்களை விடயீகரிக்கமாட்டா. இந்த அர்த்தத்தை யபேக்ஷித்து ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகள் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவங்களே யாவன வன்றிச் சமானமாகமாட்டா. இங்ஙனமாகலின் முத்தான்ம குணங்கள் சிவ குணங்கள்போல வியாபக மாத்திரையாற் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்களெனப்படுவன வன்றி சர்வபதார்த்தங்களிலும் வியாபகமும் எல்லாப் பதார்த்தங்களையும் அறிதலுமாகிய உபயவிதத்தானுஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களெனப்படா. பெத்தான்ம குணங்கள்போல உபய விதத்தானுங் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவங்களெனவும் படா. இவையே தம்முள் வேற்றுமையென்று நன்குணர்வாற்கண்டுகொள்க.

அல்லதூஉம் மலத்தினால் வருஞ் செயற்கை அஞ்ஞானமுந் தொழிலின்மையுமேயாம். கலாதிகளால் வருஞ்செயற்கை சிற்றறிவு சிறு தொழில்களாம். இவ்வாறே தற்பாவ பாவமாய் அறிவுந் தொழிலும் உபாதியோடு கூடினதென்பதற்கு ஒரு காரணமுமில்லை. பிரமாணமுமில்லை. ஆகலின் அறிவுருவாய்ச் சார்ந்ததன்வண்ணமாந் தன்மை ஆன்மாவிற்கு உபாதியில்லாத இயற்கையேயாம். அஃதறியமாட்டாது உபாதியோடு கூடினதென்பதெல்லாம் பிராந்திமூலமன்றி வேறு யாதாமென்றொழிக.

சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் முற்றும் வியாபகமுடைமையால் சர்வவஸ்து விடயமாம். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் தற்பாவ பாவவியாத்திமாத்திரையான் ஏகதேச வஸ்து விடயமாம். எனத் தம்முள் வேறுபாடுடையனவென்பதூஉம், ஏகதேசமாயறிதலுஞ் செய்தலுமுடைய பெத்தான்மாக்களை யபேக்ஷித்துச் சர்வ கர்த்தாவாகு முத்தான்மா உபயப் பிரகாரத்தானுஞ் சர்வஞ்ஞன் சர்வ கர்த்தாவாதலுடைச் சிவனை யபேக்ஷித்துக் கிஞ்சிக்ஞன் கிஞ்சித் கர்த்தாவேயாமென்பதூஉம் என்றுணர்க.

இனி சுவாதந்திரியமாவது என்ன? பிறவற்றினுடைய உதவியை அவாவாது இருத்தலுமன்று, 'கருத்தா கருமானுசாரத்தின்படி செய்வன்' என்றற் றொடக்கத்து வசனங்களானே கர்மாதிகளை யபேக்ஷித்துச் செய்தலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்.

இனி பிறருடைய இச்சைப்படி நடவாதிருத்தலுமன்று, ஆன்மாவின் இச்சையின்படி பயன் கொடுத்தலின், சிவனுக்கு சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்.

இனிப் பிறரால் பிரேரிக்கப்படாதிருத்தலுமன்று, விம்பாதிகளில் ஆவாகனாதிகளாற் பிரேரிக்கப்படுதலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்.

இனி பிறனுக்கு வசியப்படாதிருத்தலுமன்று, சிவன் அடியாருக்கு வசியனாதலின்.



இனி "யாதனை யாங்ஙனம் எண்ணிடும் அதனை அங்ஙனம்பண்ணிடும்" என்னும் நியாயத்தான் வேறொன்றோடுஞ் சேராததாய் தன் இச்சைப்படி நடத்தலே சுவாதந்திரியம். அதற்கு எதிர் மறைப் பொருளை பாரதந்திரியம் என்று நுணுகி நாடி அறிந்து கொள்க. ஆன்மாவிற்குச் சிவானுபவ விச்சையொன்றே வேறொன்றோடுஞ் சேராததாகிய சுவேச்சை. அதனோடுங் கூடவிருத்தலாகிய சுதந்தரத் தன்மை ஆன்மாவிற்கு இயற்கையாம். தன் இச்சைப்படி செய்யாதிருத்தலாகிய பாரதந்திரியம் பரமுத்தி பரியந்த முளதாகுஞ் செயற்கையாம். இவ்வாறன்றிச் சிவசமவாத பிசாச வேசமுற்றுச் சுவாதந்திரியப் பொருள் பேசிப் பிரலாபிப்பதெல்லாம் சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கப் பராபவங்களாமென்றொழிக.

இந்தச் சுவாதந்திரியமுந் தற்பாவபாவமாய்ச் சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மாவிற்கு முற்றும் வியாபகமுடைய சிவபிரானது சுவாதந்திரியத்தை யபேக்ஷித்துப் பாரதந்திரியமேயாகலின், ஆன்மாவிற்குச் சிவன் அனுகூலப் பிரேரகனாதல் வேண்டப்படும். அல்லதூஉம், முத்தான்மாக்கள்பாற் சிவனும் செயற்பாலது ஒன்றுமிலதெனின் அறியற்பாலதுமில்லையெனப்பட்டுச் சிவன் அவர் தம்மை அறிவானுமல்லனென்று முடியும். இனி மலமின்மையின் முத்தான்மாக்கள் மாட்டுச் செய்யுந் தன்மையொன்றையும் காண்கிலமாலெனின், அது சித்தாந்தக்கண்ணுடையார்க்கன்றி மற்றையவர்களுக்குப் புலனாகாதென்க. சிவானந்தம் சிவனிடத்தில் உள்ளதாகலின் ஆன்மா அதனை அநுபவிக்கற்பாலனென்று மேற்கூறினும்; ஆகலின் அந்தச் சிவானந்தானுபவத்தில் நிருபாதிக விச்சையுடைய முத்தான்மாவிற்கு அந்த வேறொன்றோடுஞ் சேராததாய்த் தன் இச்சைப்படி நடத்தலாகிய சுவாதந்திரியத்திற்கு அனுகூலமாக அதனைக் கொடுத்தருளாநிற்குங் கர்த்தவ்யதை சிவனுக்கு முத்தியினுளதாமாறு, சித்தாந்தக்கண்ணுடையார்க்கு இனிது புலனாமென்றொழிக. பெத்தகாலத்தில் சிவபெருமான் அந்தத் தன் இச்சைப்படி நடத்தலாகிய ஆன்மாவினது சுவாதந்திரியத்திற்கு மலானுசாரியாய் நின்று பிரதிகூலஞ்செய்து போதலின், ஆன்மா பெத்தத்தில் மலோபாதியினாற் பரதந்திரனானான்.

சிவபிரான் மலோபாதி நீங்கு முத்திக்காலத்தில் அந்தவிச்சைக்குப் பிரதிகூலஞ் செய்தலைவிட்டு அநுகூலஞ்செய்து வருதலின் இயற்கையாயுள்ள அந்தச் சுவாதந்திரியம் வியத்தியாய்ச் சிவானந்தாநுபவ முற்றுச் சுதந்திரனாம். முத்தியின்கண் சிவன் அநுகூலப் பிரேரகனாதலால் ஆன்மாவிற்கு மீண்டுச் சுவாதந்திரிய பங்கம் வருமென்றொழிக. சுருதிகளில் முத்தியின்கண் சிவன் ஆன்மாவினிடத்தில் பிரேரகனல்லன், முத்தான்மாவும் பிரேரியனல்லன் என்று கூறியிருக்கின்றனவே யெனின், அந்த வசனங்களுக்கு முத்தியின்கண் சிவன் ஆன்மாவிற்குப் பாரதந்திரியப் பிரயோசனமான பிரதிகூலப் பிரேரகனல்லன்; முத்தான்மாவும் பிரதிகூலப் பிரேரியனல்லனென்பதே நிச்சயப் பொருளென் றறிந்து கொள்க.

முத்தான்மாவிற்குச் சிவானந்தத்தினை அநுபவித்தல் வேண்டுமென்னும் இச்சை நிருபாதிகமாய் இடையீடின்றி நிகழ்தலின், அதன்கண் இடையறவுபடாப் பிரவிருத்திமானாகின்றான். இதர விடயங்களில் அவ்விருப்பில்லாமையின் அவைகளிற் பிரவிருத்திமானாகின்றிலன். சிவனுக்கும் பெத்தத்திற் கன்மாநுசாரமாகவும், முத்தியில் நிருபாதிக ஆன்மா இச்சாநுசாரமாகவும், ரக்ஷித்தல் வேண்டுமென்னும் கிருபையே இடையீடின்றி நிகழ்தலின், அந்தச் சுவேச்சாநுசாரமாகப் பிரவிருத்தி செய்தருளா நிற்பன். இக்கருத்து நோக்கியே "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" எனவும் "கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்" எனவும் "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லா, லலமில னொடொறு நல்குவானலன்" எனவும்,

> "சார்ந்தாரைக் காத்தல் தலைவர்கடனாதல்
> சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
> தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
> ஆர்ந்தார்முன் செய்வினையு மாங்கு"

எனவும் சுருதிகள் கூறியவா றென்க. இங்ஙனமாகலின் சிவனுக்கு முத்தான்மாக்களோடு முற்றொப்புச் சாமியம் எவ்வாற்றானும் பொருந்தாமை யுணர்க. சர்வ ஞானோத்தரத்தில் "ஆன்மா தற்றரும தருமீ" எனப்படுதலின் அதுபற்றி முற்றொப்புச் சாமியம்



போல்வதல்லது பொருட் சுபாபவத்தானே முற்றொப்புச் சாமியமெய்தாதென் றுணர்க. இன்னும் முற்றொப்புச் சாமியமெனின் சிவனைப் பந்திக்கமாட்டாத மலம் ஆன்மாவைப் பந்திப்பது யாங்ஙனம்? இனி ஒரு சூரியனை மறைக்க மாட்டாத அந்தகாரம் மற்றொரு சூரியனையும் மறைக்கமாட்டாது. ஒரு கண்ணினை மறைக்கும் அந்தகாரம் எல்லாக் கண்களையும் மறைக்கும்.

இங்ஙனமாகலின் ஆன்மாவிற்கு அநாதி மலபந்தம் இன்று என்றாயினும், அல்லது சிவனுக்கு அநாதி மலமுத்தி இன்று என்றாயினும் கூறல்வேண்டும். அற்றன்று தாமிரமும் கனகமும் சமசாதியாகவும் தாமிரத்திற்கே காளிமமுண்டு. கனகத்திற்குக் காளிமமின்று. இங்ஙனமாதலின் எனின், அவ்விரண்டும் பார்த்திவ விகாரமாகலின் பிறந்த நிலவேறுபாட்டானே அவை அவ்வாறாகா நிற்குமென்றும், ஆண்டுக்காரண பேதம் உளவென்றும் எடுத்தோதப்படும். ஈண்டும் அங்ஙனங் காரணபேதமுளவென்று எடுத்தோதல் வேண்டும். இனி ஈண்டும் அவ்வாறு காரணபேதமுண்டென் றெடுத்தோதலுறின் முற்றொப்புச் சாமியங்கிடைப்பதின்றாமென்க.

அற்றேல் கனக தாமிரங்களுக்குக் காளிமபாவ பாவங்கள் அநாதியாங்கள் என்று ஆகமங்கள் எடுத்தோதுபவாலோ வெனின், அநாதி வேறுபாட்டால் உள்ளதென்பது பிரத்தியக்ஷ சித்தமாகலின் அதனை ஆகமத்தால் அபலாபனஞ் செய்தல் சேராமையின் அவ்வாகம வசனங்களுக்குத் தாற்பரியம் அதுவன்று; வேறுண்டென்பது சித்தித்தது. இனி அக்கருத்துச் சித்தாந்த சைவர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படும் பான்மைத்தன்று. இனி இவ்வாறன்றி ஆன்மாத் தன்னுடைய ஞான விளக்கத்தைத் தானநுபவிப்பனெனின் பிரமாணப் பிரமேய சாங்கரிய தோஷமுதலிய வருமென்றொழிக. இனி நேத்திர படலம் நீங்கினும் நேத்திரத்துக்கு விஷய தரிசனத்தில் ஆதித்த விளக்கம் ஆவசியம் வேண்டும். அந்தச் சகாயமில்லாத வழி ஆதித்தப் பிரகாசத்தினாற் சத்தி கெட்டடங்கிக் கிடக்கும் அந்தகாரம் மறிந்தும் மேலிடுதற் கையமின்று. இனி அந்தகாரஞ் சத்தி கெட்டடங்கிக்கிடத்தல் நேத்திரப் பிரகாசத்தினானன்று; தாட்டாந்திகத்தினும் இங்ஙனமாதலின் சிவப் பிரகாசத்

றினும் மலமறைப்பு நீங்கினும் ஆன்மாவிற்குச் சிவவிளக்க விருப்பு ஆவசியமென்பதூஉம் கண்டுகொள்க.

இதனுல் முடிந்த பொருள் யாதெனின் ஆன்மாவிற்குப் பெத்தத்திற் பசுபாரதந்திரியம், முத்தியில் அப்பாரதந்திரியத்தை விடுத்துச் சுவாதந்திரிய மெனப்படுஞ் சிவபாரதந்திரிய மென்பதாம். பாரதந்திரியம் தன்வசப்படாது பிறர்வசப்பட்டிருத்தல். இக்கருத்து நோக்கியே

> ஆட்டுந் தேவர்தம் விதியொழித் தன்பா
> லையனேயென் றுன் னருள்வழி யிருப்பேன்
> நாட்டுத் தேவரு நாடரும் பொருளே
> நாதனேயுனைப் பிரிவுறு வருளைக்
> காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
> காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
> சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
> திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. என்றார் பெரியார்.

ஆட்டுத்தேவர்—பஞ்சகிருத்தியஞ் செய்கின்ற பஞ்சகருத்தாக்கள்.

நாட்டுத்தேவர்—புவனபதிகள்.

சேட்டைத்தேவர்—நாதம் விந்து சத்தி சிவம். சேட்டை—பிரேரித்தல்.

பசுபாரதந்திரியத்தினியல்பு கூறுவார் ஆட்டுந்தேவர்தம் விதியொழி என்றும், அதன் வசப்பட்டிருத்தல் கூடாதென்பார் ஒழித்தென்றும், சிவபாரதந்திரியத்தினியல்பு கூறுவார் ஐயனே உன் அருள் வழியிருப்பேனென்றுங் கூறியருளினர்.

"அதனின் நிலாவொன்றுபலவாறே தொழும்பாகுமங்கு" எனவும் "அவையுடைமையாளாநாமங்கு" எனவும்

"எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றாவுயிர்களெனறுனும், செவ்வி தினி னுளம் புகுந்து செய்தியெலா முணர்ந்திட்டிடப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப, விவ்வுயிர்கடோற்றும் போதவனையின்றித் தோற்று விவற்றினுக்கம்முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு, மவ்வுயிர்போ னின்றிடவ் ஞதலாற மலடியையகன்று நிற்பதெங்கேயாமே" எனவும்



அதனின் ஈறு அலா ஒன்றி—அப்பரம் பொருள்போல் அழிவின்றி நித்தமாய உயிர்கள். அங்கு—வீடுபேற்றின் கண்ணும். பலவாறே தொழும்பாகும்—பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம். நாவவிடத்தும் என்றது பெத்தமுத்தி யிரண்டினும் என்க.

"சம்பிரதகுளிகையினுற்களிம்பற்றப் பொன்னுஞ் செம்பொனுடன் சேருமலஞ் சிதைத்தாற்சிவ, னம்பனுடன் கூடுமெனிற்பொன்போலல்ல னற்குளிகை போல வரனனுகுமலம்போக்கி, யம்பொனடிக்கீழ்மைப்ப னருங்களங்க மறுக்கு மக்குளிகை தானும்பொன் னாகாது, மும்பர்பிரானுற்பத்தி யாதிகளுக்குரிய வுயிர்தானுஞ்சிவானுபவமொன்றினுக்கு முரித்தே."

"சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்தான்றுமெனிற் சிவனருட்சித்திவனருளைச் சேருஞ்சித்தவன்றான், பவங்கேடு புத்திமுத்திபவனுஞ் சித்திவற்றிற் படியுஞ் சித்தறிவிக்கப்படுஞ் சித்துமிவன்று, னவன்றனையறியுஞ்சித்தாதலினுலிரண்டு மணைந்தாலொன்றாகாதநந்நிழுமாயிருக்கு, மிவன்றனும் புத்தியுஞ்சித்தலனுமோபுத்தியிறவசித்தல்றிடிலவனுக்கினுமசித்தாமே" எனவும் சுருதிகள் கூறிய தூஉமென்க.

முத்தியில் உயிர்கள் பலவாற்றானும் அடிமையாதல் யாங்ஙனமெனின் கூறுதும். இருணீங்கிய வழியுங் கண்ணுக்குக்காட்சி ஞாயிற்றை யின்றியமையாதவாறு போல, மலநீங்கிய முத்தி நிலையினும் ஆன்மாவுக்கு அறிவுவிளக்குங் கருவியாய் உடனின்றறிவிக்குமுதல்வனை யின்றியமையாதவாறும், கண் படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன் வண்ணமாயன்றி முதல்வன் போலத் தனித்து நிற்கு மியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாதலுரிமையின்றிச் சிவானுபவ மொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தாலறிவாகலால் விளக்கொளியுட் கண்ணொளிபோல் முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறு முதலாயினவாம்.

அற்றேல் முத்திநிலையில் ஆன்மாச் சிவமா மென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னை யெனின், வியாபகமாகியவுயிர் அவ்வியல்பிழந்து ஏகதேசப்பட்டுக் கீழ்ச்சென்று துன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய பாபமும், மேலேசென்று இன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய புண்ணியமுந் தளையே யாதலின், அவ்விரண்டையும் சிவபிரானை அருச்சித்தலென்னும் ஞான நூல்களை ஓதுவித்தல் அந்நூற்பொருளைத் தந்தது மகிழுட்பக் காரணமுணர்ந்து பிறர்க்கு உரைத்தல் ஆசிரியனை வழிபட்டு அந்நூற்பொருளைத் தாஞ் செவ்விதாகக் கேட்டல் சிந்தித்த லென்னும் ஞான பூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதல் உணர்வெனப்படும் அரத்தால் அறுத்துக் காரணமில்லாமையின் காரியமாகிய பூமி நரக சொர்க்கங்களிற் செல்லுதலாகிய ஏகதேசச்செலவும் இன்றாய், அப்பொழுதியவே அவர் காரணங்களின் வயத்தராதலின்றி இறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு சீவன்முத்தராய் பரசிவனீங்கியவழி ஆடையினது வெண்மை ஆடைமுழுவதும் விளங்கினாற் போலத்தமது வியாபகமெங்கணும் அறிவு விளங்கப்பெற்று, முற்றுணர்தல் முதலிய வெண்குணங்களும் உடையனாய் அங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருஷ்டிப்படுந் தன்மை முதலியனவின்றிச் சிவனைப்போலப் பஞ்சகிருத்தியஞ்செய்தலுமின்றிச் சிவானுபவமொன்றனை மாத்திரமனுபவித்து ஆ...போதமுங் கண்ணொளியும் போலத் தம்முள் அத்துவிதமாய் நிற்றலா மென்க.

இவ்வுண்மைகளைச் சிறிது மறியாது முத்திநிலையில் ஆன்மாச் சிவபிரானைப்போலச் சுதந்திர முடையனாய்ப் பஞ்சகிருத்தியஞ் செய்வனென்னுஞ் சிவ சமவாதிகள் கூற்றுச் சிறிதும் பொருந்தா தென்பதை நன்றாக ஊகித்துக்கொள்க.

அற்றேல் முத்தான்மாக்களும் பஞ்சகிருத்தியஞ் செய்திருப்பதாக நூல்களிற் கூறப்படுகின்றனவேயெனின் நன்று சொன்னாய். இரும்பைப் பிடித்து நிற்கின்ற அக்கினியாற் சுடப்பட்டதை இரும்பு சுட்டது என்றாற்போல முத்தான்மாக்களைப் பிடித்து நிற்கின்ற சிவபெருமான் செய்தருளிய பஞ்சகிருத்தியங்களை முத்தான்மாக்கள் செய்தனவாகக் கூறப்படுதல் ஆதார இலக்கணை யென்க.



அங்கியும் ஒன்றிற்றங்கி நின்றலல்லது தன்றொழினடத்தாதாகலின் அதுபோல முதல்வனும் உயிரைப் பிடித்து நின்றே எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க.

இந்த விசாரமெல்லாஞ் சீவன் முத்தியவத்தையிலேயே. பர முத்தியிலே சிவமென்றும் ஆன்மாவென்றும் பிரிந்து காணப்படுவதொன்றில்லை. ஆகையால் முத்தான்மாக்கள் கிருத்தியம் பண்ணுவார்கள் பண்ணமாட்டார்கள் என்கிற விசாரத்துக்கு இடமில்லை.

இவ்வுண்மை யுணராததூஉமன்றி விஞ்ஞானதீக்கையின் உடல் பொருள்களோடொப்பச் சற்குருவன் கையிற்றானஞ்செய்தளித்துஞ், செய்தளித்த பொருளென்றறியுமறிவு சலியாமைப் பொருட்டு நாளுநாளுஞ் சிவபூசையிற் செபகன்மங்களோடொப்பச் சிவோதாதா வென்னு மந்திரமோதி யான்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூநீரோடுந்தானஞ் செய்தளித்துந் தான் சுதந்திரனே சிவனுடைமையல்லனெனப் பிணங்கிப் பரம சற்பாத்திரத்திற்றானஞ் செய்த பொருளை யபகரிக்க நினைக்கு நினைவுடையோரோடு பேசினும் உய்தியில்லாததோர் கொடிய பாவமா மென்றொழிக.

இனி உடல் பொருளாவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனத் தானஞ் செய்தளித்தலின் முன்னிலையாற் றன்னுடைமையாய் நின்ற விம்மூன்றுந் தானஞ் செய்தபின் தனக்கின்றிச் சிவனுக் குடைமையாயவாறு பெற்றாம். பெறவே ஆண்டுப் பொருளென்றது உடம்பாலொற்றுமை யுடைத்தாய்த் தன்னுடனாகக் கிடந்த உடல் வினையேயன்றி முன்பே தன்னாற் றுறக்கப்பட்டொழிந்த புறப் பொருளன்றென்பது தானேபோதருதலானும், அவ்வாறன்றி ஆண்டுப்பொருளென்றது எல்லாவற்றிற்கும் பொதுவெனக் கொள்ளினும் உடல் வினையும் அவற்றுளடங்குதலானும், அங்ஙனம் முதல்வனுக்கென்றீந்தவுடல் வினையை மீளவுந் தானுகரக் கருதுவோன் அவ்வாறு தானஞ்செய்தளித்த ஆன்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருதுஞ் சிவசமவாதியோடொப்பவனாகலின் முதல்வனுக்கென்றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோர

கிழக்காதலறிக. இன்னுந் தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக்குடைமையாக அந்தவழி யவ்வுடம்பிடமாக வரும் வினைப்பயனைத் தான் நுகர்தற் கோரியை யின்மையுமறிக.

இன்னும் தானே தனக்குச் சுதந்திரமன்றிச் சிவனுக்குடைமைப்பட்டு [illegible] தான் மற்றொன்றனை நுகருமாறியாண்டையது தன்கண் தன்னாலளிக்கப்பட்ட பொருள் மூன்றும் முதல்வன் [illegible] கொண்டானென்பது.

"அன்றேயென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றேயனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" எனவும்,

"குறைவிலா நிறைவே கோதிலா வமுதே யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே, மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென் மனத்திடை மன்னிய மன்னே, சிறைபெறா நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறையுறை சிவனே, இறைவனே நீயென் னுடலிடங் கொண்டா யினியுன்னை யென்னிரக் கேனே" எனவும்

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே னியாது நீ பெற்றதொன் றென்பாற், சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் திருப்பெருந் துறையுறை சிவனே, எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய் யானிதற் கிலனொர்கைம் மாறே" எனவும்

"அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே, பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி, நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து, சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" எனவும்,

"என்றவுடற்கன்ம" எனவும், "என்றவுடற் பழவினைகள்" எனவும், "என்றவினை" எனவும், "என்று கொண்டா யென்னை" எனவும் ஓதிய வாற்றானறிக.



தன்னைத்தானஞ் செய்தலாவது: தான் சிவனுக்குப் பாதந்திரனென்றறிந்து அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யானாகி நிற்றலேயா மென்றுணர்க.

அஃதற்றால் மலவாசனை நீங்குதற் பொருட்டுத் தன்னைத் [illegible] செய்ததாகப் பாவித்தல் மாத்திரையே யாகலி னதுபற்றி யிழுக்கென்னையெனின், அங்ஙனமாக. அப்பாவனை போலியோ வுண்மையோவெனக் கடாயினார்க்கு உண்மை யெனிற் [illegible] க்கில்லை; போலியெனிற் பசித்தவன் உண்டாற்போல எத்துணைப் பாவகஞ் செய்யினும் பசி நீங்குதல் கண்டில மாகலின் அதுபோலப் போலிப் பாவனையால் மலவாசனை நீங்குமாறின்மையி னது வீண்டொழிலாய் முடியும். இன்னும் பாவனை போலி யென்பார்க்கு பாவனைவழி யவர்செய்யும் மந்திரங் கிரியைகளும் போலியாய் முடியும். முடியவே பாவனை முதன் மூன்றினு மவர் செய்யுஞ் சிவதீக்கையுஞ் சிவ பூசையுஞ் செபந்தியான முதலிய வெல்லா வாசாரங்களு மங்ஙனம் போலியாய்ச் செய்வது தமக்கானும் பிறர்க்கானும் பயன்படுமாறின்மையின் மாணாக்கரை வஞ்சித்துப் பொருள் கொண்டு தம்முடம்பை யோம்புதற் பொருட்டுச் செய்யு மாரவார மாத்திரையே யாமென்றொழிக. அற்றேற் கருடபாவனை செய்வோன் கருடனாதல் கண்டிலம். அப்பாவனையால் விடந்தீருதல் கண்டாமாகலின் போலிப்பாவனையும் பயன்றருமென்பது பெறப்படுதலானெனின் [illegible] அறியாது கூறினாய், மாந்திரிகன் றன்னுடம்பைக் கருடனாகப் பாவிப்பானல்லன்: மற்றென்னையோ வெனின், கருடனுக்கு அதிதெய்வமாகி நிற்கு மந்திர மூர்த்தியாகத் தன்னுண்மையைப் பாவிப்பான். அங்ஙனம் பாவித்த வழிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய ஆன்மா ஆண்டு அம்மந்திர ரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையி னதுபற்றிச் சங்கை யின்மை யுணர்க.

இன்னும் பாவனைகளும் உபாசனைகளுங் கற்பித்துக் கொண்டு செய்யும் போலி யென்றல் மாயாவாதி கூறுங் கூற்றாகலி னது சைவ சித்தாந்தத்திற் கேலாமை யறிக.

## இனி சாக்கிரமுதல் ஐந்தவத்தையாவன.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவாம். இவ்வவத்தை அடையு மிடங்களாவன:— நுதல், கண்டம், இதயம், நாபி, மூலம் என்பனவாம். ஆண்டாண்டு நிற்குங் கருவிகளாவன, முறையே, இந்திரியங்கள் பத்தும் சத்தாதிகளாகிய விடயங்கள் பத்தும், வாயுக்கள் பத்தும், அந்தக்கரணங்கள் நான்கும், புருடனொன்றும் ஆகிய கருவிகள் முப்பத்தைந்தும் [illegible]; இந்திரியங்கள் பத்து நீங்கின மற்றக்கருவிகள் இருபத்தைந்தும் சொப்பனத்திலும்; பிராணவாயுவும் சித்தமும் புருடனுமாகிய மூன்றும் சுழுத்தியிலும்; பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டும் துரியத்திலும்; புருடனொன்றும் துரியாதீதத்திலும் நிற்கும்.

இந்த ஐந்தவத்தைகளும் கீழ் நோக்கிச் சென்று ஒடுங்கு முறைமையும் மேனோக்கித் தோன்று முறைமையும்பற்றி இருவகைப்படும். அவற்றுள் ஒடுங்கு முறையது கன்மார்ச்சிப்புக் கேதுவாகலால் கீழ்ச் செலுத்தின் பிறவிக்கு வித்தாம். இது சகலத்திற்கேவலமெனப்படும். தோன்றுமுறையது கன்மநுகர்ச்சிக்கேதுவாகலால் பரம்பரையில் பிறவியுறுதற்குக் காரணமாய் மேற்படும். இது சகலத்திற் சகலமெனப்படும். இனி முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின்கண்ணேயும் சாக்கிரமுதல் ஐந்தவத்தையுளவாம். அவை கருவிகள் விடயங்களை யறியுஞ் செய்கைதோறும் அதி நுணுக்கமாயிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்ளப்படும். இவ்வைந்தனுள் சாக்கிரத்தில், சுத்தவித்தையும், ஈசுரமும், சாதாக்கியமும், சத்தியும், சிவமுமாகிய ஐந்து கருவியும் கலாதிகளைச் செலுத்தி நிற்கும். சொப்பன முதலிய நான்கினும் முறையே அவற்றுள் ஒவ்வொன்றொழிந்து ஒழிந்த கருவிகள் கலாதிகளைச் செலுத்தி நிற்கும்.

இனி ஒருவன் ஓர் பொருளை ஓரிடத்துப்போட்டுவிட்டுக் கலங்கி அவ்விடத்து மூர்ச்சித்திருத்தல் ஜாக்கிரத்தில் அதீதம். அந்த மூர்ச்சையிற் சற்றே பிராணவாயு இயங்குகை ஜாக்கிரத்தில் துரியம். அவ்விடத்து வைத்தோமென்று ஐயப்படுகை ஜாக்கிரத்தில்



சுழுத்தி. இதில் மனமும் பிராணவாயுவும் இயங்கும். அப்பொருளை இன்ன இடத்தில் வைத்திருக்கலாமென்று ஐயப்படுதல் ஜாக்கிரத்தில் சொப்பனம். இதில் இருபத்தைந்து கருவி தொழிற்படும். அப்பொருளிருக்குமிடத்துச் சென்று எடுத்தல் ஜாக்கிரத்தில் ஜாக்கிரம். இதில் முப்பத்தாறும் தொழிற்படும். இனி இருதயம் முதல் துவாதசாந்தமீறாகிய தானங்களிற் புறக்கரணம் உட்கரணங்களைப் பற்றியும் [illegible] பிரத்தியாகாரமுதல ஐவகைப்பட்டு நிகழும், யோகாவத்தையும் அதுபோல ஒடுங்கியும் தோன்றியும் அவ்வாறு பயன்தருவதன்றிப் பிறிதன்றெனக. இது சகலத்திற் சுத்தமெனப்படும். யோகபலத்தால் ஜாக்கிரதானத்திற்றான் காணப்பட்ட பிரவிர்த்திகளெல்லாமற்று அதின்வழி செல்லாமற் பிரத்தியாகாரத்தினை திரும்புதல் ஜாக்கிரம். மனத்தை வேறொன்றினும் செல்லாமல் நிறுத்துதல் சொப்பனம். இத்தாரணையில் இடமாக நின்று தியானஞ்செய்வது சுழுத்தி. சமாதியிற் றற்சொரூப தரிசனஞ் செய்வது துரியம். அஃதாவது கேவல மறிவுமயமாயிருத்தல். இந்த ஞானத்துக்கு மேலாகிய சிவனைத் தரிசித்துக்கொண்டிருப்பது துரியாதீதம். சகலத்திற் சுத்தமெனப்படும் யோகாவத்தை ஐந்தும் கண்டுகொள்க. இதற்கு வேறொரு விதமாகக் கூறுவதனு முண்டு. அதாவது:—பீசாக்கரத்தினுச்சாரம் ஜாக்ரம். விந்து மாத்திரோச்சாரம் சொப்பனம். நாதமாத்திரோச்சாரம் சுழுத்தி. சத்தியந்தோச்சாரம் துரியம். சிவாநந்தம் துரியாதீதம். இதற்கு முறையே தானம் இதைய முதலெனவறிக. இன்னும் இதனை விரிப்பிற் பெருகும். ஆகமங்களுட்காண்க.

இனி இவையேயன்றி, கேவல சகலங்கள் நீங்கிய சுத்தத்திலும் ஐந்தவத்தையுளவாம். அவையாவன:—புறக்கரண முட்கரணமாகிய விரண்டினுங்கூடியிருக்கிற தன்னை யறிவது நின்மல ஜாக்கிரம். புறக்கரணத்தை விட்டு உட்கரண வியாபாரத்துடன் கூடித் தன்னை யறிகிறது நின்மல சொப்பனம். அந்த உட்கரண வியாபாரமும் போகங்களில் விருப்புமின்றி நிச்சலமான மனத்துடன் கூடியிருப்பது நின்மலசுழுத்தி. அந்த மனத்தையும் விட்டு சித்தாகிய ஞானத்துடன் கூடியிருப்பது நின்மலதுரியம். நிரஞ்சனமாய் பாசபசு ஞானங்களுக் கெட்டாததாய் விளங்குகின்ற சிவ வியா

பகத்தில் வியாப்பியமாய்க் கலந்து நிற்றல் நின்மலனாகிய ஆரியர்களும் இவைகள் ஒன்றுக்கொன்று சூக்குமமாயிருக்கு முறைமை சற்குருவினுபதேசத்தால் இனிது விளங்கும் அஃதெங்ஙனமெனின் சமவியாபக வஸ்துக்களுக்கு வியாப்பிய வியாபகபாவங் கூடமையான் யாதொன்றுமெனின், சமவியாபகமாங் கண்ணொளியும் விளக்கொளியும் ஆன்மாவின் அறிவிலக்குக வேறுபாட்டால் வியாப்பிய வியாபக பாவமுளவாயிருத்தல்போலுமெனக. அற்றேல் இரண்டு வியாபக வஸ்துக்களுக்குச் சையோகசம்பந்தம் இலாமையின் ஆண்டுச் சம்பந்த விசேடம் என்னைகொலெனின் அது ஆசிரியர் சிவஞானயோகிகளால் சிவஞானமாபடியத்துள் விரித்துக்காட்டப் பெற்றுள்ளது. அதனையும் சுருக்கியுரைப்பாம்.

அத்துவிதமென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம் ஐக்கியமோ தாதான்மியமோ சமவாயமோ சையோகமோ ஒருபமோ வேறோவெனக் கடாயினார்க்கு ஆற்றுநீரும் கடனீருந் தம்மிற் சேர்ந்தாற்போலவும் குடாகாயமும் மகாகாயமுந் தம்மிற் சேர்ந்தாற்போலவும் அங்ஙனஞ் சேர்ந்தவழி யொருபொருளே யாகலின் ஒன்றெனவேயமையும்; அத்துவிதமென வுய்த்துணர வைத்தோதல் வேண்டாம். அன்றியும் ஒன்றுபவழி அதுவதுவாய் நின்றதிலாகிய வான்மாவினிலக்கண முத்திக்காலத்தில்லையெனப்பட்டு மூவாமாகலின் அது பொருந்தாமையானும் குணகுணிகட்குத் தம்மின் உளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மியமெனின் ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிப்பொருளாய் நிற்பதின்றி முதல்வனுக்குங் குணமாகாமையின் அவ்வாறியைதல் கூடாமையானும், தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறுஞ் சமவாயமென்பதொன்றின்மையானும், விரலும் விரலுஞ் சேர்ந்து நின்றாற்போலச் சையோகமெனின் அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருள்கட்குக் கூடாமையானும், யாதானும் ஒரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின் அது மகா வாக்கியப் பொருளை வலியுறுத்துதற்கெழுந்த அத்துவிதச் சொல்லிற்குப் பொருளாகாமையானும், சொரூபசம்பந்த மாத்திரையாற் சிவாநந்தத்தை யனுபவித்தல் கூடாமையானும், இவற்றின் வேறாயின்ன தென்றறியவாராத அநிருவசனமெனின் அங்ஙனங்கூறுதல் மாயாவாதி கூற்றாய்விழுவ



தாகலானும் அவையெல்லாமின்மைக் கேலாமையின் வேறுவிடுக்குமாறென்னையெனிற் கூறுதும்.

ஒருபொருளே பலபல அவயவிகளயாதால் குணகுணிகளாதல் வேற்றுமைப்பட்டிரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல விருபொருளே யதுவதுவா யொற்றுமைப்பட்டொன்றாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமுமெனத் தாதான்மிய சம்பந்தமிருவகைப்படும். அவற்றுள் முன்னையது தாதான்மியமென்றும், பின்னையது அத்துவிதமென்றும் முறையே வழங்கப்படும். அத்துவிதமென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாற்றான் வேறு பொருள் நிருமாறின்றி யன்மைப் பொருள்பற்றி யிரண்டென வேற்றுமைப்படாமையை விளக்கிநிற்றலாலெனக. இதுவே ஆசிரியர் கருத்தென்பது. அத்துவிதமென்ற சொல்லே "அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்" டென்றதனாலும், புடைநூலார் "பிரிவருமத்துவிதமாகுஞ் சிறப்பினதா" யென்றுடம்பொடு புணர்த்தோதிய தனாலுமறிக.

இவ்வித்துவிதம் அபேதசம்பந்தமாகிய ஐக்கியமுமன்றிப் பேதாபேதசம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப் பேதசம்பந்தமாகிய சையோகமுமன்றிக் கலப்புமுடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி யம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாதலால், அவ்வத்துவிதத்திற்கு ஓரோரிடங்களில் 'அலைகடலிற் சென்றடங்குமாறுபோல்' எனவும், 'வானத்தில் வாயும் மணத்தின் மணமும்போலும்' எனவும், அபேதவுவமையும், 'பண்ணையுமோசையும்போலப் பழமதுவுமின்னுஞ்சுவையும்போல்' எனவும், 'நீரும் இரதமும்போ லாங்காணாரருள்' எனவும், பேதாபேதவுவமையும், இரும்பைக்காந்தம் வலித்தாற்போலியைந்தெனப் பேதவுவமையும், ஒரு புடையொப்புமை பற்றி யெடுத்துக்காட்டுப வாகலின் அங்ஙனந் தம்முண் முரணுவபோல வேறு வேறெடுத்துக்காட்டுதல்பற்றி மலையற்க. இம்மூன்றியல்புந் தன்கட்டோன்ற விவற்றிற்கு வேறாய்நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படுமுவமையாவது ஆன்ம போதமுங் கண்ணொளியுந் தம்முள் அத்துவிதமாய் நிற்றலாமெனக.

"காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், "காட்டக் கண்டிடுங்கண்கள்போலக் கண்ணுக்கேயுமுயிர் காட்டிக் கண்டிடு மாபோல விசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்" எனவும், 'அறிவொளிபோற் பிரிவருமத்துவிதமாம்' எனவும் மூன்று மாசிரியருஞ் சித்தாந்த முடிபுணர்த்து மவ்வழி யிதனையே யெடுத்துக்காட்டியவாறறிக. இவ்வத்துவிதமேனையோர்போலக் கேவலம் விசிட்டம் மதுதலை யென்றுதலொன்றா விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும். ஈண்டுச்சுத்தமென்றது யாதென்றுமும் விசேடிக்கப்படாது நிற்றலை. அது விசேடத்தைச் சுத்தசத்தமெனத் தார்க்கிகர் கூறும் வாய்பாடுமறிக. இங்ஙன மொருபொருள் இருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மியம்போல வியாபகமும் வியாப்பியமுமான விருபொருளிருதன்மையாலொற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்தமுடைமையான் அதுவே யுண்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்னுஞ் சொல்லானுணர்த்தப் பட்டதெனவு மறியமாட்டாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறுப.

இனி ஆன்மா அவ்வாறு நிகழுங் காரியவுடம்பைத்தாங்குதற்குக் காரணமான அவத்தைகள் யாவையெனின் கூறுதும். அவை கேவலம் சகலம் சுத்தமென மூன்றும். அவற்றுள் கேவலமாவது தன் இச்சாஞானக்கிரியைகளினிழந்து [illegible] அறிதுயின்றிருத்தல் மாத்திரையேயுளதாதல். அக்கேவலம் மருட்கேவலமும் சகலகேவலமும் பிரளய கேவலமும் [illegible] கேவலமும் அருட்கேவலமுமென ஐவகைப்படும். அவற்றை விரிக்கப்புகின் மிகவிரியும். திராவிட மகாபாடியத்திற்காண்க.

சகலமாவது பின்பு தனுகரணாதியோடுங்கூடி அவ்விச்சா ஞானக்கிரியை ஒருபுடைவிளங்குமவத்தையாம். சுத்தமாவது ஆன்மா முற்பிறவிகளிற்செய்த சிவபுண்ணிய முதிர்ச்சியால் நித்தியாநித்திய விவேகம் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகிய இவைகள் தனக்கு முறையே நிகழ அப்பருவநோக்கி நித்தமுத்த சுத்த



சித்தனப்படுமீசன் குருவடிவங்கொண் டெழுந்தருளிவந்து நிக்கைசெய்து மலங்களைப்போக்கி ஞானத்தை அநுக்கிரகிக்கப் பெற்றுச் சுவாநுபூதியை அடைவதாம்.

இனி, சிவபுண்ணிய முதலியவைகளை முறையே விரிக்கத் தொடங்கி முதலில் சிவபுண்ணியத்தினியல்பு இன்னதென்பதைக் கூறத்தொடங்குவேம்.

சிவபுண்ணியம் பத்துவகைப்படும். அவையாவன, அபுத்தி பூர்வ சிவபுண்ணியம், புத்திபூர்வசிவபுண்ணியம், உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானமென்பனவாம். உபாயச்சரியை முதலாகக்கூறப்பட்ட எட்டும் சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டுவகைப்பட்டு விரியால் இன்னும் பலதிறப்படுமென்றுணர்க.

அபுத்திபூர்வசிவபுண்ணியமாவது, இது சிவபுண்ணியமென்று மனத்திற் சிந்தியாதுசெய்வது. புத்திபூர்வ சிவபுண்ணியமாவது, இது சிவபுண்ணியமென்று மனத்திற்கருதிச்செய்வது. உபாயச் சரியைமுதலிய நான்கும் பத்திகாரணமாதலின்றி புகழ்முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வனவாம். உண்மைச்சரியைமுதலிய நான்கும், பத்திகாரணமாகத்திருவடிப்பயன் ஒன்றையே கருதிச் செய்வனவாம். அவற்றுள், திருக்கோயில் அலகிடல்முதலியன சரியையிற்சரியை. இருபத்தைந்து மூர்த்திகள் விநாயகக்கடவுள் முதலிய ஆவரணமூர்த்திகள் [illegible] இவர்களைப்பூசித்தல் சரியையிற்கிரியை. நெஞ்சின்கண் உருத்திரக்கடவுளைத்தியானஞ்செய்தல் சரியையில் யோகம். அத்தியானபாவனையின் உறைப்பினால் ஓரநுபவவுணர்வு நிகழ்தல் சரியையில்ஞானம். சிவபூசைக்கு வேண்டப்படுமுபகரணங்களெல்லாஞ் செய்துகொள்ளுதல் கிரியையிற் சரியை. சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னாகச்சிவலிங்க வடிவிற்செய்யும் பூசனை கிரியையிற்கிரியை. அகத்தேபூசை, ஓமம், தியானம் மூன்றற்கு மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம் கிரியையில் யோகம். அவ்வந்தரியாகவுறைப்பின்கண்

நிகழுமோரனுபவ வுணர்வு கிரியையில் ஞானம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை; பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம், யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். இந்த யோகம் சகளநிட்களங்களைப்பற்றி நின்று செய்யுஞ் சாலம்பயோகமும், நிட்களத்தைப் பற்றி நின்றுசெய்யு நிராலம்பயோகமுமென் இரு வகைப்படும். இனிக் கேட்டல்முதலிய நான்கனுள், கேட்டல், ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல், ஞானத்தில் யோகம். நிட்டைகூடுதல் ஞானத்தில் ஞானமென் றுணர்ந்துகொள்க.

இனிப் புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்யுமுபாயச் சரியையிற் சரியைமுதல் உபாயஞானத்தின் ஞானமீறாகிய பதினாறு வகையினின்றும் பல வேறுவகைப்பட விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பக்காலாக்கினி யுருத்திரர் புவனமுதல் குணதத்துவ மத்தகத்திற் சிகண்டருத்திரர் புவனத்தின் கீழுள்ள வுருத்திரரென அவ்வப்புவனபதிகளுலகத்திற் சாலோகமுதலியவற்றைப் பெறுதலாம். பத்திகாரணமாகச் செய்யப்படு முண்மைச் சரியையிற்சரியை முதலுண்மை யோகத்தின் ஞானமீறாகிய பன்னிருவகையினின்றும் பல வேறுவகைப்பட்டு விரியுஞ் சிவ புண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சிகண்ட புவனமுதற் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகமுதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியைமுதலிய மூவகையினின்றும் பல வேறுவகைப்படுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சுத்தவித்தை முதலிய அதிகாரதத்துவ போக தத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோக முதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப் பல வேறுவகைப்பட விரியுஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயனென் றுணர்ந்துகொள்க.

சரியை முதலியவற்றினியல்பாவன யாவையெனின்? கூறுவாம். அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான்



பரிபக்குவமுடைய உயிர்கள் சோபான முறையினால் உணர்ந்து வழிபட்டுய்யும்பொருட்டு உருவம், உருவாருபம், அருவம் என்னு மூன்று திருமேனிகொண்டருளி அத்திருமேனிகளில் வழிபடு முறைகளையும் வேதாகமங்களில் வகுத்தருளிச்செய்தான். இம் மூவகைத் திருமேனிகளுள் புறத்தொழின்மாத்திரையானே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியையெனப்படும். அவ்வழிபாடியாவையெனின்? சிவபெருமானுடைய திருக்கோயிலின்மாட்டுத் திருவலகிடுதல். திருமெழுக்குச்சாத்துதல், திருவிளக்கேற்றல், அழகிய நந்தனவனங்கள்வைத்தல், திருப்பள்ளித் தாமங்கள் எடுத்தல், (இங்குத் திருப்பள்ளித்தாமம் என்றது பூவை) மலர்களால் இண்டைமுதலிய கட்டிச் சிவபிரான் திருமேனியில் பொலிவுறும் வண்ணஞ் சாத்துதல், முதல்வனுடைய கீர்த்திகளை வாயார வாழ்த்துதல், சிவனடியார் திருவேடத்தைக் கண்ணுற்ற வளவில் அடியேனாற் செய்யத்தக்க குற்றேவல்யாது? அதனை யருள வேண்டுமென்று வணங்கி அவர் அருளிச்செய்யும் பணிவிடைகளைச் செய்தல்முதலியனவாம். இச்சரியையினை அநுட்டித்தோர் சிவ சாலோகமாகிய பதமுத்தியைப்பெறுவர். சிவசாலோகமாவது அவ் வப்புவனபதியுலகங்களிலெய்தி யொருவர்மனையிற் பணிசெய்யுமகத் தொண்டர்க்குளதாகிய வுரிமைபோல அவ்வுலகத்துள்யாண்டுந் தடையின்றியுலாவி யவ்வப்போகங்களை நுகர்ந்துவாழ்வது. இவ் வுரிமை விசேடம்பற்றி இவர்க்குத் தொண்டரென்றும், இதை யண்டிக்குநெறியாகிய சரியைக்குத் தாசமார்க்கமென்றும் பெயர் கூறப்படும்.

அகப்புறத்தொழில்அகத்தொழிலென்னு மிரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு கிரியையெனப்படும். அவ்வழிபாடு யாவையெனின்? புதிதாகிய வாசனையுடைய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுதுமுதலிய பூசோபகரணங்களெல்லாந்தேடி அமைத்துக்கொண்டு பூதசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, ஆன்மசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்ச சுத்திகள் செய்து சிவாசனமூர்த்தி மூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச்செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து, நிருமலமாகிய மெய்யன்பி

னால் அருச்சனை செய்து விருப்பத்தோடு துதித்து வழிபாடியற்றி நித்தியாக்கினிகாரியமுஞ்செய்து முடிப்பதாம்.

பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்தலாவது:—முதலில் புட்பாஞ்சலியை மூலாதாரத்தில் வைத்து

"பூண்ட மாரிரு ளூடு கடந்தும்ப
ருண்டு போதுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டு கரதறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே."

என்னுந் தேவாரத்தைத் தியானித்துக்கொண்டு, பின்பு கிரமமாக வுயரக்கொணர்ந்து இருதயஸ்தானத்தில் சற்றுநேரம் நின்று மூல மந்திரத்தின் அகாரத்தைவிட்டு அதனால் பிரமத்தியாகஞ்செய்து மேற்கண்ட ஸ்தானத்தில் நின்று உகாரத்தைவிட்டு விட்டுணுத்தியாகஞ் செய்து மேல் தாலுஸ்தானத்தில் நின்று மகாரத்தைவிட்டு உருத்திரத்தியாகஞ் செய்து மேல்புருவநடுவில் நின்று விந்துவைவிட்டு ஈசுவரத்தியாகஞ்செய்து மேல்பிரம்மரந்திரத்தில்நின்று நாதத்தைவிட்டுச் சதாசிவத்தியாகஞ்செய்து மேல்துவாதசாந்தத்தில் நின்று உன்மனியந்தத்தில் அனேககோடி சூரியப்பிரகாசமாய் விளங்கும் பரமசிவனிடத்தில் சோகம்பாவனையினாலே ஒருமையடைந்து ஆன்மாவும் சிவமும் சோதிரூபமாகிய சிவத்தோடு இரண்டற்றதாகத்தியானித்துப் பின்பு. புட்பாஞ்சலியைக் கீழே கொணர்ந்து புருவநடுவில் சற்றுநேரம் நின்று சகலவடிவங்கொண்டதாகப் பாவித்துப் பின்பு வலதுநாசிவழியாக இருதயத்தை யடைந்து பின்பு புட்பாஞ்சலியை யடைந்ததாகத் தியானித்துப் பின் இலிங்கத்தில் ஆவாகனஞ் செய்யவேண்டும். ஆவாகனமாவது சிவமந்திரத்தினாலே சிவனை, பூஜாநிமித்தம் வரவழைத்தலாம். ஆனால் முன்னமே எங்குமிருப்பதால் வியாபக வஸ்துவை ஆவாகனஞ் செய்வது எப்படி? கண்டவஸ்துவை அல்லவோ வரவழைக்கவேண்டும்? ஆகையால் சிவனை ஆவாகனஞ் செய்யில் வியாபகத்துக்குப் பங்கம் வருமென்னில், ஆகாசமுங் காட்டத்தில் எங்கும் நிறைந்த நெருப்பானது கடையினாற் கடைய ஓரிடத்தில் பிரகாசிக்கும். அதுபோல எங்கும் நிறைந்த வஸ்துவை ஓரிடத்தில் பிரகாசிக்கச்செய்வதே ஈண்டு ஆவாகனமெனப்படும்.



THE REGISTRAR REGISTERED 9-OCT-191 MADRAS

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என்னுஞ் சுருதியாலும் இதனுண்மை உணர்ந்து கொள்க.

ஆவாகனம், மானதவியாபாரம். அஃதாவது ஒப்பற்ற சிரத்தையாகும். சிரத்தையுடன் மூலமந்திரத்தைச் சொல்லிச் சிவனையழைத்து அபிமுகமாகச் செய்தலாம். அந்த ஆவாகனம் ஆலயங்களில் பிரதிட்டா காலத்தில் இலிங்காதிகளில் ஜீவநியாச ரூபமாகச் செய்வதாகிய நித்யப்பிரகாச ஆவாகனமும், நாடோறும் பூஜாகாலத்தில் அபிமுகமாகச் செய்கிற ஆவாகனமுமென இரண்டுவகைப்படும். அப்படி அபிமுகமாகச் செய்தலும் ஐந்து முகங்களுள் ஊர்த்துவமுகமாகிய ஈசான முகத்துக்கேயாகும். எந்தத் திக்கில் துவாரமிருக்கிறதோ அதைக் கிழக்காகச் செய்யவேண்டும். அவ்விடத்தில் தற்புருட முகமும் ஈசான முகமும் அபிமுகமாகும். ஊர்த்துவமுகத்தினாலேயே சமமுகார்க்கியமும் பராமுகார்க்கியமுங் கொடுக்கவேண்டும்.

ஸ்தாபனமாவது - அனுக்கிரகிக்கு நிமித்தம் கருணாநிதியாகிய பகவான் இங்கே இலிங்காதியில் எழுந்தருளியிருக்கவேண்டுமென்று பத்தியுடன் பாவிக்கும் மனோபாவனையேயாம்.

சந்நிதானமாவது - சமீபித்த சம்பந்தம். அஃதாவது, பூசிப்பாரிடத்திலருள்புரியும் பூஜகனாகிய தனக்கும் அநுக்கிரகிக்குந்தன்மையும் அநுகிரகிக்கப்படுந் தன்மையுமாகிய சம்பந்தம். இச்சம்பந்த பாவனையே சாந்நித்தியஞ் செய்தலாகும்.

சந்நிரோதனம் - அதாவது பூசை முடியும் வரை இலிங்கத்தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்ற பிரார்த்தனை. (நிரோதனம்—தடுத்தல்.)

அவகுண்டனமாவது - பத்தியற்றவர்களிடம் தோன்றாமலும் இடையூறுகள் நேராமலும் கவசமந்திரத்தால் சிவபிரான் திருமேனியை மறைத்தல்.

சகளீகரணமாவது-சிவனுடைய இருதயாதிஸ்தானங்களில் இருதயாதி மந்திரங்களைக் கவசஞ் சுற்றுவது போல நியாசஞ்செய்வது.

தேனு முத்திரை—சுரபி முத்திரை.

முத்—சந்தோடம். திரா—விரைந்து செல்லுதல்.

தேவதைகளைச் சந்தோடப் படுத்துகிறதினாலும் அசுரர்களைத் துரத்தலாலும் முத்திராவெனக் காரணப்பெயராயிற்று.

முத்திரைகளினிலக்கணமாவது:—இருகையும் அஞ்சலியாகச் சேர்த்துஇரண்டு அநாமிகைவிரல்களின் அடிக்கணுக்களில் இரண்டங்குட்டங்களையுஞ் சேர்த்துக்காட்டுவது ஆவாகன முத்திரையெனப்படும். இதையே அதோமுகமாகச்செய்தல் ஸ்தாபன முத்திரையாகும். இருகையு முட்டியாக மூடிக்கொண்டு இரண்டு அங்குட்டங்களையும் உயரத்தூக்குதல் சந்நிதானமுத்திரை. அந்தமுட்டிகளையே அங்குட்டங்களை யுள்ளடக்கிப் பிடித்தல் சந்நிரோதன முத்திரை. இரண்டு முட்டிகளையும்பிடித்துத்தர்ச்சனி விரல்களைமாத்திரம்நீட்டி மண்டலாகாரமாகச் சுற்றுவது அவகுண்டன முத்திரை. பசுவின் முலைபோற் சேர்ப்பது தேனு முத்திரை. இக்கிரியையினை அநுட்டித்தோர் சிவசாமீபமாகிய பதமுத்தியைப் பெறுவர். சிவசாமீபமாவது, அவ்வளவினன்றி மைந்தர்க்குளதாகிய உரிமைபோல அவ்வப்புவன பதிகளுக்கு அணுக்கராய் வைகி அவ்வப்போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வது. இவ்வுரிமை விசேடம் பற்றி இவர்க்கு மைந்தரென்றும், இதையடைவிக்கு நெறியாகிய கிரியைக்குச் சற்புத்திர மார்க்கமென்றும் பெயர்.

இனி அகத்தொழின் மாத்திரையானே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகமெனப்படும். அவ்வழிபாடு யானவையெனின், கூறுதும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். அவற்றுள் இயமமாவது கொல்லாமை, சத்தியம், அத்தேயம், பிரமசரியம், தயை, ஆர்ச்சவம், க்ஷமை, திருதி, மிதாகாரம், சவுசம் எனப் பத்துவகைப்படும். அவற்றுள்;

௧. கொல்லாமையாவது: வேள்வியாதிகளிற் செய்யுங்கொலை தவிர மற்றையுயிர்களைக் கொலைபுரிய மனத்தும் நினையாமையாம்.



உடல், பொறி, கரண முதலியவற்றை நானென்று மதித்தலாகிய கொலைசெய்யாது உயிரின் உண்மையறிவதும் கொல்லாமையாம்.

௨. சத்தியமாவது- கண்ணாலுங் காதாலுங் கண்டுங் கேட்டுமுள்ளவைகளைக் கூறுதலாம். பிறந்திறக்கும் பொய்த்தெய்வங்களை மதியாது நித்தியமாகிய முதல்வனையே மெய்த்தெய்வமென்று நம்புவதுஞ் சத்தியமாம்.

௩. அத்தேயமாவது - அயலார் பொருளைச் சிறிதும் அபகரிக்க நினையாமையாம். தேகாதிப் பிரபஞ்சத்தை நானென்று மதியாத தெளிவும் அத்தேயமாம்.

௪. பிரமசரியமாவது- பிறர் மனைவிழையாமை வரைவின் மகளிர் விழையாமை முதலிய ஆண்டகைமையாம். முதல்வன்றிருவடிகளிற் சிந்தையைச் செலுத்தலும் பிரமசரியமாம்.

௫. தயையாவது- தன்னுயிர்போல மன்னுயிர்களையும் ஒப்பக்காண்டலாம்.

௬. ஆர்ச்சவமாவது - மக்கள் மனைவி முதலிய உறவினரிடத்தும் பகைவரிடத்தும் தன்னிடத்தும் சமபாவனை வைத்தலாம்.

௭. க்ஷமையாவது- பகைவர் முதலியோராற் றுன்பஞ் சம்பவித்தாலும் பொறுத்தலாம்.

௮. திருதியாவது- முதல்வன் றிருவாய்மலர்ந்தருளிய வேத சிவாகமங்களை முத்திபெறுதற்கு ஏதுவாமென்று நம்புவதாம். முதல்வனது அஷ்டமூர்த்தங்களில் ஒன்றாகிய யான் அம்முதல்வனின் வேறல்லனென் றெண்ணுதலுந் திருதியாம்.

௯. மிதாகாரமாவது- தேவாமிர்தத்துக்கு ஒப்பாகிய உணவையும் கூழையுஞ் சமமாகக்கொண்டு உண்பதாம். அதிகமாகவுங் குறைவாகவுங் கொள்ளாது அன்னம் அரைக்கூறும், நீர் காற்கூறும் உண்டு காற்கூறிடம் வாயு சஞ்சரிக்கவிடுவதும் மிதாகாரமாம்.

௧௦. சவுசமாவது- உடம்பினை மண்ணாதிகள் கொண்டு விதிப்படி நீரினாற் சுத்திசெய்வதாகிய பாகிய சவுசமும், அறிவினாலே வேதமுடிபாகிய சித்தாந்தப்பொருளை மனத்திற்பொருந்த நினைத்துப் பாசங்கழியும்வண்ணம் நிற்பதாகிய மானதசவுசமுமென இருவகையாம். இயமம் முடிந்தது.

## நியமம்.

நியமமாவது- தவம், சந்தோஷம், ஆஸ்திக்கியம், தானம், ஈஸ்வரபூசை, சித்தாந்தசிரவணம், இலச்சை, மதி, செபம், விரதம் எனப் பத்துவகைப்படும் அவற்றுள்.

௧. தவமாவது- முதல்வன் திருவடிகளைச் சிந்தித்து வேத விதிப்படி சாந்திராயணம், கிருச்சிரம் முதலிய விரதங்களை அநுட்டித்து உடம்பை வருத்துவதாம். பந்தம் எனக்கு எவ்விதம் வந்தது? எம்முதல்வனது திருவடியிற் பத்திசெய்தால் இப்பிறவியொழியும்? யான் ஜீவன் முத்தனாவது எப்பொழுது? என்றும், முத்தி முடிவு ஏது? என்றும் ஆராயுந் தொழிலும் தவமாம்.

௨. சந்தோடமாவது- உலகத்தில் நீங்காது எழுகின்ற ஆசையை ஒழித்துக் கிடைத்த பொருளைக்கொண்டு மகிழுந்தன்மையாம். விட்டுணு, பிரமா, இந்திரன் முதலிய தேவர்களுடைய பெரியபோகங்களை மனத்தில் சிறிதுஞ் சிந்தியாது சிவபெருமானது திருவடிகளை இடையறாது சிந்தித்துக்கொண்டு இருப்பதுவும் சந்தோடமென்று வேதங் கூறும்.

௩. ஆஸ்திக்கியமாவது- வேதம், ஆகமம், மிருதி முதலிய நூல்கள் சொல்லுங் கருமங்களில் தினந்தோறும் மிகுந்த விசுவாசமுடைமையேயாம்.

௪. தானமாவது- தருமவழியாக நின்று தேடும்பொருளைச் சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் இடையறாது சிந்தித்துக் கொண்டிருக்கும் மனத்தையுடைய அடியார்களுக்கு உவகையோடு கொடுத்தலாம். வேதாகமமார்க்கங்களைக் கைவிட்டவர்களும் சிவபெருமானது திருவடிகளை மனத்தில் சிந்தியாதவர்களும், அடியார்களைப்போலப் பாவித்துத் திரிகின்றவர்களும், பிறப்பிறப்பிற்குப் பயப்படாதவர்களும், வன்கண்ணருமாகிய இவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்தல் பரிசுத்தமாகிய அவியைச் சாம்பரிடைச் சொரிதல் ஒக்கும். சிறிதும் பயனில்லை என்று சுருதி கூறும்.

௫. ஈசுவரபூசையாவது- அருவம், உருவம் ஆகிய இரண்டுக்குங் காரணமாகிய சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்தலாம். குற்



றம் பொருந்திய இராகாதிகுணங்கள் நீங்கி உண்மைவசனங்களையே எப்பொழுதுஞ் சொல்லி நல்லொழுக்கமும் கொல்லாமையுமாகிய விரதங்களை அநுட்டித்தலும் ஈசுவர பூசையாம்.

௬. சித்தாந்த சிரவணமாவது- பிரமன் விட்டுணு முதலிய தேவர்களுக்கு அறியக்கூடாதவன், மெய்ஞ்ஞானமே திருமேனியாகவுடையவன், நித்தியன், முத்தன், ஒப்பிலான், சிவன், சம்பு, சங்கரன், பவன் முதலாகிய நாமங்களை எடுத்துச் சொல்லுகின்ற வேதாந்தத் தெளிவை எப்பொழுதுஞ் சிரவணஞ் செய்தலாம். மகாதேவராகிய சிவபெருமானது புராணங்களை எப்பொழுதுங் கேட்டுக்கொண்டிருத்தலும் சித்தாந்த சிரவணமாம்.

௭. இலச்சையாவது- வேதாகமமார்க்கங்களில் கூறிய விதிக்கு மாறாக ஒழுகுதலாகிய கிரியையில் நாணமுண்டாதலாம்.

௮. மதியாவது- சிவபெருமான் திருவடிப் பத்தியோடு சொல்லுகின்ற வைதிகக்கிரியையில் உண்டாகின்ற சிரத்தையாம்.

௯. செபமாவது- குற்றமில்லாத ஆசாரியர் உபதேசம் பண்ணிய மந்திரத்தை அன்போடு விதிப்படி செபித்தலாம். வேதாகம மார்க்கங்களுக்கு விருத்தமான நூலின் விதியைத் தழுவி ஒழுகினால் நிஷ்பலமே. ஆதலால் பொருத்தமில்லாத பலகருமங்களைச் செய்தலினும் வேதாகம மார்க்கங்களிற் சொல்லிய சிவபுண்ணியங்களைச் சிறிதேனுஞ்செய்தல் மிகவிசேடமென்று அறிவுடையோர் கூறுவர். வேதாகமங்களிற் கூறிய மந்திரங்களையே எப்பொழுதுஞ் செபித்து வரல்வேண்டும். அந்தச்செபமும் வாசகம், மானதமென்றிருவகைப்படும். வாசகமும் உச்சம், உபாம்சு என்று இரண்டுவகைப்படும். மானதமும் மனனம், தியானம் என இரண்டு வகைப்படும். உச்சத்தைப் பார்க்கிலும் உபாம்சு ஆயிரமடங்கு ஏற்றமுடையது. அதனினும் ஆயிரமடங்கு ஏற்றமுடையன மனன தியானங்கள். உச்சம் எப்பலனையுங் கொடுக்குமாயினும் நீசர் முதலியோர்செவிகளில் விழுந்தால் நிஷ்பலமென்று பெரியோர் கூறுவர். எந்த மந்திரங்களுக்கும் உரிய இருடி, சந்தசு, தெய்வம் ஆகிய இவைகளை முதலிற் றியானித்தே பின்பு மந்திரங்களைச் செபித்தல்வேண்டும். மந்திரமென்பதற்குப் பொருள் நினைப்பவனைக் காப்பது. மந் - நினைப்பவன்.

திர காப்பது. ஆகவே மந்திரமென்னும் பெயர். நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்கும், சிவசத்திக்கும் செல்லும். ஆயினும் வாச்சியத்துக்கும் வாசகத்திற்கும் பேதமில்லாமைபற்றி உபசாரத்தால் வாசகத்துக்குஞ் செல்லும். என்வே மந்திரம் வாச்சியமந்திரம், வாசகமந்திரம் என இருதிறப்படும் என்றபடியாயிற்று. இனி உச்சமாவது அருகிலிருக்கும் பிறர் செவிக்குங் கேட்கும்படி செபித்தலாம். உபாமிசு தன் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி நாநுனி உதட்டைத் தீண்ட மெள்ளச் செபித்தலாம். மனனமாவது நாநுனி உதட்டைத் தீண்டாமல் ஒருமைபொருந்திய மனத்தினாலே செபித்தலாம். தியானமாவது செபிப்பவனாகிய ஆன்மாவும் செபிக்கப்படும் பொருளாகிய சிவமும் ஒன்றுபட்டுச் சிவமாயே நிற்றலாம்.

க. விரதமாவது- ஆசாரியர் சொல்லியபடி உபவாச முதலிய கிரியைகளைச் செய்தலாம். பரிசுத்தமாகிய விபூதி உருத்திராக்கங்களை அணிந்து சிவபூசையை இடையறாது செய்துவருதலும் விரதமாம்.

நியமம் முடிந்தது.

ஆசனம்.

ஆசனமாவது -நூற்றெட்டு வகைப்படும். அவற்றுள் ஒன்பதாசனம் சிறந்தன. அவையாவன-சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், சிங்கம், பத்திரம், முத்தம், மாயூரம், சுகம் என்பனவாம்.

சுவத்திகாசனமாவது -வலப்புறத்துக்கணைக்கால் தொடை இவைகளின் நடுவில் இடப்புறத்துப் பாதமும் இடப்புறத்துக் கணைக்கால் தொடை இவைகளின் நடுவில் வலப்புறத்துப் பாதமும் ஒக்குமாறு சேர்த்து, சமம்பொருந்திய தேகமுடையவனாயிருத்தலாம்.

கோமுகாசனமாவது - இடப்பாகத்து அறையில் வலத்தாளினது பாட்டினையும் வலதுபக்கத்திலுள்ள பிருட்டபாரிசத்தில் இடத்தாளினது பாட்டினையும் பொருந்தும்படி சேர்த்துக்கொண்டிருத்தலாம்.

பதுமாசனமாவது - இடது தொடையின்மேல் வலது தாளையும் வலது தொடையின்மேல் இடதுதாளையுஞ் சேர்த்து இரண்டு



அங்குட்டங்களையும் பொருந்த இரண்டு கைகளால் மாறியுறப் பிடித்திருத்தலாம். இந்தப் பதுமாசனம் சகல ரோகபயம் எவற்றையும் நீக்கும்.

வீராசனமாவது, இடதுபாதத்தின் காட்டைவலதுதொடையின் மேல் வைத்துச் சரீரம் துவளலின்றி சமத்துவம் பொருந்த இருப்பதாம்.

சிங்காசனமாவது, இடது பாதத்தின் காட்டை வலதுபக்கத்திலுள்ள அண்டத்தின்கீழும் வலது பாதத்தின் காட்டை இடதுபக்கத்திலுள்ள அண்டத்தின்கீழும் வலிமையோடுஞ் சேர்த்து இரண்டு கையையும் முழந்தாளிரண்டின்மேல் விரல் நிமிரும்படி வைத்துக் கண்ணை நாசிநுனியில் வைத்திருத்தலாம்.

பத்திராசனமாவது, இரண்டு பாதங்களின் காட்டினை இரண்டு பக்கத்திலுள்ள அண்டங்களின் கீழ் வைத்து இரண்டுதொடையினும் இரண்டு கையை ஊன்றினவனாயிருப்பதாம். இது விடரோகம் பயம் முதலியவற்றை நீக்கும்.

முத்தாசனமாவது, இடது பாதத்தின் காட்டை அண்டத்தின் கீழேவைத்து அதன் கீழ்வலப்பாதத்தின் காட்டைப்பொருந்தவைத்திருப்பதாம். குறியின் மேல்பாகத்தில் இடத்தாட் காட்டினை வைத்து அதன்மேற் றன்னிட வலத்தாட் காட்டினை வைத்திருத்தலும் அது.

மயூராசனமாவது, கூர்ப்பரங்களின் நுனிகள் நாபியைப்பொருந்த இரண்டு கைகளையு நிலத்திலூன்றி அடி சென்னி இவைகள் பூமியிற் பொருந்தாது மேலே எழுப்பி இருத்தலாம். இது சகல பாதகங்களையும் போக்கும்.

சுகாசனமாவது,ஒருவனுக்கு எந்த விதத்தினாலே சுகமும்தைரியமும் உண்டாகின்றதோ, அவ்விதமாயிருத்தலேயாம்; இது அசத்தர்கள் அனுட்டிக்கத்தக்கது.

ஆசன முடிந்தது.

## பிராணயாமம்.

பிராணயாமமாவது:—இரேசகம், பூரகம், கும்பகம் என மூவகைப்படும். இம்மூன்றும் முறையே அகாரம், உகாரம், மகாரம் ஆகிய இவற்றின் சொரூபமாகும். இந்த மூன்றக்கரமும் ஒன்றாய்க் கூடின் பிரணவமென்று பெயர். பிராணயாமம் இந்தப் பிரணவ சொரூபமாகும். நாடிகள் பத்துவகைப்படும். அவற்றுள் இடைநாடி, வலதுநாடி, சுழுமுனைநாடி ஆகிய இம்மூன்றும் சிறந்தன. அவற்றுள்ளும் சுழுமுனை சிறந்தது. முதலில் அகாரதியானஞ்செய்துகொண்டு இடது நாசியால் வாயுவை அழைத்துப் பதினாறு மாத்திரையளவு பூரகமும், உகார தியானஞ் செய்துகொண்டு வலதுநாசியால் அங்ஙனம் பூரித்த வாயுவை அறுபத்துநான்கு மாத்திரையளவு கும்பகமும், மகார தியானஞ் செய்துகொண்டு இடதுநாசியால் அங்ஙனம் கும்பகஞ் செய்த வாயுவை முப்பத்திரண்டு மாத்திரையளவு இரேசகமும் செய்தல் முறைமையாகும். கும்பக மாத்திரம் வலிமையுள்ளவரே செய்யலாம். இதுதான் பிராணயாமம் என்று பெயர்.

சந்நியாசிகள் அநுட்டிக்க வேண்டிய முறைமையாவது, மகாரமூர்த்தியாகிய சிவபிரானைத் தியானஞ்செய்துகொண்டு பிங்கலைநாடியால் பதினாறு மாத்திரையளவு பூரகமும், உகார சொரூபியாகிய விட்டுணுவைத் தியானஞ்செய்து கொண்டு அவ்விதம் பூரித்த காற்றை அறுபத்துநான்கு மாத்திரையளவு கும்பகமும், அகார சொரூபியாகிய பிரமதேவரைத் தியானஞ்செய்துகொண்டு முப்பத்திரண்டு மாத்திரையளவு இரேசகமும் செய்யவேண்டும். பிரமசாரி, இல்லறத்தார், வானப்பிரஸ்தர் ஆகிய இவர்கள் பிராணவாயுவை வயிற்றில் பூரகஞ்செய்து பிரணவம் பொருந்திய வியாகிருதிகளோடு காயத்திரி மந்திரத்தை மூன்று சந்தியிலும் மும்மூன்று தரஞ் செபிக்க வேண்டுமென்று சுருதி கூறும். அரசர் விரத்தியுடைய வைசியருக்கும் இவ்விதி பொருந்துமென்று வேதங்கூறும். சூத்திரருக்கும் பெண்களுக்கும் நமோந்தமாகிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் செபித்தல் விதியாகும். இப்பிராணயாமம், ஒரு தினத்துக்குப் பதினாறு காலஞ்செய்தல் விதியாகும். ஒருவன் ஒருமதி இவ்வாறு அநுட்



டித்தால் கொலை முதலிய பாவநீங்கும். ஆறுமதி அநுட்டானஞ் செய்யில் ஞானம் உதிக்கும். ஒருவருடம் அநுட்டிப்பானுயின் பிரமஞானியாவான்.

காற்றை வயிற்றில் ஆகருடணஞ் செய்து பூரித்தல் பூரகமென்றும், நீர் நிறைந்த குடம்போலச் செறிதர வாயுவை வயிற்றில் தரித்தல் கும்பகமென்றும், வயிறுகலந்த காற்றை அவ்வயிற்றினின்றும் வெளியே விடுத்தல் இரேசகமென்றும் கூறப்படும். இந்தப் பிராணயாமத்தைச் செய்யுங்கால் வேர்வையுண்டாகில் அதமம். நடுக்கம் உண்டாகில் மத்திமம். உத்தானம் உண்டாகில் உத்தமம். உத்தமமாகிய இது கிடைப்பளவும் அவ்விரண்டையும் தவிரற்க. ஒருவனுக்கு இந்தப் பிராணயாமத்தினால் சித்த சுத்தியும் அதனால் மனம் சிவத்தில் திடமுறப் பற்றுதலும் அதனால் பரசிவக் கலப்பிலூற்று ஒளிர்ந்திடுதலும் அதனால் பரமுத்தியும் சித்திக்கும். இப்படியன்றி இரேசக பூரகங்களை நீக்கிக் கும்பகத்தையே நிலையுறச் சாதனஞ் செய்யின் பாதகங்களெல்லாம் நீங்க ஞானத்தை விரைவிலடைவான். மேன்மையோடுங் கூடிய இந்தப் பிராணயாமத்தை யெப்பொழுதும் அப்பியாசஞ் செய்வோனுக்கு யாதொரு குற்றமும் உண்டாகாது. இதைத்தற் கரியன எவ்வுலகத்திலு மில்லை. ஆதலால் சர்வ முயற்சியாலும் அந்தப் பிராணயாமத்தை அப்பியாசம் பண்ணி வரவேண்டும். அப்பியாசம் பண்ணத் தக்க காலங்களாவன:— சந்தியா காலங்கள், பிராம முகூர்த்தம், நண்பகல் முதலியனவாம். காற்றை ஆகருடணஞ் செய்து வயிற்றில் பூரித்து நாசி நுனியிலும் நாபி மத்தியிலும் பாதத்திற் பொருந்திய அங்குட்டத்திலும் தாரணம் பண்ணவேண்டும். இவ்வாறு அநுட்டிப்போன் சகல ரோகங்களுமின்றி நூறாண்டு ஆசையோடு சீவித்திருப்பானென்று வேதங் கூறும்.

தாரணத்தை நாசி நுனியிற் செய்யில் அவனுக்கு வாதம் வசப்படும். நாபிமத்தியிற் செய்யில் ரோகங்களெல்லாம் நீங்கும். பாதத்திலுள்ள அங்குட்டத்திற் றரித்தால் சரீரம் கனமின்றி இலகுவாகும். நாவினால் காற்றை ஆகருடணஞ் செய்து நலமுற அமிர்த பானம் பண்ணுவானேற் சகல ரோகங்களும் நீங்கும். நாவினால்

காற்றை ஆகருடணம் பண்ணி நாபியினில் அமைதரச் சித்த தாரணம் பண்ணி அமிர்தபானஞ் செய்யில் தேவர் புகழும் இன்பம்பல உண்டாகும். இடகலையால் ஆகருடணஞ் செய்து காற்றைப் புருவ மத்தியில் தாரணஞ் செய்து அமிர்தபானஞ் செய்வாருக்கில் வியாதிகளெல்லா நீங்கும். இடகலை பிங்கலைகளால் காற்றை இழுத்து நாபியிற் றரித்தாலும் உரோகங்களெல்லா நீங்கும். ஒருமாதம் மூன்று சந்தியிலுந் தடையின்றிக் காற்றை நாவினு லிழுத்துச் சு... தைத் தன். நாபியின் பக்கத்திற் றரித்தால் வாதமே முதலாகச் சொல்லுகின்ற பல தோடங்களு நீங்கும். இரண்டுநாடிகளால் காற்றை ஆகருடணஞ் செய்து இரண்டு நேத்திரங்களிலும் சிரத்திலும் காதுகளிலும் தாரணஞ் செய்தால் அந்த அந்த இடங்களிலுள்ள பிணி நீங்கும். சுவத்திகாசனத்தி லிருந்து குற்றமில்லாத மனத்தையுடையவனுய் அபான வாயுவை மிருதுவாகப் பிரணவத்தோடும் இழுத்து அங்குட்டத்தால் செவியை மூடித் தற்சனியினுல் கண்ணை மூடி மத்திமையினுல் நாசியை மூடிக் கொண்டு ஆனந்தந் தோன்று மனவும் சிரத்தில் பொலிவுறத் தாரணஞ் செய்க. ... பிராண வாயு பிரமாந்திரத்தைப் பொருந்தும். அக்காலையில் நாத மொன்று உண்டாகும். அது பத்து விதமான தொனியோடுங் கூடி ஒலிக்கும். அவையாவன:—கிண்கிணி, சிலம்பு, மணி, சங்கம், யாழ், தாளம், வேய்ங்குழல், பேரி, மத்தளம், முகில் என்பனவாம். வீரியுவின் தாரணை சென்னியின் மத்தியில் பொருந்துங் காலையில் ஆன்மா மலையினின்றும் இழிகின்ற அருவிபோன்று மேன்முகமாய்த் தோன்றும். அப்பொழுது மெய்ஞ்ஞானம் உதிக்கும். அது உதிக்கவே ...யுள்ள சமுசார பந்தம் யாவுங் கழிந்தொழியும். ...முத்தா...னமாக விருந்து பரமசிவனையும் பசுமுகக்கடவுளையுந் தியானஞ் செய்து மூலாதாரத்தில் சிவந்த கேசரங்களையுடைய தாமரை மலரில் பிரணவத்தை மனத்தில் தியானித்துக்கொண்டு எவ்வளவு வரை மனோலயமாகுமோ அதுவரைக்கும் வாயுவை நிரோதஞ் செய்க. அந்த யோகத்தினுல் அபானவாயு அக்கினித் தானத்தை யடையும். அந்த அக்கினியோடு அபான வாயுவையும் பிராண வாயுவையும் அழல்சயமுறுமளவும் பிரணவத்தை மனத்தில் தியானஞ் செய்துகொண்டு பொருந்தத் தாரணஞ் செய்யவேண்டும். அக்கினி சயமாகியபின்



அக்கினி மண்டலத்திற்கு மேல்பாலில் நாபிக்குக் கீழ்பாலில் இதழ்களெல்லாம் வளப்புக்தோடுகூடி விளங்குகின்ற சுவாதிட்டான கமல மலரில் விளங்கும். பிரணவாயு அபானவாயுக்களை விளங்குகின்ற தீயோடும் ஏற்றி பிரணவத்தைத் தியானித்துக்கொண்டு நாபியினைக் கண்ணுற்பார்த்து மனோலயம் எவ்வளவு வரை ஆகின்றதோ அவ்வளவு வரைக்கும் காற்றை நிரோதஞ் செய்க. சுழுமுனையான து முதுகினடுவில் வீணாதண்டம்போலப் பொருந்திய எலும்போடுகூட சிரத்தினடுவே வந்து புருவ மத்தியமளவு நிற்கும். நாபியினுற்ற கந்தத்தின் இரண்டங்குலத்தின் கீழ் காந்தியோடு குண்டலிசத்தி பாம்பின் வடிவமாய் தன்படத்தால் சுழுமுனைத் துவாரத்தை மறைத்துக் கொண்டு அந்தச்சுழுமுனு நாடியைக் கண்ட பாகத்தால் எட்டுச் சுற்றோடு பொருந்தச் சுற்றி ஒளிபொருந்திய உடலை சுழுமுனு நாடியின்வழியே மேற்கொண்டு போய் வாலால் பிரமாந்திரத்தை மறைத்துக் கொண்டிருக்கும். சுழுமுனைத்துவாரம் மறைக்கப்பட்டிருத்தலால் காற்றும் அன்னமும் ... அதற்குள் நுழையப்பெருவென்று சுருதி கூறும். ஆதலால் வாயுவைத் தீயோடும் மேலே ஏற்றுங்காலையில் இமைப்பொழுதில் குண்டலிசத்தி சுருசுருப்பையடையும். பின்பு நாபிக்குழியினின்றும் கவித்த தன்படத்தை வாங்கும். அக்காலையில் சுழுமுனை மாட்சிமை பொருந்த விளங்கும். அங்கே விளங்குகின்ற அக்கினியோடு காற்றைப் பிரணவத்தைத் தியானித்துக் கொண்டு சுழுமுனைநாடி வழியாகச் சிரமளவுஞ் செலுத்தித் தாரணத்தைச் செய்யவேண்டும். அக்கினியோடு காற்றுல் சரீரம் ...பூரிக்கப்பட்ட அக்காலையில் சிரசில் ஆன்மா ஆகாயத்தில் ...கும் சூரியனைப்போலப் பிரகாசிக்கும். இவ்விதமாக அப்பியாசம் பண்ணுகின்றவனுக்குக் காற்று வசப்படும். காற்று வசப்பட்டதற்கு அடையாளமாக வேர்வை முதலிய சில சின்னங்கள் உண்டாகும். பரிசுத்தமாகிய இந்த யோகத்தைச் செய்பவனுக்கு திரிலோகத்திலும் சமானம் வேறில்லை. மூலரோகம் பவுந்தரம் மற்றுமுள்ள நோய்கள் யாவும் நீங்கிவிடும். பாவமும் நீங்கும். அதனுல் சித்தசாந்தி உண்டாகும். அதனுல் பிரமதேவர் விஷ்ணு இந்திரன் ஆகிய இவர்கள் வாழ்க்கை யெல்லாம் ஓர் துரும்புபோல மதிக்கும்படியாக வயிராக்கியமுண்டாகும். அதனுல் சிவஞானம் உண்டாகும்.

அதனால் பாசப்பிணிப்பு அறும். அதனால் முத்தியுண்டாகும். இந்த ஞானசாதனத்தை விட்டு எப்பொழுதும் மாலையில் மூடப்பட்டு பூமியில் மனிதர்கள் பாசபந்தத்தில் சுழலுகின்றார்கள், என்ன ஆச்சரியம்? அப்படிச் சுழலுதல் கிருமிகள் மலத்தில் சுழற்றி மனமகிழ்ந்திடுதலை ஒக்கும். இக்கருத்தை நோக்கியே தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவரும், "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்" எனவும், "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்" எனவுங் கூறியதூஉ மென்க. இவ்வியஞான சாரத்தை அனுட்டிக்கின்றவர்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையைச் சிறிதும் சிந்தியாது சிவபெருமானது உபய பாதங்களைப் பற்றி முத்தியைப் பொருந்தி வாழ்வார்கள். சிவபெருமானது திருவடிஞானத்தைப் பெற்றவர்கள் சகத்தை ஞானவடிவமாகக் காண்பார்கள். சமுசாரமாகிய பந்தத்தில் மூழ்கியிருக்கின்ற மூடர்கள் அநித்தியமாகிய பொருள் வடிவமாகக் காண்பார்கள். சிவபெருமானது திருவடியை யடைதற்கு [illegible] பலவிதமாகக் கூறுவர். தானப்பேற்றால் போகங்கள் உண்டாகும். யாகாதி கிருத்தியங்களால் தேவலோக முதலிய பதவிகள் சித்திக்கும். தவங்களைச் செய்தலால் பிரமபதவி விஷ்ணுபதவி முதலிய பதவிகள் சித்திக்கும். ஆதலால் மெய்ஞ்ஞானம் ஒன்றே மோக்ஷத்துக்கு ஏது. கூர்மையாகிய அறிவினையுடைய பெரியோர்கள் இதனுண்மையை உணர்வார்கள். மூடர்கள் இதனுண்மையைக் கட்டுரைக்கினுங் கொள்ளார்கள். கருமத்தால் முத்தியையடைதல் கூடாது. கருமத்தையன்றி ஞானமுஞ் சித்திக்காது. ஆதலால் சற்கருமத்தைச் செய்து ஞானத்தைப் பெற்று முத்தியையடையாது கருமத்தை யிகழ்ந்து கூறும் மூடர்கள் என்ன செய்வார்களோ அறிகிலேன். இரவி தோன்ற இருள் கழிதல் போல ஞான முதயமாகுங் காலத்தில் பாசம் நீங்கும். தற்போதமுஞ் சஞ்சிதமும் ஒழியும். சிவபெருமானது திருவடி யடைதலுஞ் சத்தியமேயாம். இவ்விதமாகக் கூறப்பட்ட பிராணாயாமம் நூற்றெட்டு வகைப்படும். அவற்றை யெல்லாங் கூறப்புகின் மிக விரியுமென்றஞ்சி விடுத்தாம். ஆகமங்களுட் காண்க.

பிராணாயாமம் முடிந்தது.

---



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 0? OCT 1913 MADRAS

## பிரத்தியாகாரம்.

பிரத்தியாகாரமாவது:—அறிவின் வழியால் விடய நுகர்ச்சியிற் செல்லு மிந்திரியங்களை அதிற் செல்லவொட்டாது தன்வசப்படுத்தலாம். தினந்தோறுஞ் செய்துவருகின்ற தொழில்களை எல்லாம் ஈசுரச்செயலென்று நினைத்திருத்தலும் அது. காற்றை ஆகருஷணஞ் செய்து கந்த மூலத்திலும் பின்பு கண்டத்திலும் பின்பு இருதயத்திலும் பின்பு நாபியிலுற்ற கந்தத்திலும் பின்பு குண்டலிசத்தியிடத்திலும் பின்பு மூலாதாரத்திலும் பின்பு அபானத்தானத்திலும் பின்பு கடியிடத்திலும் பின்பு கவான் நடுவிலும் பின்பு முழந்தாள் இரண்டிடத்திலும் பின்பு கணைக்காலிலும் பின்பு பாதாங்குட்டத்திலும் நிறுத்தல் வேண்டும். ஓரிடத்தில் காற்று நிறையுமளவும் சித்தத்தை நிறுத்திப் பின்பு மற்றொருதானத்தில் செலுத்தலாகிய இதுவுமது. நித்திய நைமித்திக காமியங்களைச் செய்து சிவப்பிரீதி செய்தலும் அது.

சுவத்திகாசனத்திலிருந்து இடைபிங்கலையால் வாயுவை ஆகருஷணஞ் செய்து பாதமுதல் சிரசுவரை மாட்சிமை பொருந்தப் பூரித்து பின்பு இருதாள், மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம், நாக்கு, புருவநடு, நுதல், சிரம் ஆகிய ஒன்பது இடங்களும் சயமடைந்த பின் ஒரு தானத்தில் சித்தத்தை நிறுத்தி அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் ஆகிய ஐந்தெழுத்தை உச்சரித்தலும் அது.

உடல், கரணம், வினை ஆகிய இவைகளை ஆன்மாவென்று கூறும் ஞானத்தை ஆகருஷணஞ்செய்து சிவபெருமானிடத்து நிறுத்துத

பிரத்தியாகாரம் முடிந்தது.

## தாரணை.

தாரணையாவது:—சரீரத்தின் நடு வெளியிலும், பிராணவாயுவிலும், உதராக்கினியிலும், ஜலத்தின் பாகத்திலும், பிருதிவியின் பாகத்திலும் முறையே ஆகாயத்தையும், காற்றையும், தீயையும், நீரையும், பூமியையும், பேதமின்றித் தாரணைசெய்து பிரணவத்தைச் செபஞ்செய்தலாம். முழங்கால்வரை பிருதிவியின் பாகம். குதம்

வரை நீரின் பாகம். இருதயம் வரை அக்கினியின் பாகம். கண்டம் வரை காற்றின்பாகம். சிரம்வரை ஆகாசபாகம். இவ்வைந்து தானங்களில்முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய இவர்களைப்பாவித்தலும் அது. மனத்தில் சந்திரனும், காதுகளில் திக்குகளும், வாக்கில் அக்கினியும், கையில் இந்திரனும், அடிகளில் உபேந்திரனும், அபானத்தானத்தில் மித்திரரும், குய்யத்தானத்தில் பிரசாபதியும், தொக்கில் காற்றும், நேத்திரத்தில் சூரியனும், நாக்கில் வருணனும், மூக்கில் அசுவினிதேவரும், உயிரில் சிவபெருமானும் அமர்தரத் தாரணை செய்தலும் அது. பிரமாதி சாருபங்களை எல்லாம் அவ்வத்தானங்களிலே பொருந்த ஒடுக்கி எல்லாவற்றுக்கும் மூலகாரணமாய்ப் பேசுதற்கும் எட்டாததாய்ச் சடமாயிருக்குமாயையைச் சிவபெருமானிடத்து ஒடுக்குதலுமது. ஐம்புலன்களையு மனத்தினுக்கவர்ந்து சிவபெருமானது திருவடியில்வைத்தலும் அது. விட்டுணு முதலிய தேவர்களது மாண்பும் வாக்கு மனத்துக்கு எட்டாது விளங்கும் சுயஞ்சோதிப்பிழம்பாகிய சிவபெருமானது புகழும் காலங்களின் பகுதியும் மனிதர்கள் அனுட்டிக்கத்தக்க விதியும் இன்னும் விரித்துரைக்கப்படும் ஏனையும் முழுவறக் கூறுதலினும் சிவபெருமானது திருவாக்காதலினும் வேதாகமங்களைத் தவிர வேறொரு நூல் உலகத்தில் இல்லையென்று மதித்தலும் அது. தேவர் முதலிய யாவர்களும் தேகாதிப்பிரபஞ்சங்களும் ஒன்று, யானும் சிவபெருமானின் வேறல்லன் என்று சிந்தித்துச் சோகம் பாவனை புரிதலும் அது.

தாரணை முடிந்தது.

## தியானம்.

இனித்தியானமாவது:—புருவமத்தியில் நிருமலமான ஆகாயத்தில் பிரகாசமும் ஒப்பில்லாத குளிர்ச்சியும் பொருந்தி விளங்குகின்ற சந்திரமண்டலத்தை முதலில் தியானஞ்செய்து அதன் மத்தியில் பேரானந்தமே சொரூபமாகியும், பரையை ஒருபாகத்தில் உடையவராகியும், பிறையையணிந்த சடைமுடியும் தேவர்களைக் காத்தநீலகண்டமும் முக்கண்ணும் நான்குதோளும் உடையோராகியும், ஆதிமத்தியாந்தமில்லாத அரும்பொருளாகியும் எழுந்தருளி



யிருக்கின்ற சோதியை இடையறாது சோகம்பாவனை செய்தலேயாம். இன்னும் பரிசுத்தமாகிய ஆகாயத்தில் இலக்ஷயோசனை விசாலமுடையதாயும், பூரணப்பிரகாசம் வாய்ந்துள்ளதாயும் விளங்குகின்ற சூரியமண்டலத்தின் மத்தியில் சுவர்ணமொத்த திருவுருவும் முகரோமங்களும் மாலையையணிந்த சிகையும் செவ்விதாகிய முடிமுடையவனும், எல்லா உலகங்களுக்குங் காரணனும், உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனும், காள்கண்டம் திரிநேத்திரம் சதுர்ப்புயம் உடையவனும், நிருமலனும், இன்னொரு தேவரைக் குறித்துக் குவியாத கையையுடையவனும் விளங்குகின்ற பரம்பொருளை இடையறாது சோகம்பாவனை செய்தலுமாகும்.

இன்னும் அணிமா முதலிய எட்டுச்சித்தியாகிய தளங்கள் வாய்ந்து வித்தியாதத்துவமாகிய கேசரங்கள் பொருந்தி ஞானமாகிய நாளத்தைப்பெற்று மகதத்துவமாகிய கந்தம் படைத்துவிளங்குகின்ற இருதய தாமரையின் மத்தியில் பலசுவாலைகளையுடையதாய்ப் பாதமுதல் சிரசளவுந் தபிப்பதாய் வாயுவில்லாத இடத்தில் பிரகாசிக்குந் தீபம்போலச் சொலிப்பதாகி நீலமேகத்தின்மத்தியில் பிரகாசிக்கின்ற மின்னலைப்போல விளங்கும் அக்கினியை உள்ளத்தில் தியானித்து அதன்மத்தியில் சுயம்பிரகாசனாய் விளங்குகின்ற பரமசிவத்தைச் சோகம்பாவனை செய்தலுமது. இவ்விதமாக வேதங்கள் கூறும்.

இன்னும் மூலாதாரமாவது குதத்துக்கு இரண்டங்குலத்துக்கு மேல் இலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழ் என அறிக. இதற்கு வடிவு முக்கோணமாயிருக்கும். செந்தாமரை இதழ்கள் நான்கு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் வகரமுதலான நான்கு. இவ்விதழ்களுக்கு அதிதேவதைகளாவன:—விநாயகன், வைரவன், க்ஷேத்திரபாலன், சண்டன் என நால்வர். சுவாதிஷ்டானமாவது:—இதற்குத் தானம் இலிங்கமூலம். இதற்கு வடிவு அறுகோணம்; அநேக காந்தியினையுடைய ஆறிதழ்த்தாமரை. இதினிற்கும் அக்கரங்கள் மூன்றுவதுபகர முதல் லகரம் இறுதியாக ஆறு. இவ்விதழ்களில் நிற்கும் அதிதேவதைகள், பிரதிட்டை, சுத்தசுயிரினி, பாவனை, இருடி, பத்மனி, பத்மயோகி என்றறுவர்.

மணிபூரகம்:—இதற்குத்தானம் நாபி. இதற்கு வடிவு மூன்றுவட்டம். இரத்னப்பிரபை போன்ற பதுமதளங்கள் பத்து. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் மூன்றுவது டகரமுதல் இரண்டாவது பகரம் இறுதியாகப் பத்து. பத்மதளங்கள் பத்தினுமுள்ள அதிதேவதைகள், தூலாராக்ஷி, நீலாராக்ஷி, கைலாசநி, புலங்கேசி, உபாகி, உட்டினிகை, வாசினி, நேத்திரகரி, தவதி, நவதி எனப் பதின்மர்.

அநாகதமாவது:—தானம் இருதயகமலம். வடிவு முக்கோணம். இதற்குப்புறத்தென்ற நிறத்தினையுடைய இதழ்கள் பன்னிரண்டு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் மூதலாவது ககரமுதல் இரண்டாவது டகரம் இறுதியாகப் பன்னிரண்டு. இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் கபினி, பரதனி, சோஷி, கர்மேல்ணினி, வேணி, ஆகூஷணி, சாமுண்டி, விராடி, துர்க்கா, சேடிகா, ஆரணி, சரணி எனப் பன்னிரண்டுபேர்கள்.

விசுத்தி:—இதற்குத்தானம் கண்டம். வடிவு அறுகோணம். இதில் சுவேத பத்மதளம் பதினாறு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் உயிர் பதினாறு. இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் மாண்டி, புடபடி, திரி, சிருங்கி, சுவரா, அசனி, இராத்திரி, தாமகூஷாணி, சாயா, அற்பாசி, நிகாராக்ஷி, துலலாசினி, யூபாசாரினி, காலாசி, கமலா எனப்பதினாறு பேர்.

ஆக்கினை:—இதற்குத்தானம் புருவமத்தியம். வடிவம் வட்டம். செந்தாமரைத்தளங்கள் இரண்டு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் ளக்ஷ என இரண்டு. இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் சுந்தரி, ஆனந்தி என இருவர். இவைகள் எல்லாவற்றையும் மாதனமாகப்பண்ணிக்கொண்டு அதற்கு மேலாகிய பிரமரந்திரத்தில் ஆயிரந்தளத்துடன் கூடிய பதுமதளத்தின்மேல் அநேககோடி சூரியப்பிரகாசம் போன்ற பரமசிவன் எழுந்தருளியிருப்பர். அவரை இடைவிடாது சோகம்பாவனை புரிதலுமது.

இன்னும் விசுத்திக்குமேல் கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி இம்மூன்றும் மூன்றுமண்டலம், அதின்மேல் ஆன்ம அக்குப் பதினாறுதளமும் அதில் லகாரமுதலிய எழுத்துப்பதினாறும், இவற்



றிற்குமேல் விந்துநாதங்களுடன்கூடிய பிரம்மரந்திரம். இதில் பத்மதளம்முன்னூற்றறுபதுடன்கூடிய கமலம் பராசத்திமயமாயிருக்கும். அதில் பரமசிவனை பாவிக்கில் முத்தியடைவர். இவைகளெல்லாம் ஆரம்பதம்பற்றிக்கூறப்படும்.

இன்னும், பூமியின்கண் புண்ணியன் நானேயென்று பாவனை பொருந்தப்பண்ணித் தன் இருதயத்தின் மத்தியில் பாவனைக்கு எட்டாதவனாகியும், பலவற்றுக்கும் சான்றாகியும், வேதசிகையில் வீற்றிருப்போனாகியும் உள்ள பரம்பொருளைச் சோகம்பாவனை கொண்டு தியானஞ்செய்யவேண்டும்.

இன்னும், சச்சிதானந்தசொரூபமாகியும், நித்திய நிமலமாகி நிராமுதல்வனாகியும், தத்துவாதீதனாகியும், சருவ ஆதாரனாகியும், அப்பிரமேயனாகியும், கிரியைமுன்னோனாகியும், கிரியையில்லோனாகியும், புறம்பும் உள்ளும் வியாபித்து நிற்போனாகியும், அரியதில் அரியோனாகியும், அரியன அறிந்தோனாகியும் அரியமுங்கடந்தோனாகியும், சுயம்பிரகாசனாகியும், மூலம் ஈறு இகந்தோனாகியும், முத்தனாகியும், காலகற்பனை கடந்த காரணப்பொருளாகியும், சூக்குமப்பொருளாகியும் விளங்குகின்ற பரமசிவத்தை இரண்டறத் தியானஞ்செய்யவேண்டும். இப்படி இரண்டறத்தியானஞ் செய்கின்றவனைச் சிவனே யென்று கூறுதற்குச் சந்தேகமில்லை. அவனுக்கு எல்லாப்பாவமும் ஒழிந்துவிடும். அவனே முத்திக்கு உரியவன். இந்தப்பிரகாரம் தியானஞ்செய்வானாகில் ஞானத்தைஅடைவன்.

தியானம் முடிந்தது.

---

## சமாதி.

சமாதியாவது:—சுத்த மெய்ஞ்ஞானானந்த சுயம்பிரகாசமாகி விளங்குகின்ற சிவத்தில் அத்துவிதமாகக்கலந்து இன்பத்தை அநுபவித்தலேயாம். அவிதபாவனை செய்தால் பிறவி யொழியாதென்று வேதங்கூறும்.

இன்னும், சரீரம் பிராணவாயு, பொறி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பஞ்சபூதம், மாயை இவைகளை நானென்று கூறும் உணர்ச்சியை ஒளித்துத்தன் உண்மை உணர்ந்து ஆனந்த உருவமாகிய சிவத்தில் ஒன்றாய்க் கூடியாறு எண்ணுதலுமது.

இன்னும் விவேகமாகிய அக்கினியைக்கொண்டு பஞ்சபூதத்தினாகிய அண்டங்களைப் பூதமாத்திரமேயென்று கருதுகின்ற புத்தியை நீக்கி அந்தத்தூலபூதத்தைச் சத்தாதியாமென்று கருதும் விவேகத்தைத் தகித்து அச்சூக்குமபூதத்தை மாயாசொரூபமெனக் கருதும் விவேகத்தைத் தகித்து அம்மாயையை அருட்சார்பினின்று தேயும்படி தகித்து எல்லாவற்றையும் ஆனந்தசொரூபமாகக் கருதி அதின்மூழ்கியிருத்தலுமமது.

இன்னும் பிரணவசொரூபியாகிய பரமசிவத்தை நாதத்தேயிட்டு அகாரம், உகாரம், மகாரம் ஆகிய இவற்றின் சொரூபமாகத் தியானித்து பின்பு அகாரம், உகாரம், மகாரம், நாதம் ஆகிய நான்கையும் முறையே இருக்கு யசுர் சாமம் அதர்வணமாகவும், பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரனாகவும், காருகபத்தியம் தக்ஷிணாக்கினியம் ஆகவனீயம் சம்வர்த்தமாகவும், பிருதிவி அந்தரம் சுவர்க்கம் சந்திரலோகமாகவும், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியமாகவும், நாபி இதயம் கண்டம் தலையாகவும், பூதம் பவிஷ்யம் வர்த்தமானம் சாதாரணமாகவும் கருதி, அவ்வை உவ்விலும், உவ்வை மவ்விலும், மவ்வை நாதத்திலும், நாதத்தை ஆன்மாவிலும், ஆன்மாவைத் தன்னிடத்திலும், தன்னைப் பரமசிவனிடத்திலும் கிரமமாக ஒடுக்கிச்சிவமாய் நிற்றலும் அது. இன்னும் கடலின்கண் திரையானது நுரை திவலை குமிழிகளைத் தோற்றி ஒடுக்குதல் போல வாக்குமனாதீதமாயிருக்கின்ற பரப்பிரமமென்னுங் கடலின்கண் விட்டுநீங்காத பராசத்தியாகிய திரையானது, சுவ்வாதும் நாதத்துவமுதல் பிருதிவிதத்துவம் ஈறாகிய சகலங்களும் சராசரங்களாயுள்ள உயிர்களும் என்று சொல்லப்பட்ட நுரை திவலை குமிழிகளைத் தோன்றச் செய்து ஒடுக்குமென்று நான்கு வேதங்களும் கூறுமெனின் அக்கடற்றிரையிற்றோன்றிய இப்பிரபஞ்சத்திலுள் எதனையெமதென்று பிடிப்பம்? எதனை எமது அன்றென்று விடுப்பம்? இங்ஙனம் பற்றுதற்கும் விடுப்பதற்கும் அப்பிரமத்தைவிட வேறின்மையால் நிச்சயஞானத்தால் எல்லாவற்றையும் ஆனந்த சொரூபமாகக் கருதுதலுமது.

அற்றேல் ஆகமங்களுள் பிரபஞ்சம் மாயையினின்றுந் தோன்றி ஒடுங்குமென்று கூறவும் வேதத்துள் இவ்வண்ணங் கூறுதல் மாறு கொள்ளக் கூறலாகாதோவெனின் ஆகாது.



என்னை? முதல்வன் மாயைக்கு ஆதாரமாய் நிற்றல்பற்றி வேதம் அப்படிக் கூறுகின்றதாதலின் ஆண்டு ஐயப்பாடின்மை உணர்க. இது சேற்றினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கயமென்பது போல்வதோர் உபசார வழக்காமென்க. மாயைக்குத் தாரகமாய் நிற்றல்பற்றியே யவ்வாறுரைத்ததென்பது உணர்ந்து கோடற்கே நீரிற்றோன்றி யொடுங்கு நுரைமுதலியவற்றை நீர்க்கிடனாகிய கடலிற்றோன்றி யொடுங்குதல் போலென்று உவமை கூறினதென்க. கடலென்றது நீர்க்கிடங்கொடுத்து நிற்குமாகாயத்தை. நின்ற திருத்தாண்டகத்திலும் பிறவிடங்களிலும் "இருநிலனாய்த் தீயாகி எம்மடிக ணின்றவாறே" என்பது முதலாக எழுந்த தமிழ்வேதத் திருவாக்குகளும் "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே யறிவா யறிகின்றான் றானே யறிகின்ற மெய்ப்பொருளுந் தானே விரிபொழில்பார் ஆகாய மப்பொருளுந் தானே யவன்" என்னும் அம்மை திருவாக்கும் "நுரையுந் திரையுநொப்புறு கொட்பும், வரைவில் சீகர வாரியுங் குன்றாக் கடற், பெருக்குஞ் சிறுக்கும் பிறங்கு[illegible]அன்றி, யெண்ணில வாகியிருங்கடலடங்குந், தன்மைபோலச் சராசரமனைத்தும், நின்னிடைத்தோன்றி நின்னிடையொடுங்கும்" என்னும் பட்டினத்துப் பெருமான் திருவாக்கும், "உலகெலாமாகி வேறாயுடனுமாய்" முதல்வன் நிற்றல் பற்றியாகலின் ஆண்டு ஆசங்கையின்மையுங் கண்டு கொள்க. இவ்வாறன்றி முதல்வன் மாயைபோல முதற்காரணமாவனெனின் அது மேற்கூறிய குற்றத்திற்கு இடனாதலன்றியும் நிருவிகாரியென்னுஞ் சுருதிகளோடு முரணுதலுமுடைத்தென்க.

சமாதி முடிந்தது.

சிவபுண்ணியத்தி னியல்பு முடிந்தது.

---

## நித்தியா நித்திய விவேகம்.

நித்தியா நித்திய விவேகமாவது:—இது நித்தியப்பொருள் இது அநித்தியப்பொருள் என்பதை அறிவினால் நிச்சயித்துணர்ந்து அநித்தியப் பொருளில் விருப்பத்தை ஒழித்து நித்தியப்பொருளில் விருப்பத்தை வைத்தல்.

## இருவினை யொப்பு.

இருவினை யொப்பாவது:—ஒருவன் ஒரு பொதுமகளிர்க்குவீடும் பொசிப்பும் வேண்டிய ஆடையாபரணங்களுங் கொடுத்து அவள் வீட்டிலே பதினைந்து நாளும், குடியிலுள்ளவளுக்கு வீடும் பொசிப்

பும் வேண்டிய ஆடையாபரணங்களுங்கொடுத்து அவள் வீட்டிலே பதினைந்து நாளுமாகப் போசித்து வாழ்ந்திருக்குமிடத்து இல்லறநூல் கேட்ட விடத்திலே கற்புடைய மனைவியோடு கூடியில்லறஞ் செய்கிறதே முக்கியமென்றறிந்து பொதுமகளிரை விட்டுநீங்கி யில்லாளோடுங்கூடி இல்லறஞ் செய்துகொண்டிருக்கையிலே துறவுநூல் கேட்டுத் துறவறமே முக்கியமென்றறிந்து குடியிலுள்ள இல்லாளையுந் தீதென்று கூத்தியாரைப்போலக் கண்டு நீங்கினபின்பு இரண்டு பேரிடத்திலும் விருப்பும் வெறுப்புமில்லாததுபோல, ஒருவன் பாவமும் புண்ணியமுஞ் செய்துகொண்டு வருகையில் அறநூல் கேட்டுப் பாவந்தீதென்றும் புண்ணியமே முக்கியமென்றும் அறிந்து பாவத்தைவிட்டு நீங்கி நெடுங்காலம் புண்ணியஞ் செய்துகொண்டு வருகையில் ஞானசாஸ்திரத்தைக் கேட்டுப் புண்ணியமுஞ் சென்ன மரணத்தைக் கொடுக்கையினாலே அப்புண்ணியத்தையும் பாவத்தைப்போலத் தீதென்று விட்டு நீங்கின பின்பு இரண்டிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி நிற்றலேயாம்.

இன்னும் புண்ணியமும் பாவமும் தம்முள் தராசு நுனிபோல் சமத்துவப்பட்டு அநுபவிக்கவருஞ் சமயமும் அதுவாம்.

இன்னும் சரியானவலியும் விரோதமான பயனுமுள்ள இரண்டு நல்வினைகள் அல்லது இரண்டு தீவினைகள், அல்லது நல்வினையொன்று தீவினையொன்று, இவை ஒரே காலத்தில் பயன்கொடுக்க நேருகையாகும்; இது திரோதான சத்தியைமறுத்து அதின் வழியே அநுக்கிரகசத்திபதிதற்கேதுவாகும்; ஆதலால் அதிகாரிக்கு மேன்மையென்றது. கன்மங்களுக்கு வலி சரியாகாமலும் பயன் விரோதப்படாமலு மிருக்குமாகில் அதின் பயனை அநுபவிக்கவேண்டியது அவசியமாதலால் திரோதான சத்தியை நீக்க முடியாதென்று சரியானவலியென்றும் விரோதமான பயனென்றும் விசேஷணஞ் சொல்லியதென்க. இன்னும் முன்செய்த சஞ்சிதமும் மேற்பிறவிக்கு வித்தாகிய ஆகாமியமும் ஆகிய இரண்டும் ஒத்து அநுபவித்தலுமதுவாம்.

## மலபரிபாகம்.

மலபரிபாகமாவது:—மலநீங்குதற்குரிய காரணங்கள் ஒருங்கு நிகழ்தலாகிய சமயம். மலநீங்குதற்குரிய காரணங்களாவன, சிவபத்தி, அடியார்பத்தி, எனது மலத்தை நீக்கி ஞானத்தைக் கொடுத்து மோக்ஷத்திலே சேர்க்கவல்ல ஆசாரியர் எங்குளார் என்று தேடுதல் முதலாயின.



## சத்திநிபாதம்.

சத்திநிபாதமாவது:—சத்தியினது வீழ்ச்சி; அதாவது திருவருள் மறைதலின்றி பிரகாசித்தலாம். உதாரணம் அவளது பார்வை அவனிடத்து வீழ்ந்திருக்கின்றது என்று சொல்லுதல் போல வென்க. இந்தச்சத்திநிபாதத்திற்கு அடையாளமாவது சமுசாரத்தில் வெறுப்பும் முத்தியில் விருப்பும் சிவபத்திமுதலானவையுமாம். இந்தச்சத்திநிபாதம் நான்கு வகைப்படும். அவையாவன நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்பனவாம். நிவிர்த்தி சத்தி பதிந்தபொழுது மந்தம் என்று பெயர். அப்பொழுது நித்தியாநித்திய விவேகந்தோன்றி விடயங்களில் விரத்திவரும். பிரதிட்டா சத்தி பதிந்தபொழுது மந்ததரம் என்று பெயர். அப்பொழுது நித்தியாநித்திய விவேகமும் விரத்தியும் உண்டாகும். வித்தியாசத்தி பதிந்தபொழுது தீவிரசத்திநிபாதம் என்று பெயர். அப்பொழுது சிவஞானப்பிரகாசம் வரும். சாந்திசத்தி பதிந்தபொழுது தீவிரதரம் என்றுபெயர். அப்பொழுது நிர்விகார ஞானத்தோடு உபசாந்திவரும். இந்தச்சத்திகளுக்குச் சத்திமானாயிருக்கின்ற சிவனுடைய நாமமும் நிவிர்த்தீசன், பிரதிஷ்டேசன், வித்தீசன், சாந்தீசன் என்று பேசப்படும். இந்த ஈசுவர சத்தி பதிந்தமாத்திரத்தில் ஆணவ மலத்தினாலே ஆன்மாவை விஷயோன்முகமாகப் பண்ணுவிக்கிற திரோதான சத்தியானது மலத்தைச் செலுத்தாமல்விடும். அந்தத் திரோதான சத்தி நிவிர்த்தியான ஆன்மாவுக்குத் துக்கசாகரமான சமுசாரத்தில் சடிதி வைராக்கியமுண்டாகும்; கண்ணைப்பெற்றவன் காட்சியை யிச்சிக்குமாறு போல ஞானதிருஷ்டியைப்பெற்ற ஆன்மா சிவனுடைய பாதாரவிந்த தரிசனத்தில் இச்சையுண்டாகி எப்பொழுது தரிசிப்பேன் எப்பொழுது பந்தத்தினின்றும் முத்தனாவேன் யார் அவரைத்தரிசிப்பிக்கிறவரென்ற புத்தியுடையவனாயின் இவ்வாறு சமுசாரத்தில் பயப்பட்டிருக்கிறஅவ்வான்மாவை ஆசாரிய மூர்த்திமானாகிய சிவன் சத்திநிபாதாநுகுணமாகவநுக்கிரகம் பண்ணுவன். சத்திநிபாதாநுகுணமாக அநுக்கிரகமாவது மந்ததரசத்திநிபாதத்தை யுடையவனுக்கு நிவிர்த்திகலையிலுண்டான புண்ணிய பாவங்களைச் சோதித்துப் பிருதிவியாதி ஆகாசபரியந்த முண்டான தத்துவங்களைத்தரிசித்து நீங்கும்படி யுபதேசித்துப் பிரமாண்டமேலுள்ள உலகங்களில் கூட்டுவது. மந்தசத்திநிபாதமுடையவனுக்கு நிவிர்த்தி பிரதிட்டை

இரண்டுகலையிலுண்டான புண்ணிய பாவங்களைச் சோதித்துப் பிருதி
வியாதி பிரகிருதி பரியந்தம் உண்டான தத்துவங்களைத் தகித்து
நீங்கும்படி உபதேசித்து புருட தத்துவத்துக்கு மேலான தத்துவ
ங்களில் பிரளயாகலருக் கிருக்கும்படி கூட்டுவது. தீவிரசத்திநி
பாத முடையவனை நிவிர்த்தி பிரதிட்டை சாந்தி என்னு மூன்று
கலையுஞ் சோதித்து பிருதிவியாதி மாயாந்தந்தகித்து நீங்கும்படி
உபதேசித்து சுத்தவித்தையாதி அபரமுத்திஸ்தானமாகிய சுத்த
த்துவ வாசியாகப் பண்ணுவது. தீவிரதர சத்திநிபாத முடைய
வனைப் பஞ்சகலையுஞ் சோதித்து சமாகிதமும் பிரகாசமும் காட்சி
அனுமான முதலிய பிரமாணங்களால் அறியக்கூடாததும் முப்பத்
தாறு தத்துவாதீதமும் அகண்டாகார சச்சிதானந்த சொரூபமுமா
யுள்ள பரமசிவத்திலே வேறறத் ததாகாரமாம்படி செய்வது.

சிவன் தானே ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனிகொண்டு
வருவாரென்பதற்குப் பற்பல குற்றங்களுண்டு. அவையாவன ஒரு ஆசா
ரியரான ஆன்மாவானது பிதாவினுடைய சரீரத்திலே இரண்டு
மாதங்கட்டுப்பட்டுக் கிடந்து பிதாவானவர் தன்னுடைய மனைவி
யோடு சையோகஞ் செய்கிற காலத்திலே சுக்கிலவழியே புகுந்து
மாதாவினுடைய வயிற்றிலே கருப்பாசயக் குழியிலே பத்துமாதங்
கட்டுப்பட்டுக் கிடந்து பின்பு பூமியிலே பிறந்து மலமூத்திராதிகளை
யளைந்து கிடந்து வளர்ந்து ஒரு வித்தியா குருவை யடைந்து தன்
ஆணைப்பட்டு அட்சர அப்பியாசம் பண்ணிப் பின்பு ஒரு வித்வா
னிடத்திலே போய் அவனுக்கேவல்செய்து வித்தியாப்பியாசம் பண்
ணிப் பின்பு ஒரு ஆசாரியரையடைந்து சமய விசேட நிருவாணம்
ஆசாரியாபிஷேகம் பண்ணிக்கொண்டு இன்னான் மகனின்னானென்
றிருந்து சயங்குட்டஞ் சலக்கழிச்சல் முதலாயின வியாதிகளையடை
ந்து மரணமாதல் முதலான தன்மையும் "மாயா வொருவன் மாயா வுரு
வினை யெய்தானெய்தவசெம்மனோரே" யென்றிருக்கிற படியினாலே
பிறவா முதல்வன் பிறந்தானென்றும் "உணர்வாய் நின்ற ஞானக்கூத்
தன் ஒரு மூர்த்திகொடுகுறுகி" என்று "மூன்னுமருட்குருவாகிவந்து"
என்றுமிருக்கிற வசனங்களுக்கெல்லாம் விரோதமுண்டெனிற் கரு
த்தா ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருதலாவது,
சுத்தான்ம சைதன்னியமேதனக்குச்சொரூபமாகக்கொண்டு தயிரின்



நெய்போல ஆன்மாவில் விளங்கி நின்று உணர்த்துதலால் இக்குற்றங்
கள் ஒன்றும் அவனுக்கு இல்லையென்றறிக. இது ஆவேச பக்கம்.
இதனை அதிட்டான பக்கங் கொள்வார்க்கு வேற்றுச்சமய குரவருங் குர
வராவார் சேறலின் அஃது ஈண்டைக்கமைவுடைத்தன்றென்பதாம்.

இனி ஆசாரியர் தீக்ஷைசெய்து மலங்களை நீக்குதலாவது தீ
க்ஷையில் நாலு வருணத்தாரும் அனுலோமர் முதலிய அறுவரும்
அதிகாரியாவர். அனுலோமர் சவர்ணன் முதலானவர். அவர்க
ளில் பிராமணனுக்கு க்ஷத்திரியப் பெண்ணிடத்திற் பிறந்தவன்
சவர்ணன். வைசியப் பெண்ணிடத்துப் பிறந்தவன் நிஷாதன்.
சூத்திரப் பெண்ணிடத்துப் பிறந்தவன் பாரசவன். க்ஷத்திரிய
னுக்கு வைசியப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் மாகிஷ்யன். சூத்
திரப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் தௌஷ்யந்தன். வைசியனு
க்குச் சூத்திரப்பெண்ணினிடத்துப் பிறந்தவன் உக்கிரன். இந்தப்
பத்துப்பேர்களைத்தவிர மற்றவர் தீக்ஷையில் அதிகாரிகளாகமாட்
டார். ஆகவே நாலு வருணத்தாரும் அனுலோமர் முதலிய அறு
வருந்தவிர மற்றவர்க்கு ஆகமம் ஓதுதலில் அதிகாரமில்லையாம்
போது அதற்கு அங்கமாகிய தீக்ஷையிலும் அதிகாரமில்லையாகும்.
ஆனால் மூன்று வருணத்தாருக்கும் தீக்ஷையில் அதிகாரமுண்டு.
சூத்திரர்களுக்கில்லையென்று ஆகமங்களில் விலக்கியிருந்தபோதி
லும் கட்குடியாமை மாமிசம் புசியாமை சௌசாசாரக் கிரியையில்
அன்புடைமை முதலிய இலக்கணம் வாய்ந்துள்ள சிவபத்தரான
சூத்திரருக்கு தீக்ஷையிலதிகாரமுண்டு, மற்றவருக்கில்லையென்று
பிரமாணமிருப்பதால் விலக்கியது மற்றஅசச்சூத்திரரை யென்றறிய
வேண்டும். ஆகையால் சற்சூத்திரருக்கே தீக்ஷையிலதிகாரமுண்டு.

நாலு வருணத்தாருக்குங் குருத்துவமுண்டு. ஆனால் அவர்களு
க்குள்ளே பிராமணன், பிராமணன் முதலாகிய நாலு வருணத்தவர்
அனுலோமர் முதலிய அறுவர் ஆகிய இப்பதின்மருக்குங் குருவாக
லாம். க்ஷத்திரியன், க்ஷத்திரியன்முதலான ஒன்பது பேருக்குங்
குருவாகலாம். வைசியன், வைசியன் முதலான எட்டுப்பேருக்குங்
குருவாகலாம். சூத்திரன், சூத்திரனுக்கு மாத்திரம் குருவாவான்.
ஆச்சிரம முறையினும், சந்நியாசி, சந்நியாசிமுதல் நாலாச்சிரமிகளு

க்குங் குரு. வானப்பிரஸ்தன், வானப்பிரஸ்தன்முதல் மூன்றாச்சிரமிகளுக்குங் குரு. கிருகஸ்தன், கிருகஸ்தன் பிரமசாரி இருவருக்குங் குரு. பிரமசாரி, பிரமசாரிக்கேகுருவாவான். ஆனால் பிரமசாரி நைஷ்டிகனாயிருந்தால் சன்னியாசி தவிர மற்ற மூன்று ஆச்சிரமிகளுக்குங் குருவாகலாம். சொல்லிய முறைப்படி குரு அகப்படாவிடில் க்ஷத்திரியன் பிராமணனுக்கும், வைசியன் க்ஷத்திரியனுக்குங் குருவாகக்கூடும். ஆனால் சூத்திரன், சூத்திரனுக்கே குருவாவான், ஒருபோதுந் தனக்கு மேலான வருணத்திற்குக் குருவாக மாட்டான். இனி, சந்நியாசிகள், தபஸ்வி, விவிதிஷு, வித்துவான், என மூன்று வகைப்படுவர். தனிமையாக அமர்ந்து ஞானபூசையும் இரந்துண்டலுஞ் செய்து இடையறாது நிட்டை கூடுவோர் தபஸ்வியெனவும், அறம்பொருள் இன்பம் வீடு பேறு என்பவற்றை மாணாக்கர்கட்கு உணர்த்தலோடு மற்றைய கிருத்தியங்களையு முடையவர் விவிதிஷு எனவும், அறநூல் முதலியவற்றிற்கு வியாக்கியானம் பண்ணுதலோடு மற்றைய கிருத்தியங்களையும் உடையவர் வித்துவான் எனவுங் கொள்க.

நான்காம் வருணத்து விரத்தருக்குக் குருத்துவம் இல்லையென்றும்; கிருகஸ்தருக்கே குருத்துவம் உண்டென்றும் சிலர் கூறுவாராயினர். அவர் காமிகாகம சுலோக மொழிபெயர்ப்பாகச் சைவசமய நெறி நூலுடையார்! "சூத்திரனுந் தேசிகனா வான்மாணுந் துறவி, சாத்திரத்தின் மூன்றுமுணர்ந்தால்" என்று கூறிய திருக்குறளும், நான்காம் வருணத்திலே துறவறத்தினராய திருநாவுக்கரசுநாயனார் சைவசமயபரமாசாரியராகவும்; மெய்கண்டதேவர் திருக்கைலாயசந்தான பரமகுரவராகவும் எழுந்தருளியிருந்தமையும் நான்காம் வருணத்து விரத்தருக்கே விசேட குருத்துவம் உண்டென்பதற்குச் சான்றாதலைச் சித்தசமாதானத்தோடு உணர்ந்து தெளிவாராக. நான்காம் வருணத்துக் கிருகஸ்தருக்கும் குருத்துவம் உண்டென்பது ஆசாலை முதலியவற்றால் கொள்ளற்பாற்று. இன்னும் இதன் விரிவெல்லாம் ஆசிரியர் சிவஞான யோகிகள் செய்தருளிய சிவஞானபோத திராவிட மகாபாடியத்திற் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.



இந்தப்பாகுபாடெல்லாம் கிரியைக்கன்றி ஞானத்திற்கில்லையென்றறிக. இப்படியே ஆச்சிரம முறையினும் வானப்பிரஸ்தன், சந்நியாசிக்கும், கிருகஸ்தன், வானப்பிரஸ்த சன்னியாசி இருவருக்கும், பிரமசாரி, கிருகஸ்தவானப்பிரஸ்த சந்நியாசி மூவருக்கும் குருவாகக்கூடும். நாலு வருணத்திலும் நன்னடை வயசு குணம் வடிவு முதலான நற்குணமுள்ளவனும் குற்றமில்லாதவனும் இருக்குமவனே குருவாவான். பின்னும் இப்படிப்பட்ட குருவானவன் பசுத்துவ சம்பந்தமுள்ளவனல்லன். வேதாகமாதிகளில் சிரவண மனன நிதித்தியாசன முதலானவற்றின் பரிபாகானுகுணமாகவுண்டான சாக்ஷாத்காரத்தால் சம்பூரணமாகக் கிடைத்த சிவபாவமுள்ளவனே யாவான். பரம்பொருளே ஆசாரிய மூர்த்தியை யதிஷ்டித்து நாலுவிதமான சத்திநிபாதத்திற்குத் தக்கபடி சகலர்களையும் அனுக்கிரகஞ் செய்கின்றார். கும்பாதிகளிற்போல குருவினிடத்திலும் சிவன் சாந்நித்தியமாகவந்து அனுக்கிரகஞ் செய்கின்றமையால் ஆசாரியன் சிவனென்பது உபசாரமன்று. சாக்ஷாத் சிவனே யென்றறியவேண்டும்.

## தீக்ஷை.

இப்படிப்பட்ட குருவினிடத்தினின்றும் ஆகமங்களில் சொல்லிய விலக்கணமுள்ள அதிகாரியானவன் முதலில் சமயதீக்ஷை பெறவேண்டும். தீக்ஷையின் பொதுவிலக்கணமாவது ஆகமத்திற் சொல்லிய நித்திய கன்மாதிகளில் அதிகாரம். அல்லது ஆகமசிரவணத்தில் அதிகாரம். இவ்விரண்டிலொன்றைச் சாதிக்கவல்ல சிவசத்தி வியாபாரமாகும். அதுவும் கிரியாசத்தி வியாபாரமென்றறிக. அவற்றுள் சமயதீக்ஷை விசேடதீக்ஷை இரண்டும் சிவாலயத்திருப்பணி சிவபூசை முதலானவை நித்திய கன்மமுதலானவை இவற்றில் அதிகாரத்தையும். ஆகமசிரவணத்தில் அதிகாரத்தையும் கொடுக்கும். நிருவாணதீக்ஷை ஆகமசிரவணம், மனனமுதலானவற்றில் அதிகாரத்தைக்கொடுக்கும்.

வேதமோதுதற்கண்ணும் வைதிக ஆசாரத்தின் கண்ணும் உபநயனப்பேறுடையார்க்கன்றி யதிகாரமின்மைபோலச் சைவாகமமோதுதற்கண்ணுஞ், சைவாசாரத்தின் கண்ணுஞ் சிவதீக்ஷைப்பேறுடையார்க்கன்றி அதிகாரமில்லையெனக்கொள்க.

அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தருவது தீக்ஷை. தீ—ஞானம். க்ஷா-பாசத்தைக் குறைப்பது. சிவாகமத்திற் கூறிய தீக்ஷையின் உயர்ச்சி, வாயவ்விய சம்ஹிதையிலே, சைவநூலிற் கூறப்பட்டதும் பாசமூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறுயாதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மாந்தருக்கு மேன்மையன்று. ஆதலால், தீக்ஷையிருந்தான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும் மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷம் இல்லை. அந்நியவசத்தியையின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர் போல்வர், தோணியின்றிக் கடலைக்கடக்க விரும்பினவர் போல்வர் என்று கூறுமாற்றானும் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்தும், விஷ்ணு முதலிய பசுக்களைப் பசுபதியாகிய சிவபிரானோடு சமமெனக் கொள்வோராகிய புல்லறிவாளர் தீக்ஷையை இகழுங் கூற்றுத் தூரம் போய்த் துச்சமாய்விடும் என்றறிக.

சங்கராசாரியர் இயற்றிய பிரபஞ்சசாரத்தில் பஞ்சாக்ஷர ஜபவிதானப் பிரகரணத்தில் சிவாகமோக்த சிவசமஸ்காரரூப சடத்துவசோதன மென்னும் நிருவாணதீக்ஷையைச் செய்துகொண்டவர்களே பஞ்சாக்ஷரஜபத்துக்கும் சிவபூசைக்கும் அதிகாரிகள் என்றும், இந்தத்தீக்ஷை ஞானவதி, கிரியாவதி என இரண்டு பேதம் என்றும், தேசகாலாதிகார சம்பத்துக்களுக்கு ஏற்ப இந்த அநுட்டானஞ்செய்து கொள்ளல்வேண்டும் என்றும் சொல்லியிருத்தல் காண்க.

சூதசங்கிதையிலே யஜ்ஞவைபவகாண்டத்தில் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் சடத்துவசோதனரூபமான கிரியாவதிதீக்ஷை விசேடித்துக் கூறப்பட்டிருக்கின்றது. சூதசங்கிதைக்கு வியாக்கியாதாவும் சதுர்வேத பாஷ்யகர்த்தாவுமாகிய வித்தியாரண்ணியர் என்று பிரசித்திபெற்ற மாதவாசாரியர் சூதசங்கிதை முப்பத்தைந்தாவது அத்தியாய வியாக்கியானத்தில் சங்கராசாரியர் பிரபஞ்சசாரத்திற் சொல்லியபடி தீக்ஷை செய்துகொள்ளவேண்டு மென்று வியாக்கியானஞ் செய்திருக்கிறார். ஆதலால் வைதிகப் பிராமணர்களுக்குத் தீக்ஷையில்லையென்று கூறுவது ஒரு சிறிதும் பொருந்தாது. வைதிகநிஷ்டருக்குங்கூடப் பாச வியோகஞ் செய்யத்தக்க தீக்ஷையுண்டு.



கேநோபநிஷத்திலும், தாபநீயோபநிஷத்திலும் ஏனைய வுபநிடதங்களிலும் ஹௌத்திரி என்ற கிரியாவதிக்கு இதரமான ஞானவதி தீக்ஷை கூறப்பட்டிருக்கின்றது. அந்த ஞானவதி தீக்ஷா விஷயங்கள் எல்லாம் வேதங்களுக்குஞ் சம்மதமே. ஆகையால் தீக்ஷை வைதிகர்களாலும் செய்து கொள்ளத் தக்கதே என்பது காண்க.

அத் தீக்ஷை, சாதார தீக்ஷை நிராதார தீக்ஷை யென இரண்டு வகைப்படும். அவற்றுள் சாதார தீக்ஷை மும்மலங்களுமுடைய சகல வர்க்கத்திற்கு [illegible] வகைச் சத்திநிபாத முறையில் வைத்து அருளுணர்த்த வேண்டுதலின் இவ்வுலகின்கண் அவ்வுயிர்களுக்கே குருமூர்த்தியை அதிட்டித்து நின்று செய்து மலத்தை நீக்குவன். சாதாரம் ஆதாரத்தோடு கூடியது.

நிராதார தீக்ஷை சகலவர்க்கம்போல குருவடிவின் மறைந்து நின்று படர்க்கையான் உணர்த்தப்பட்டு அருளுணர வேண்டாத விஞ்ஞானகலர் பிரளயாகலர் என்னும் இருதிறத்தார்களுக்கும் முறையே உண்ணின்றும் முன்னின்றுஞ் செய்து மலத்தை நீக்குவன். நிராதாரம் ஆதாரம் வேண்டாது செய்வது.

அவ் வுயிர்க்கண்ணதாகிய மலபரிபாகம் பலவகைப்படுதலின் அதற் கேற்ப ஆசிரியன் அம்மலத்தைக் கெடுக்கும்படி செய்யும் சாதார தீக்ஷையும் பலவகைப்படும். அவையாவன:—நயனமும் பரிசமும் வாக்கும் பாவனையும் நூல்களும் யோகமும் ஔத்திரியும் சத்தியோசாம்பவ முதலியனவுமாகப் பலவகைப்படும். அவைகளுள் நயனதீக்கை முதலிய ஆறும், சுதந்திரமாகச் செய்யப்படுவனவும், ஔத்திரிக்கு அங்கமாகச் செய்யப்படுவனவுமென்று இருவகைப்படும். அவற்றுள் முன்னையவை ஔத்திரிக்கு உரியரல்லாதாருக்குச் செய்யப்படுவன வெனக்கொள்க. ஹோதகஹிதம் ஹௌத்திரி. ஹோமம். நயனதீக்கையாவது, மீனானது சினையைப் பார்த்த மாத்திரத்திலே யதனைப் பேதித்துத் தன்னைப்போ லாக்குமாறுபோல ஆசாரியன் உண்மைப்பொருளில் சித்தத்தை வைத்து அவனிடத்தில் கட்டுப்பட்ட பந்தங்களை நீக்குக லாம்.

பரிசதீக்ஷையாவது:—வாரணமானது தன் முட்டையைப் பரிசித்துத் தன் வண்ணமாக்குமாறுபோல ஆசாரியன் தனது வலது கையில் சிவ அத்தம் கற்பித்துச் சோதிரூபமாகத் தியானம்பண்ணி மாணவகன் தலை தொடங்கி சர்வாங்கமும் பரிசித்து மலத்தை நீக்கித் தன் வண்ணமாக்குதலாம்.

மானததீக்ஷையாவது:—ஆமையானது தன் முட்டையை நினைந்து தன் வண்ணமாக்குமாறுபோல ஆசாரியன் தனது இரேசக வாயுவினாலே புறப்பட்டுச் சீடனுடைய பூரக வாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து சிஷ்ய சைதந்நியத்தை வாங்கித் துவாதசாந்தமளவாகக் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்தில் சிவசைதந்நியத்துடன் கலந்து உப்பும் அப்பும் ஏகசமானதுபோலப் பாவித்துச் சிஷ்ய சைதந்நியத்தைச் சிஷ்ய தேகத்தில் பிரதிஷ்டை பண்ணுவது.

வாசகதீக்ஷையாவது:—வருணாச்சிரம குணமாகப் பஞ்சாக்கரத்தை உபதேசம் பண்ணுவது.

சாத்திரதீக்ஷையாவது:—முடிவற்ற சாஸ்திரார்த்தங்களையெல்லாஞ் சங்கிரகித்துப் பதிபசுபாசத்தினுடைய இலக்கணங்களையுஞ் சிவ சீவர்களுடைய ஐக்கியத்தையும் சத்சம்பிரதாயமாகப் போதிப்பது.

யோகதீக்ஷையாவது:—ஆசாரியன் நாடிசந்தான மார்க்கத்தினாலே மாணாக்கனுடைய இருதய கமலத்திலே பிரவேசித்து அவ்விருதய கமலத்தினின்றே விந்து ரூபமான ஆன்மாவைச் சுழுமுனை நாடிவழியாகக் கொண்டு சென்று சிவனிடத்திலே யோசிப்பித்து நிறுத்துகையாம்.

இனி ஔத்திரி தீக்ஷையாவது:—ஞானவதி கிரியாவதியென்று இரண்டு வகைப்படும். அவற்றுள் ஞானவதியாவது குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சுருக்கு, சுருவமுதலிய அனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்வதாம். இன்னும் ஞானவதி, சத்தி சாம்பவி என்று இரண்டு வகைப்படும். சத்தி—யோகதீக்ஷை. சாம்பவி-ஞானதீக்ஷை. சத்தி



யாவது புறம்பேபோற் குண்ட மண்டலாதி மனச்சிறப்புச் சங்கற்பத்தாற் குறித்துப்பண்ணுவது. சாம்பவி—மனுதீதசிற்சத்தியின் சிறப்புப்பார்வையாற் பாசம் நீங்கப்பார்த்துப் பண்ணுவது.

கிரியாவதியாவது ஆகுதிமுதலியவனைத்தும் புறம்பே நிலவும்படி செய்வதாம். இங்ஙனம் இருவகைப்பட்ட ஔத்திரிதீக்ஷைதான் இன்னும் நிர்ப்பீசம் சபீசமென இரண்டுவகைப்படும். அவ்விரண்டினுள் நிர்ப்பீச தீக்ஷையாவது மலபரிபாகமுடையவராயும் தீக்ஷையின்பின் ஒருதலையான் வழுவின்றிச் செய்யக் கடவனவாய சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றல் அறிவிலராகிய பாலர் அறிவினர் முதலியோர், மாதர் நோயர் முதலாயினார்க்கு ஆசாரியன் அதனை யுணர்ந்து வினைக்கன்மங்களோடுகூட சமயாசாரங்களையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து நித்திய கன்மமாத்திரையின் ஏன்றவாறு அனுட்டிக்கும் அதிகாரமுடையவராகச் செய்வதாம். இந்த நிர்ப்பீசமானது சமயதீக்ஷை விசேடதீக்ஷை நிருவாணதீக்ஷையென மூன்றுவகைப்படும். நிருவாணம், சத்தியோநிருவாணம் அசத்தியோநிருவாணமென இரண்டு வகைப்படும். சத்தியோ நிருவாணதீக்ஷைபெற்றோர் தீக்ஷைபெற்றபொழுதே சரீரம் நீங்கி முத்தியைப்பெறுவர். அசத்தியோ நிருவாணதீக்ஷை பெற்றோர் தீக்ஷையிற் சஞ்சிதமும் ஆகாமியமுஞ் சோதித்துச் சரீரம் நிற்பதற்கு ஏதுவாய்ப் புசிக்கப்படும் பிராரத்தகன்மம் சோதிக்கப்படாமையால் ஆயுள்முடிவில் சரீரம்நீங்கி முத்தியையடைவர். சாதகதீக்ஷை பெற்றுச் சிவபத்தி சிவபூசைசெய்துகொண்டு பின்பு வித்தியேசுரர் முதலியோர் பதங்களை விரும்பினவர் அந்தப்பதங்களைப்பெறுவர். அப்பதங்களில் இருப்பவர்க்குள் பற்றற்றவர் அப்பொழுதே முத்தியையடைவர். அல்லாதார் மகாசங்காரகாலத்து முத்தியைப்பெறுவர். சமயதீக்ஷைபெற்றோர் உருத்திரபதமடைவர். விசேடதீக்ஷை பெற்றோர் மகேசுரபதம் அடைவர். ஈண்டு உருத்திரபதம் என்றது குணதத்துவமத்தகத்தில் இருக்கும் உருத்திரர்பதமேயாம். ஈசுரபதம் என்றது பிரகிருதிக்குமேல் மிச்சிரத்துவாவில் முந்தின தத்துவமான அராகதத்துவபதமேயாம். ஈசுவரனால் அதிட்டிக்கப்படுவதாகலான் அந்தத்தத்துவத்தை அடைவதே ஈசுரபதத்தை

அடைவது என்று சொல்லப்படும் நைமித்திகத்துமாம். காமியத்துவம் அதிகாரம் கொடாமை. இந்த நிர்ப்பீசம் நிரதிகாரதீக்ஷையெனப்படும். இனிச் சபீசதீக்ஷையானது மலபரிபாகத்தோடு கூடக் கற்றறிந்து ஒழுக்கவழியில் வழுவாதுநிற்கும் ஆற்றலிற்குடையு உத்தமத்திறத்தமாராயினோர்க்கு ஆசாரியன் அங்கீகரித்து சமயாசார கன்மமாத்திரமே நிறுத்தி ஏனையவற்றைச் சுத்தி செய்தொழித்து நித்திய நைமித்திககாமியமாகிய மூன்றிலும் போதிகாரமுடையராகச் செய்வதாம். இத்தீக்ஷைப்பேறுடையார் சாதகரும் ஆசாரியருமென்றிருதிறப்படுவர். இது சாதிகாரதீக்ஷையெனவும் பெயர் பெறும். இன்னும் இந்தச் சபீசதீக்ஷை உலோகதருமிணி சிவதருமிணி யென்று இரண்டுவகைப்படும். ஆசாரியன் மாணாக்கனுக்குப் பாவ கன்மத்தைமாத்திரம் சோதித்துப் புண்ணியத்தைச் சோதியாமல் வைத்துச் சிகாச்சேதமின்றிப் பதப்பிராப்தியாகிய புவனங்களில் யோசனைசெய்யுந்தீக்ஷை உலோகதருமிணி யெனப்படும். மோட்சகாமியாகிய மாணாக்கனுக்கு ஆசாரியன் புண்ணிய பாவமாகிய விரண்டினையும் ஞானிதமாகிய சஞ்சிதகன்மங்களையும் சுத்தி செய்து விதிவழிச்செய்யப்பட்டுச் சிகாச்சேதத்தால் எழுபிரகாரம் அபிமந்திரிக்கப்பட்டதாய் ஞானசத்திரூபமாயிருக்கிற சுத்திகையைக்கொண்டு பிரமரந்திரத்துக்கு மேலே பன்னிரண்டு அங்குலமுடைய சிகையில் சத்தி, வியாபினி, சமனை, உன்மனை யெனக் கூறிய சத்திகள் நாலுக்குமேல் சிவம் வியாபித்து நிற்கையால் அடியில் எட்டங்குலம் விட்டு ஆன்மாக்களுக்கு மூலபாசமாய் அவர்கள் ஞானக்கிரியைகளைத் திரோதானஞ்செய்யுந் திரோதானசத்திரூபமாயிருக்கிற மேல்நாலங்குலமுடைய சிகையை அத்திரத்தால் சேதிக்குமது சிவதருமிணி யெனப்படும். இவ்வாறு முதல்வன் குருமூர்த்தியை அதிட்டித்துநின்று மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலைகளென்று அறுவகைப்படும் வழியில்லாத அத்துவாக்கள் முறையே ஒன்றின் ஒன்று அடங்க, கலை திரோதானசத்தியிலும், திரோதானசத்தி சிவத்திலும் அடங்குமாறு உணர்ந்து அவ்வாறு அடக்கி ஞானவதி, கிரியாவதி யென்னும் இரண்டனுள் ஒரு தீக்ஷையானே அறுவகையத்துவாக்களையும் சோதிக்கு முகத்தாற் பிறவிக்கேதுவாகிய மலத்தைக்கெடுத்து எங்கணும் வியாபக



மாகிய சிவம் பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பன். சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகமென்னும் பேதங்களெல்லாம் நிர்ப்பீசம் சபீசமென்னும் இரண்டினுள் அடங்கும்.

தீக்ஷை செய்துகொண்ட பின்பு ஆசாரத்தில் வழுவினால் புத்திபூர்வமாகச் செய்த பாவம் பிராயச்சித்தத்தினாலும், மந்திர திரவியங்களின் உபாயங்களினாலும் பவித்திரத்தினாலும் சுத்தியாம். அபுத்தி பூர்வமாக வழுவினால் அந்தியேட்டிக்கிரியையாற் சுத்தியாம்.

தீக்ஷை செய்துகொண்டபின்பு ஆவசியகமாக அனுட்டிக்கப்படுங் கன்மங்களாவன :—இயமம், நியமம், சிவாலயத்திருப்பணி, திரிபுண்டரம், உருத்திராக்கதாரணம், சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை, அக்கினிகாரியங்கள், குருவசனபரிபாலனம், இயன்றமட்டும் மகேசுவரபூசை முதலாயினவாம். அனுட்டிக்கலாகாத கன்மங்களாவன - நிர்மாலியம்புசித்தல், சிவநிந்தை, சிவனடியார் நிந்தை, சிவசாத்திரநிந்தை, தேவத்திரவியங்களைஉபயோகஞ்செய்தல், உயிர்க்கொலை முதலாயினவாம்.

திரிபுண்டரம், உருத்திராக்கதாரணம் முதலானவைகளை எல்லோரும் நித்தியகன்மம்போல நித்தியமாக அனுட்டிக்கவேண்டும். செய்யாவிடில் பாதகம் உண்டு என்று கூறப்பட்டிருக்கின்றது. காந்தத்தில் திரிபுண்டரம், உத்தூளனம் முதலானவற்றிலும் அவற்றின் பிரமாணத்தைக் கேட்பதிலும் எவர்களுக்கு ஆசை உண்டாகவில்லையோ அவர்கள் மகாபாவிகள் என்று கூறப்படுகின்றது.

வாசிஷ்டலைங்கத்தில் பஸ்மத்துவேஷம் எவர்களுக்குமனத்தில் இருக்கின்றதோ அவர்களின்சாதி சங்கரசாதியாகும். முகத்தில் பஸ்மத்தைக் கண்டமாத்திரத்தில் எவர்களுக்குக் கோபமுண்டாகிறதோ அவர்களின் பிறப்பு சங்கரமாயிருக்குமென்று அறிவுடையோர் அனுமித்து அறியவேண்டும். எவர்களுக்கு சுருதிசொன்ன பஸ்மத்தில் சிரத்தையுண்டாகவில்லையோ அவர்களுக்குக் கர்ப்பாதான முதலிய சம்ஸ்காரமில்லையென்பது நிச்சயம்; என்று கூறப்பட்

டிருக்கின்றது. பராசர உபபுராணத்தில் திரிபுண்டரத்திலும் பஸ்மாவகுண்டனத்திலும் பக்தியில்லாத பிராமணர் முத்தியைக்கொடுக்கின்ற வைதிகமார்க்கத்திற்கு உட்படாதவர் என்று கூறப்பட்டிருக்கின்றமையால் அவர்கள் அவற்றைக் கைவிடுவது சாபபலமென்று கேள்வியாகின்றது.

பின்னும் அந்தப்புராணத்திலேயே வேதம் சிவாகமம் சிவன் திரிபுண்டரம் உத்தூளனம் வித்தை இவற்றின் பெருமையில் சிரத்தை புண்ணியவான்களுக்குத்தான் உண்டாகும். [illegible] ஜென்மந் தொடங்கி ச்ரௌதஸ்மார்த்த கருமங்களை அனுட்டித்து வருகின்றவர்களுக்கு வேதோத்தம மார்க்கத்தால் திரிபுண்டரஞானம் உண்டாகின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும் பிராமணன் நித்தியம் நெற்றியில் குறுக்காக பஸ்மத்தாலே திரிபுண்டரமும் உத்தூளனமும் தரிக்கவேண்டுமென்றும், வேதசித்தமான பஸ்மத்தால் திரிபுண்டரத்தையும் இலிங்கார்ச்சனையையும் மோகத்தாற்கூட ஒருபோதும் விடக்கூடாது என்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்காந்தத்தில் திரிபுண்டரத்தைப் பத்தியினாலே தரிக்கவேண்டும். மனத்தானும் கடக்கக்கூடாது என்றும், பிராமணன் உருத்திராக்ஷத்தைத் தரியாமல் யாதொரு வைதிக கருமத்தை மோகத்தாற் செய்வானாகில் நரகத்தில் விழுவான்: இது என்றும் விதித்திருக்கின்றது. பிரஹந்நாரதீயத்தில் அனேக பிறவியான பின்பு மகாதேவர் அனுக்கிரகத்தினாலே சுபாவத்தில் உருத்திராக்ஷதாரணசிரத்தை உண்டாகின்றது என்றும், கழுத்தில் சிரசில் உபவீதத்தில் காதுகளில் கைகளில் மிகுந்த பக்தியோடு எப்பொழுதும் உருத்திராக்கத்தைத் தரிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியே வாயுவீயத்திலும் பக்தியில்லாமல் உருத்திராக்கத்தைத் தரிக்கக்கூடாது. எப்பொழுதும் பக்தியோடு தரிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இந்தச்சமயிதருமமானது அந்தச் ஜென்மத்தில் விசேட நிருவாண தீக்ஷை கிடைக்காவிடில் சாலோக்கிய பலத்தைக் கொடுத்து இரண்டு ஜென்மம் அல்லது ஒன்று சென்றவுடன் முத்தியைக்கொடுக்கும். சிவதருமோத்தரத்தில் சிவயோகிகளிடத்தில் எப்பொழுதும்



பக்தியுள்ளவர்கள் மகாபோகங்களை அநுபவித்து முடிவில் சிவயோகத்தையுமடைவார்கள். ஆதலால் போகத்தையும் யோகத்தையும் விரும்பினவர்கள் சிவயோகிகளுக்கு இடம் அன்னம் பானம் படுக்கை வஸ்திரம் ஆசனம் முதலானவை கொடுத்துப் பூசிக்கவேண்டும் என்றும், எவனொருவன் சிவயோகிகளிடத்தில் பத்திசெய்கின்றானோ அவன் இரண்டாவது மூன்றாவது சரீரத்தில் யோகத்தையடைவான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தச் சமயிதருமங்கள் புத்திரனுக்கும் சாதகனுக்கும் சாதாரணமேயாகும். ஆயினும் அவர்களுக்கு அசாதாரணமான வேறொருதருமமிருப்பதால் இது சமயிதருமமெனப்படும். இப்படிச் சமயிதருமங்களை அநுட்டித்தவன் விசேடதீக்கையில் அதிகாரம் கிடைத்தபொழுது அந்தத் தீக்கை செய்துகொண்டு சிவபூசை செய்தல் ஆகமமோதுதல் முதலான புத்திர தருமங்களை அநுட்டிக்கவேண்டும். இப்படியே ஆகமவசனப் பிரமாணமிருக்கின்றது.

சிவபூசை செய்யுமிடத்து மானதபூசை விசேடமாகும். அது செய்யச் சத்தியில்லாதவன் வெளிப்பூசை செய்யவேண்டும். வருணாச்சிரம தருமங்களையும் அநுட்டிக்கவேண்டும். அவை தத்துவஞானத்திற்குச் சாதகமாகும். அப்படியே காந்தத்தில் வருணாச்சிராசாரத்தினாலேயே முக்தி, வேறுவிதத்தில் இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றது. அப்படியே வேறிடத்திலும் சனகர் முதலானவரெல்லாம் கர்மத்தாலே சித்தியடைந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனால் கன்மங்களே மோக்ஷத்துக்குக் காரணமாகும், ஞானம் வேண்டுவதில்லை யென்னில் கன்மத்தால் மோக்ஷம் என்பதற்குத் தாற்பரியம் ஞானத்தை உதிப்பித்து அதன் வழியாக மோக்ஷத்தைக் கொடுக்குமென்பது. ஞானதிலகத்தில் தானம் தவம் யாகம் ஓமம் நியமம் தருமம் தீர்த்தம் இவற்றால் பரமபதம் கிடைக்கமாட்டாது. அநேக பாவங்களினாலும் அநேக புண்ணியங்களினாலும் சகல பிராணிகளும் பூச்சிகள் கூண்டு கட்டுவதுபோலத் தம்மைக் கட்டிக்கொள்ளுகின்றார்கள். ஆதலால் கன்மங்கள் மோக்ஷவேதுவல்லவென்றும், அதற்கு மாறாகப் பந்த வேதுக்களென்றும் கூறப்பட்டிருக்கின்றன. பின்னும் மலமானது சிவானந்தானுபவத்திற்கு மறைப்பாதலால் அது நீங்காமல் மோக்ஷமுண்டாகமாட்டாது.

அஞ்ஞானமாகியமலம் ஞானமின்றி நீங்கமாட்டாது. ஞானத்தால் அந்த அஞ்ஞானமாகிய மலம் நீங்குமல்லது கன்மத்தால் நீங்காது. ஞானத்தைப்பெற்றால் உடனே சிவசாயுச்சியத்தை யடைவான் என்று சிவதருமோத்தரத்தில் ஞானமாத்திரத்தினாலேயே நீங்குமென்று கூறப்பட்டிருக்கின்றது. பின்னும் ஞானமில்லாவிடில்சஞ்சித கருமங்கள் அழியமாட்டா. போகத்தால் அழியுமென்னில் மறுபடி கன்மம் நீங்காமலுண்டாகும். கன்மஞ் செய்யும்போது பாபமுந் தொடர்ச்சியாகவே வரும். ஆகையால் கேவலம் கன்மத்தால் மோக்ஷமுண்டாகமாட்டாது. ஆனால் கன்மமும் ஞானமும் சேர்ந்து மோக்ஷ ஏதுவாகட்டும், அதனால் தோஷம் சிறிதுமில்லை. இரண்டுஞ் சரியாகவே பிரதானம் என்னும் விஷயத்தில் கன்மமில்லாத ஞானமும், ஞானமில்லாத கன்மமும் பிரதானமல்ல. ஆகையால் ஞானம் கன்மம் இரண்டினாலும் மோக்ஷஞ் சித்திக்கும். பின்னும் அன்னமும் புருந்தும் ஒன்றாகச் சேர்வது போலக் கன்மமும் ஞானமும் சேர்ந்து சமுசார ரோகத்திற்கு மருந்தாகும் என்று இங்ஙனமாகச் சொல்லிய வசனங்களால் ஞானகன்மங்கள் இரண்டும் மோக்ஷசாதனங்களாகுமென்னில், உத்தரம் ஞானாமிர்தத்தால் திருப்தியடைந்து பத்தியால் பரவசமான அந்த மகாத்மாவுக்கு கன்மஞ்செய்ய வேண்டியதில்லை என்று சிவதருமோத்தரத்திலும், பரமாத்மாவில் நிலையாக நின்ற போது குறியும் ஆச்சிரமும் ஆசாரமும் வேண்டியதில்லையென்று சர்வஞானோத்தரத்திலும், தியானமும் தவமும் பூசையும் ஓமமும் சாதனமும் அக்கினிகாரியம் முதலானவையும் நியமமும் க்ஷேத்திர பிர சேவையும் அர்ச்சனையும் பிதிர்காரியமும் தீர்த்த யாத்திரையும் விரதங்களும் அவனுக்கில்லை என்று தேவிகாலோத்தரத்திலும் ஞானிக்குக் கன்மம் நிஷேதிக்கப்பட்டது.

ஞானமே பிரதானம் கன்மமே பிரதானம் என்னும் வசனங்களுக்குத் தாற்பரியம்; கன்மம் ஞானத்தை உதிப்பித்து அதன் வழியாக மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பதாம். கன்மம் ஞானஹேதுவென்பதற்கு வேதானுவசனத்தாலும் யக்ஞத்தாலும் உபவாசத்தாலும் வஸ்துவையறிய விரும்புமவன் வித்துவான்; யோகி, மற்றவனல்லன் என்னும் கந்தபுராண வசனம் பிரமாணமாகும். இன்னும் கன்மங்கள் தாமே சிவசாயுச்சியமாகிய பலத்திற்குக் காரணமாக மாட்



டா. ஆனால் ஞானத்தின் வழியே உபகாரியாகும். என்று சுருதியிற் கூறியிருக்கின்றது. இதுவே கன்மம் ஞானசாதனமென்பதற்குப் பிரமாணம். அப்படியே யாகாதிகன்மங்களும் ஞானோற்பத்திக்கே நிமித்தமாகும். இப்படியே காசி மரண முதலானவையும் ஞானத்தின் வழியே மோக்ஷ சாதனமாகும். மலமானது ஞானத்தால்மாத்திரம் நீங்குமாதலால் அஃதின்றி முத்தியுண்டாக மாட்டாது. ஆகையால் காந்தத்தில் புண்ணிய ரூபமான காசிப்பட்டினம் எப்பொழுதும் எனக்குப் பிரியமாயிருக்கின்றது. அதில் பிராண வியோகமாகும் பிராணிகளுக்குத் தயையினாலே மோக்ஷமடையும்பொருட்டுத் தாரகப்பிரமஞானத்தையுபதேசிக்கிறேனென்று விஷ்ணுவைப் பார்த்துச் சிவபிரான் சொன்னதாக வசனமிருக்கின்றது. இதனால் கன்மம் ஞானசாதனமென்று பிரதிபாதிக்கப்பட்டது. ஆகையால் ஞானத்தை விரும்புமவன் வேதத்திலும் ஆகமத்திலும் சொல்லிய கன்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். வேதாகமங்களின் விதித்த கன்மங்கள் மாத்திரம் ஞானசாதனங்களல்ல. அவற்றில் விதிக்கப்பட்டாலும் நிஷேதிக்கப்பட்டிருந்த போதிலும் சிவாராதன ரூபங்களாகச்செய்யப்படுமாகில் அது ஞானோற்பத்திக்குக் காரணமாகும். அப்படியே காந்தத்தில் உலகத்தில் எந்தக்கன்மங்கள்விதிக்கப்பட்டும் நிஷேதிக்கப்பட்டுமிருக்கின்றனவோ அவையெல்லாம் சிவனுக்கு மேலான பூசையென்று நினைக்கும் ஞானமானது பெரிய யாகமாகும். எந்தக் கன்மங்கள் சுருதியில் ஸ்மிருதியில் விலக்கப்பட்டிருக்கின்றனவோ அவை யெல்லாம் சிவாராதனமாகுமென்னுமிந்த ஞானம் பெரிய யாகமாகும். ஈசுவரார்த்தமென்னும் புத்தியால் பாபகன்மங்களைச் செய்த போதிலும் புண்ணியமேயாகும். சந்தேகமில்லை. வைதிகதாந்திரிக மார்க்கத்தை விட்டுத் தனது புத்தியாற் செய்த போதிலும் அதுவும் யாகந்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. இப்படிச்சொல்லிய தருமமெல்லாம் பிரபன்ன தருமமாகும். பிரபன்னனல்லாதவன் வருணாச்சிரம தருமங்களையே அனுஷ்டிக்க வேண்டும். இப்படித் தருமங்களை யனுஷ்டிக்கும்போதே தெய்வ வசத்தால் நிருவாண தீக்ஷை நேரிடுமாகில் அப்பொழுதே சாமீபபலத்தை யனுபவித்து அடுத்த பிறவியில் பரமுத்தியையடைவான். ஆனால் எப்பொழுது தீவிரம் தீவிரதரமாகிய சத்திநிபாதங்களிலொன்றுண்டாகி நிரு

வாண தீக்ஷையைப்பெறுகின்றனர். அப்போதே அந்தத் தீக்ஷையால் சஞ்சிதகன்மம் நீங்குகையால் தத்துவஞானத்திற்குப் பிரதிபந்தகமானபாபம் நீங்குகையால் தத்துவஞானம் உண்டாகும் பொருட்டுச் சிரவணாதிகள் செய்யவேண்டும். இந்தச் சுத்தசைவதந்திரத்தை யொருவருக்குங் கொடுக்கவுங்கூடாது. தீக்ஷைபெற்ற சிவபக்தருக்கு விசேஷிக்குச் சிரவணஞ்செய்து வைக்கவேண்டும். மற்றவருக்குச் சொல்லலாகாது. நிருவாணிக்கே சொல்லவேண்டும். இப்படியாக ஆகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆகமோபதேசத்துக்குச் சொல்லின் பொருள் தெரிந்த மாத்திரத்தில் அர்த்தஞானமுண்டாகலாம். ஆகிலுந் தாற்பரியம் தெரியாவிடில் மேற்பார்வையால் முன்பின் விரோதந்தோன்றிச் சந்தேக முதலானவையால் கலங்கவேண்டியதாகும். கலக்கமில்லாமலிருக்கும் பொருட்டுத் தாற்பரியஞானரூபமான சிரவணஞ்செய்யவேண்டியதாகும். எதுவரையில் அவனுக்குச் சிவஞானம் உதயமாகிறதோ அதுவரையில் விசேடமாகச் சிரவணாதிகள் செய்யவேண்டு மென்று விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிச் சிரவணத்தாலுண்டாகும் ஞானம் பேதஞானமன்று. நான் ஆத்மா, சிவன் பரமாத்மா என்று கருதப்பட்ட பேதபாவனை செய்கின்றவன் சிவத்தன்மையடையமாட்டான். என்று பேதஞானத்தை நிஷேதித்துச் சிவனே நானென்று எப்போதும் அத்துவித பாவனை செய்யவேண்டு மென்று சருவஞானோத்தரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

குருவினிடத்திலிருந்து நிருவாண தீக்ஷையை முன்னிட்டுஉண்டாகும் இந்தச் சிரவணமான — கலர்களுக்கே. விஞ்ஞானகலர் பிரளயாகலர்களுக்குச் சிவனுடைய அனுக்கிரக மாத்திரத்தால் தீக்ஷையும் அத்துவித ஞானமு முண்டாகும். இப்படிச் சிரவணமானபின்பு யுக்திகளினால் அதனுடைய அர்த்தத்தைச் சிந்திப்பதாகிய மனனமும் அயோக்கியதை நீங்கிச் சிரவணம் நிலைக்கும் பொருட்டுச் செய்யவேண்டும். பின்பு கேட்ட பொருளைத் தியானஞ் செய்வதாகிய நிதித்தியாசனமும் வேண்டும். இது விபரீத பாவனை நீங்கும் பொருட்டும் சித்தவொருமை வரும்பொருட்டுஞ் செய்யவேண்டும்.

அநாதியான ஜன்மந்தோறுந் தொடர்ந்து வந்த விபரீத பாவனை ஒரு முறை செய்யுஞ் சிரவணத்தால் நீங்கமாட்டாது. தியானவாசனையினாலேதான் நீங்கும். விபரீதபாவனை யிருக்கும்பொழுது



சாக்ஷாத்காரமுண்டாக மாட்டாது. அப்படியே சித்தவொருமையின்றிச் சூக்ஷுமவஸ்து சாக்ஷாத்காரமுண்டாக மாட்டாது. மயிர் முதலானவற்றின் காட்சியில் அப்படியே காண்கையால். ஆகையால் விபரீதபாவனை நீங்கும் பொருட்டும் சித்தவொருமை வரும்பொருட்டும் நிதித்தியாசனஞ் செய்யவேண்டும். சூரிய கிரண சந்நிதானத்தில் சூரியகாந்தத்துள்ளிருக்குமக்கினி பிரகாசிப்பது போல ஆசாரியர் சன்னிதானத்தில் தனது ஆன்மஞானம் பிரகாசிக்கும். இதுதான் சாக்ஷாத்காரவுதய மென்பர். இதுதான் மோக்ஷமாகிய பலத்திற்குச் சாதனமாகும்.

சங்கை:—ஆன்மாவை மூடிக்கொண்டிருக்கு மலமிருக்கும்போது அபிவியத்தி யெப்படி யுண்டாகும்? மல நீங்கினபின்பு அபிவியத்தியுண்டாகுமென்று சொல்லவுந்தகாது. ஆகையால் அபிவியத்தி மலநிவர்த்தி இவ்விரண்டிற்கும் அன்னியோன்னியாசிரயதோஷம் நீங்கும்பொருட்டு மலம் தீக்ஷையால் நீங்குமென்று கொள்ளவேண்டும். இது யுத்தந்தானே?

மலம் திரவியமானபடியால் காச முதலான குற்றம் வயித்திய வியாபாரத்தால்நீங்குவது போலச்சிவ வியாபாரத்தால்மலம் நீங்கவேண்டுமென்பது பொருந்தாது. ஞானத்தாலே அந்த அஞ்ஞானநீங்குமல்லாது கன்மத்தால் நீங்காது. அப்பிரகாச மலம் ஞானப்பிரகாசத்தாலே நீங்கவேண்டும். அப்பிரகாசமான இருள் பிரகாசமான சூரிய கிரணத்தினாலே நீங்கக் காணுகின்றோம். அதுபோல மலம் திரவியமாகையால் கிரியையாற்றான் [illegible]மென்றும் ஞானத்தால் நீங்காதென்றும் அனுமிக்கவுங் கூடாது. ஆகமத்தில் ஞானமொன்றுமே முத்தி. மற்றக்கிரியை அதற்குச் சாதனமென்று கூறியிருக்கின்றபடியால். அப்படியானால் தீக்ஷையே மலத்தைவிடுவித்து முத்தியைக் கொடுக்குமென்னும் வசனத்திற்கு என்ன சமாதானமென்னில், அதற்குத் தாற்பரியம்:—தீக்ஷை ஒருவன் அவசியஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது கருத்து. அஞ்ஞானத்தை நீக்க வந்ததன்று. ஆதலால் விரோதமில்லை. இங்ஙனமாகவின் அனுத்திரியாதிகளைத் தீக்ஷை யென்றது பிரத்தியக்ஷாதிகளைப் பிரமாணமென்றதுபோலக் கவுணமன்றி முக்கியமன்று. முக்கியமாகச் சிவதீக்ஷை யென்று சொல்லப்படுவது சிவசத்தி சங்கற்ப விசேடமே.

ன்றே யன்றிப் பிறிதில்லை. இதுவே சர்வாகம சம்மதமென்பது ஆகம வசனங்களாலும் பிரமாண நிஷ்டையால் இதரவியாபாரமொன்று மில்லாமையாலும் பிரசித்த மென்றுணர்க. சாதிகரணத்திற் சொல்லப்படும் பேதங்களெல்லாம் அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடத்திற்கு வியஞ்சகங்களாகலின் உபகார நிமித்தங்களேயாமென்க. அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடமாவதுஞ் சிவனது கிரியாசத்தி வியாபார விசேடம். அந்தக்கிரியை ஞானத்தில் அடங்கி ஞானத்துக்கு அங்கமாகுமென்க. இன்னும் கிரியா வியாபாரமின்றியுங் கருடபாவனா ஞான மாத்திரத்தினால் விஷத் திரவிய நிவிர்த்தி பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலின் விஷமொத்த திரவியமென்பதுஞ் சர்வசம்மதமாதலின் நேத்திரப் படலத் திரவியம் படல நீக்கு முபாய ஞானத் துணையுடைய வைத்திய சத்திர கன்மத்தால் நீங்குதல்போல மலத் திரவியமும் சிவதீக்ஷா குருவின் சிற்சத்தியால் நீங்குமென்பது நேத்திர படல திருஷ்டாந்தமொன்றே கொண்டு ஸ்தாபிக்கும் முயற்சி தூரம் போய்விட்டது. இதுவேயுமன்றி மலத்திரவியத்திற்குப் பட்சாதி திருஷ்டாந்தங்களை யபேக்ஷித்து முக்கிய திருஷ்டாந்தம் அந்தகாரம். அது தீபாதி பிரகாச மாத்திரத்தால் நிவிர்த்தியாவதன்றிக் கிரியா வியாபாரமாயிரங் கூடினும் நிவிர்த்தியாவதில்லை. கிரியா வியாபாரமெல்லாம் தீபாதியுற்பத்தி நிமித்தமாகலின் தார்ட்டாந்தத்திலுமிவ்வணங் கண்டுகொள்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இந்த உண்மைஞானம் பத்துவகைப்படும். அவையாவன—தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம். இவைகளின் இலக்கணங்களாவன—பிருதிவி முதல் நாதமீறாகிய தத்துவங்கள் அனைத்தையும் பிருதிவியாகத் தரிக்கு மென்றல் முதற் சிவதத்துவம் ஞானமாயிருக்கும் என்றல் காரிய வினைகளின் செயல்களை வெவ்வேறாகப் பகுத்துக் காண்கையே தத்துவரூபம்.

அத்தத்துவங்களுக்கு ஆன்மா கூடி நின்றவிடத்துத் தொழிலுண்டாவதேயன்றி ஆன்மா கூடி நில்லாவிடத்துத் தொழிலின்றி நிற்கையாலும் அவை யொன்றை யொன்றறிய மாட்டாமையாலும் அவைகளனைத்தையுஞ் சடமென்றுகாண்கையே தத்துவதரிசனம்.



அங்ஙனஞ் சடமென்று கண்ட தத்துவங்களனைத்தையுஞ் சத்தியமன்றென்றும், அவைகள் ஆன்மாவையறியமாட்டாமையாலும் ஆன்மா அவைகளை யறிந்துகொண்டு நிற்கையாலும், அவைகள், ஆன்மாவைவிட வேறு என்று கண்டு நீங்கி நிற்பதே தத்துவ சுத்தியாம். இவ்வாசாரியனருள் தத்துவரூப தரிசன சுத்திகளையும் இத்தத்துவ சுத்தியிற் பிரகிருதித்தத்துவம் இருபத்துநான்கும் கலாதி தத்துவம் ஏழுமாகிய முப்பத்தொன்று நீங்கவே அம்முப்பத்தொன்றுமாய் நின்ற மாயாமலம் நீங்கும். அது நீங்கவே வெட்டுவாளொழிந்தோர்க்கு அவ்வெட்டுவாளால் விளைகின்ற வெட்டுதற்றொழிலற்றுப் போல அம்மாயாமலத்தோடு அம்மாயாமலத்தால் விளைகின்ற கன்மமலமும் நீங்கும். அது நீங்கவே ஓர் தொழிலினைச் செய்துவிப்போனாய் அத்தொழிலின் முடிவில் அத்தொழிலினைச் செலுத்தும் பணிபற்றுப்போல அம்முப்பத்தொரு கருவிகட்குந் தானே முதல்வனாய் நின்று அவைகளைப் பிரேரிக்கின்ற சுத்ததத்துவங்களைந்துமாய் நின்ற மாயைமலமும் தனது பிரேரகத் தொழிலற்று நீங்கும். இங்ஙனம் தத்துவசுத்தியோடு மாயையுங்கன்மமும் மாமாயையுமாகிய மூன்றுமலமும் நீங்குமென்றுங் கண்டுகொள்க.

முன்னின்ற தத்துவங்களையும் பின்னின்ற பேரருளாகிய ஞானசத்தியையும் ஆசாரியன் அருளாற் கண்டு கழன்று அவ்விரண்டினுக்கு மேலாகிய வறிவுருப் பிரகாசிக்கின்றவன் நானே யென்று கருதல் ஆன்மரூபம். இனி அவ்வான்மாவதியாது? அதனை, ஆசாரியரால் கழன்று நிற்றல் என்னென்றால் . . . தத்துவங்களை விடுவிக்க விட்டுநின்ற சடத்தை நோக்கி நீ இப்படித் தத்துவங்களைக் கழன்று நிற்கின்றாயே இனிமேலாவதும் உன்னுருவமாவதியாது? அதனைக் கூறுவாயாக என்று வினவ அப்போது தன்னுருவத்தைத் தானுன்னியுன்னிப் பார்த்து ஒன்றுந் தோன்றாமற் போந்தகாரமாயிருக்கையால் சுவாமி! அடியேனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை, போந்தகாரமாயிருக்கின்றதே யென்று விண்ணப்பஞ் செய்ய இதுதான்; தான், ஒன்றாயிருந்து அநேக சத்தியையுடைத்தாய் நெல்லிற்கு உமியுஞ் செம்பிற்குக் களிம்பும்போல உன்னையுந் தன்னையுங் காட்டாமல் அநாதி தொடுத்து முத்திபரியந்தமும் மறைத்து உன்னைச் சென்னமரணங்களிற் சுழலும்போற் சுழற்றிக். இப்பர்செய்

கின்ற ஆணவமாவதென்று திருவுளம்பற்ற, சுவாமி! இவ்வாணவத்தின் றுயரம் அடியேன் பொறுக்கமாட்டேன், இனிமேலாகிலுமென் றிகைப்பு நீங்கத்தக்கதாக இரங்கி யிவ்வாணவத்தைக் கழற்றவேண்டுமென்று இரந்துநிற்ப, அப்போது இவ்வாணவத்தைக் கழற்றவேண்டுமென்று இவனுள்ளுநித்த வெண்ணமே யென நாடகமியற்றித் திருவருண்ஞான நாடகம் நவிற்றுதற்கு ஆரம்பித்த அவதரமாகையால் இங்குஇவன் திரோதானமல நீங்கியதென்று திருவுளஞ்செய்து பின்னரும் இவ்வாணவத்தைக் கழற்றினாலன்றி யிவன் றிகைப்பு நீங்கித் தன்னுருவத்தைத் தான் காணமாட்டானென்று அவ்வாணவத்தைக் கழற்றுதற்கு ஆரம்பித்து நீ யுன்னுருவத்தை யுன்னி யுன்னிப்பார்த்து ஒன்றுந்தோன்றாமற் பேரந்தகாரமா யிருக்கிறதென்று கூறினையே, அப்பேரந்தகாரத்தைப் பகுத்துக்கண்ட நீ யறிவுருவின்மை காண்டியோ என்று அவனுக்கு அவ்வாணவங் கழன்று அறிவு விளங்குதற்கு ஏதுவாக மெல்லவுபாயமா வினவ, அதற்குச் சுவாமீ! அறியாதவனாய் நின்றாற் குருட்டுக்கண் இருட்டினைப் பகுத்தறியமாட்டாதே. அதுபோல அப்பேரந்தகாரத்தை அடியேனும் பகுத்துக் காணமாட்டேனே. அங்ஙனம் அப்பேரந்தகாரத்தைப் பகுத்துக்கண்டிலால் அறிவனாய் நின்றே கண்டேனென்று விண்ணப்பஞ்செய்ய இங்ஙனம் அறிவனாய் நின்றபடியேநின்று அப்பேரந்தகாரமாகிய வாணவத்தைப் பாரென்றருளிச் செய்யப் பின்னுந்தான் அப்படியே அறிவுருவாய் நின்று அப்பேரந்தகாரமாகிய ஆணவத்தைப் பார்க்க அப்போது ஒளி[illegible]ன் இருள் [illegible]றப்படாததுபோலவும், மிகுஜலத்திற் பூ[illegible]தோற்றப்படாதது போலவும், மிகுந்த தழலிற் சலந் தோற்றப்படாதது போலவும், அவ்வறிவுருவத்தின் முன்னர்ப்பேரந்தகாரமாகிய ஆணவந் தோற்றப்படாமையால், சுவாமீ! இப்போது அப்பேரந்தகாரமாகிய வாணவத்தைக் காணேன் என்று அதிசயித்து விண்ணப்பஞ் செய்யும் இதுவே அவ்வாணவ மகன்ற நிலை. இங்ஙனமே யறிவுருவாய் நின்று உன் றிகைப்புநீங்கி அவ்வாணவத்தைக் கழன்று நில்லென்[illegible] அநுக்கிரகஞ்செய்ய, அறிவுருவாய் நின்று ஆணவத்தைக் கழன்று நிற்பனெனவறிக.

பஞ்சமலமு நீங்காத விடத்து அருளைப்பெறுதல் அரிதாமாகையால் இவ்வாணவ நீக்கத்தோடு திரோதான மலமும் இவ்வாணவ



மலமுமாகிய விரண்டுமலமு முற்கூறிய தத்துவநீக்கத்தோடு மாயையுங் கன்மமு மாமாயையுமாகிய மூன்று மலமுமாக வைந்து மலமு நீங்கின எனவும், சகல கேவலங்களை நீங்காதவிடத்துச் சுத்தத்தினைப்பொருந்திச் சிவத்தினையடையக் கூடாதாகையான் முற்கூறிய தத்துவசுத்தியோடு சகலாவத்தையும் ஈண்டுக்கூறிய வாணவக் கழற்சியோடு கேவலாவத்தையு நீங்கியதெனவுங் கண்டுகொள்க.

ஆசாரியன் உனக்குமேல் திருவருள் என்ற ஒருபொருள் உள்ளது என்று திருவாய்மலர்ந்தருள அதற்குமேல் திருவருட்பிரகாசத்திற் பிரிவறக் கலந்து நின்று அப்பிரகாசத்தின் வலிமையைக் கொண்டு யாவையினும் வியாபித்து அறிகின்றவன் நானே ஆகை[illegible]நிலவனென வெண்ணி நிற்றல் ஆன்மதரிசனம்.

திருவருளி லசைவின்றிச் செயலற்று அடங்கி நிற்றலே ஆன்மசுத்தி.

கண்ணுக்கு ஓர் ஒளி கலந்துநின்று உணர்த்தினாலன்றித் தானாய்க் காணமாட்டாதது போல நமக்குமோர் திருவருள் கலந்து நின்று உணர்த்தினாலன்றி நாமொன்று முணரமாட்டோமே யென்று அகமுகமாய் நின்றுன்னிப் பொறுத்துப்பார்த்து அறியுமிடத்துத் தன்னறிவத்திலே அத்திருவருட்சொரூபம் பிரகாசமாய் நீருக்குள் தட்பம்போல் தன்னுட் பிரிவற வுயிர்க்[illegible]ராய் விளங்கித் தோன்றுகையால் அங்ஙனம் உயிர்க்குயிராய் அவ்[illegible]க் காண்டலே சிவரூபம்.

தான் அவ்வருளை உயிர்க்குயிராய்க் காண்ட[illegible]ல் எவ்விடத்திலும் விளங்கக்காண்டலே சிவதரிசனம். அகண்டாகார பரிபூரணமாய் உயிர்க்குயிராய் நிற்கின்ற திருவருளில் ஆ[illegible]த்தனைக் கலந்த விழியினைப்போல் இரண்டறக் கலந்து ஒன்றி நிற்றலே சிவயோகம்.

அகண்டாகார பரி[illegible]ணமாயோங்கி நிற்கின்ற பேரின்பமாகிய பரமசிவத்தினிடத்து [illegible] திரு ஞான ஞேயமென்னுந் திரிபுடியுமடங்க ஆதித்தனைக் கலந்த கண்ணும், அப்பினைக்கலந்த உப்பும், நீரினைப்பொருந்தி[illegible], நெருப்பினைப் பொருந்திய அயமும், இந்தனத்தொன்றிய அங்கியும், எரியினிற்குறுகிய சலமும், வானினைப்பொருந்திய வளியும், மலரினைப்பொருந்திய மணமும், இனகாற்கூடிய

உடலும், தேனிற்செறிந்த இரதமும் போலவும், காட்டைபோலவும், காற்றைபோலவும் ஒன்றுபட்டொத்து அப்பேரின்பமாகிய பரமசிவமேயாய் நீயென்பது ஓரளவைத்தோன்றாமல் ஆறானது கடலினிடத்தடங்கி பதிதப்பட்டு நிற்கின்ற தன்மைபோலவும், உப்பானது அப்பினிடத்து அடங்கி பதிதப்பட்டு நிற்கின்ற தன்மைபோலவும் நீயும் அப்பேரின்பமாகிய பரமசிவத்தடங்கி பதிதப்பட்டுப் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருத்தலே சிவபோகம். இத்தசகாரியம் பத்தும் அத்தாவத்தை யைந்தனுள் அடங்குமுறைமை எப்படியென்னில், நின்மலசாக்கிரத்தில் தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆகியநான்கும் அடங்கும். நின்மலசொப்பனத்தில் ஆன்மதெரிசனம் சிவரூபம் ஆகிய இரண்டும் அடங்கும். நின்மலசுழுத்தியில் அருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தை யான் செய்வேனென்று கருதுதன்மாத்திரமேயன்றி அத்தசகாரியத்துள் ஒன்றேனும் அடங்காது. நின்மலதுரியத்தில் ஆன்மசுத்தி சிவதெரிசனம் சிவயோகம் ஆகிய மூன்றுகாரியமும் அடங்கும். நின்மலதுரியாதீதத்தில் சிவபோகம் அடங்கும். இப்படிப்பட்ட சிவஞானத்தைப் பெற்றவன் சீவன்முத்தனெனப்படுவான்.

இப்படிப்பட்ட சிவஞானத்தைப் பெற்றவனுக்கு நன்மைதீமைகளாகிய இருவினைகளுமில்லை. வினைகளைச் செய்தானாயினும் ஒரு பலத்தை நாடுவதுமில்லை. சமயாசாரங்களை அனுட்டிக்க வேண்டுவதுமில்லை. தவங்கள் பண்ணவேண்டுவதுமில்லை, விரதானுட்டானங்களும் ஆச்சிரம தருமங்களும் அனுட்டிக்க வேண்டுவதுமில்லை. சித்தசலனமுமில்லை. சமயத்துக்கேற்ற வேடங்கள்தரிக்க வேண்டுவதுமில்லை. தியான பாவனை செய்ய வேண்டுவதுமில்லை. விடயங்களை விடுதல் பற்றுதல் வேண்டுமென்ற நியமமுமில்லை. அந்தக்கரணங்களை அடக்கவேண்டுவதுமில்லை. தாமத இராசத குணங்களை அடக்கிச் சத்துவகுணச் செய்கைகளைச் செய்யவேண்டுமென்ற நியமமுமில்லை. ஒரு குறியின்கண்ணே நிற்க வேண்டுவதும் இல்லை. குலாசாரத்தில் நிற்க வேண்டுமென்ற நியமமும் இல்லை. அவர்கள், பாலர் உன்மத்தர் பிசாசர் குணங்களைப்பொருந்தி [illegible] ஆனந்தமேலீட்டால் பாடல் ஆடல்களாகிய தொழில்களைச் செய்திடுதலுஞ் செய்வர். இப்படிப்பட்ட சிவஞானி கையில் ஒருவன் எள்ளளவு



தானத்தைச் செய்தானும் அது நிலமும் மலையும்போல மிக்கோங்குதலால், மேலான போகங்களையெல்லாம் அனுபவிக்கும்படி செய்து சிவஞானத்தை உதிப்பித்து வீட்டினை பொருந்துவிக்கும். இதற்கு உதாரணம்:—

"சிவஞானச் செயலுடையோர் கையிற் றானந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவரை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ளணுகுவிக்குந் தானே"

என அருணந்தி சிவாசாரியர் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கானும் உணர்க.

பசு வியல்பு முடிந்தது.

## ஆணவமல வியல்பு.

ஆணவமலத்தினிலக்கணமாவது:— அநாதிநித்தமாய், வியாபகமாய், ஞானத்தை மறைப்பதாய், [illegible]வியுமாய், அறியாமைக்குணத்ததாய், செம்பிற் களிம்புபோல உயிரின் கூற்றமாய், அநாதிபந்தமாய், சடமுமாய்ப்பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிப்பந்தமாதல் பெறப்படாமையின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப்பாகுபாட்டிற் கேதுவாய், உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்துநின்று தத்தங்காலவெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், உயிர்கள் மூன்றவத்தைகளும் படுவதற்கு மூலகாரணமாய், வியாபகவுயிர் அணுத்தன்மைப் படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய், பசுவினது தன்மையால் பசுத்துவமென்றும், மரணத்தைக்கொடுப்பதால் மிருத்தியுவென்றும், அறிவை மயக்குவதால் மூர்ச்சையென்றும், அழுக்காயிருத்தலால் மலமென்றும், இருளாயிருத்தலால் அஞ்சனமென்றும், ஞானத்தைத் தடுத்தலால் அவித்தையென்றும், ஆன்மாவைச் சுற்றி

யிருப்பதால் ஆவிருதி யென்றும் கூறுகின்ற பலகாரண காமங்களை யுடையதாய், கேவலத்தில் ஆவாரகசத்தியால் ஆன்மாக்களின் ஞானக்கிரியைகளை மறைத்துநின்று சகலத்தில் அதோநியாமிகாசத்தியாலே போகநுகர்ச்சிக்கு வினை முதலாகத்தன்மையை நிகழ்த்தியென்றும் அஞ்ஞானத்தையே காண்பிக்கும் என்க.

இனி மலமென்று ஒரு பொருள் கூறுதல் கூடாது. மாயா காரியமே மறைத்தற்றொழிலைச் செய்யுமெனின் அற்றன்று. உயிர்களுக்கு இச்சாஞானக்கிரியைகளை விளக்குவதாகிய மாயைக்கும் உயிரோடு ஒற்றித்து நின்று அவைகளை மறைப்பதாகிய மலத்திற்கும், தம்முள் வேற்றுமை பெரிதாகலால் அங்ஙனமியாது மாயையே மலமென்பார் மதம் போலியாயவாறு காண்க. இந்த மூலமலத்தின் காரியம் மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என எழுவகைப்படும். இவை முறையே மயக்கத்திற்கேதுவாதலும், மதித்தற்கேதுவாதலும், ஆசைமிகுதிக்கேதுவாதலும், கவலுதற்கேதுவாதலும், தபித்தற்கேதுவாதலும், வாடுதற்கேதுவாதலும், நானாவிதவேதுவாதலுமாம். ஆணவமல நீங்குதலாவது இந்த எழின் வசமாகாதிருக்கை.

மேற்கூறிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவழியும், அதனால் சிவம் பிரகாசித்தவழியும், அதனாற் சீவன் முத்தாயவழியும் முறையே தேற்றுமரத்தின் விதையினாற் றேற்றப்பட்ட நீரின் மருவிய கலங்கலும், மிக்க அக்கினிப்பிரகாசத்திற்கு முன்னர் இருளும், மருந்தினாற்றடைப்பட்ட நஞ்சும்போல சகசமாகிய ஆணவமலங் கெடாது, தனது சத்திகெட்டு, வாதனைமாத்திரையாய் அவ்வுடம்புள்ள அளவு நின்று, மற்றொரு பிறவிக்கேதுவாதலின்றி அதனோடு கழிந்தொழியுமென்க. இன்னும் ஆணவமலம் அநாதிநித்தியமாதலால் நாசமடைவது இன்று. நாசமுறுமாயின் அவ்வான்மாவும் அழியுமென்னப்பட்டு நித்தியமென்றற்கு இழுக்காய் முடியுமெனின் அற்றன்று, இரதகுளிகை பரிசித்தமாத்திரையே செம்பிற்பாடுசகசமாய் நின்ற களிம்பு நீங்கும், நீங்கவே செம்பு வேறுநிற்றல் கண்டாமன்றே அதுபோல அரன்றிருவடியாகிய மெய்ஞ்ஞானஞ் சார்ந்தமாத்திரையே உயிரோடு சகசமாய்நின்ற ஆணவமலம் நசிக்கும். நசி



த்தவழி உயிர் வேறாய் நிற்றல் முத்தியென்றற்கு இழுக்கின்மையான் முத்தியிலேயினுஞ் சகசமலம் நீங்குமாறில்லையென்னும் பாடாணவாத சைவர் மதம் அடாது. மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தமாத்திரையே மல நீங்கிப் பெறுமதுவே முத்தியாதல் அமையும். அதன்மேலும் அரன்றிருவடியைக்கலத்தல் வேண்டாவென்று பேதவாதசைவர் கூறுவரெனின் அற்றன்று. ஆதித்தனொளி மேவியவழியும் ஆதித்தனோடு கண்ணொளிகலந்தாலன்றி இருள் பற்றறக்கழியாது. அதுபோல மெய்ஞ்ஞானஞ் சேரினும் சிவம் பிரகாசித்துத் திருவடியை உயிர் பொருந்துதலன்றி ஆணவமலம் பற்றறக்கழியாதென்க. ஆதலால் அவர் மதமும் அடாதென்க.

ஆணவமல வியல்பு முடிந்தது.

---

## கன்மமல வியல்பு.

---

கன்ம மலமாவது :—அநாதியாயும், நித்தியமாயும், சரீரமுதலானவையோடு ஆன்மாக்கள் சேருகைக் கேதுவாயும், நானாபிரகாரமாயும், மனிதருக்குப் பலவிதங்களான போகங்களுக்கு உற்பத்திஸ்தானமாயும், பிறப் பிறப்போடு கூடியிருந்த போதிலும் மலத்தைப் போலச் சுபாவ சித்தமானதாயும், பிரத்தியேகந் தனித்தனி யேற்பட்டதாயும், சூக்குமமாயிருப்பதால் இந்திரியங்களால் காணப்படாததாயும், மனம் வாக்குக் காயமென்னும் மூன்றுனிடத்தும் படுவதாயும், தநுகரண புவனாதி காரியங்களை உண்டாக்கிக் கொடுப்பதாயும், புசிக்கத் தக்கதாயும், சங்கார காலத்தில் மாயையில் பரிபாகத்தை யடைவதாயும், பிருதிவி தத்துவமுதல் கலாதத்துவ பரியந்தம் உள்ள ஆன்மாக்களுக்குச் சுக துக்காதி போகத்தைக் கொடுப்பதாயும், ஆல கன்மமாய் ஆகாமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து சாதி ஆயுப்போகமென்னும் மூன்றற்கு மேதுவாய் முறையே சனகந்தாரகம் போக்கியம் என மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவமென்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தம்

எனப் பெயர் பெறுவதாயும், உலகம் வைதிகம் ஆத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய் முறையே நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளினடங்கி அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்கக் கூடியதாயும் விளங்குமென்க.

இன்னும் இந்தக் கன்மமலம் செய்தவினைப் பயனாக சூக்கும ரூபமாக உண்டானதையிட்டு அதிருஷ்டமென்றும், அசுத்த மாயா போகத்துக்கு ஏதுவானதால் மலமென்றும் பெயர்பெற்று நிற்கும். இதன் குணங்களாவன:—இருத்தலும், கிடத்தலும், புண்ணிய பாவங்களைச் செய்தலும், ஒவ்வொரு பற்றுக்களையுடைய தொழில்களை விடுதலும், யாவரையும் நிந்தித்தலே தொழிலாகப் பொருந்தியிருந்தலும், உடல்மாறிப் பிறந்து இழிந்தாருடன் பொருந்துதலுமாகிய ஆறுமாம். இனி சஞ்சிதமாவது சனனங்கடோறுந் தொடர்ந்து ஆறத்துவாக்களில் கட்டுப்பட்டுக் கிடக்கும் இருவினைகளாம். பிராரத்தமாவது அந்தச் சஞ்சிதத்தில் பரிபாகப்பட்டு அதற்கேற்ற தனுகரண புவனபோகங்களை யுண்டாக்கிப் பொசிப்பதாம். ஆகாமியமாவது பிராரத்தத்துக்கு இசையவெடுத்த தேகத்தில் அதன் பலத்தைப் புசிக்கையில் விருப்பு வெறுப்புக்களாலுண்டான கன்மபலத்தைக் கூட்டுஞ் சிவபிரானேவிய கழிந்த அபாரத்தால் வரும்புண்ணிய பாவங்களாம். முற்கூறிய பிராரத்தம் இச்சை, அநிச்சை, பரேச்சை என மூன்று வகைப்படும். இவற்றுள் இச்சையாவது இராசவின் மேனி முதலிபோசைனத் தின்றலால் வருஞ் சுக துக்கம். அநிச்சையாவது இடி முதலியவற்றால் வருஞ் சுகதுக்கம். பரேச்சையாவது ஒருவர் ஒரு காரியஞ் செய்ய அதனால் அவனுக்கு ஆக்கினை அபராதமென்று சொசுவக்கூற அதற்கு ஒருவன் விலக்க முதலியவற்றால் வருஞ் சுக துக்கம். இவைகளே பின்பு பிராரத்தம் இன்னும் திருட்டமென்றும், அதிருட்டமென்றும், திருட்டாதிருட்டமென்றும் மூன்று வகைப்படும். இவற்றுள் திருட்டமாவது ஔடதம் மந்திரம் முதலியவைகளால் இம்மையிலேசெய்த கன்மம் இம்மையிலே பலிப்பதாம். அதிருட்டமாவது இம்மையிலே செய்த புண்ணியபாவங்களால் மறுமையில் சுவர்க்க நரகங்களை யநுபவித்தலாம். திருட்டாதிருட்டமாவது இம்மையிலே அசுவமே



யாகஞ் செய்தவன் இம்மையிற்றானே சுகத்தையடைந்து சுவர்க்கத்தை யடைவதாம். இம்மையில் பாவங்களைச் செய்தவன் இராசாவினாலே தண்டிக்கப்படுவானாகில் அவனுக்கு நரகவாதனையில்லை. அது எவ்வாறெனில், ஆதியிலே கடவுள் பூமியின்கண் தான் அருளிச்செய்த வேதாகமங்களிற் கூறிய விதிகளுக்குத் தவறி நடந்தவர்களுக்கு மூன்று வகையாகப் பிராயச்சித்தங் கற்பித்தார். வருணாச்சிரமதருமத்தில் நடக்கின்றவர்களுக்கு அபுத்திபூருவமாகப்பாவம் நிகழ்ந்தால் பிராயச்சித்தாதி அநுட்டானங்களினால் சுத்தி. ஆசாரமில்லாதவராயிருக்கின்ற பேர்கள் செய்த பாவங்களுக்கு இராச தண்டத்தினாலே சுத்தி. இராசாவினாலே தண்டிக்கப்படாத பாவத்திற்கு யமதண்டத்தினாலே சுத்தி. இனி ஆதிதைவிகமாவது கருப்பம், மரணம், நரை, திரை, அஞ்ஞானம், நரகம், செனமம் இவைகளால் வருந்துக்கம். ஆத்தியான்மிகமாவது சரீரமென்றும், மானசமென்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் சரீரமாவது குன்மம், வாதம், சூலை முதலிய நோய்களாலும், மாடுகளாலும், மிருகங்களினாலும், பிசாசங்களினாலும், விலங்கினாலும், பட்சிகளினாலும், சோரராலும், அரசராலும் வருந்துக்கம். மானசமாவது சோகம், அருவை, அவமானம், மாச்சரியம் இவைகளாலுண்டாகுந் துக்கம். ஆதிபௌதிகமாவது குளிர், உஷ்ணம், காற்று, மழை, மின்னல், இடி இவை முதலியவைகளால் வருந்துக்கம்.

இனி உலகவினையாவது கூவல் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல். வைதிகவினையாவது வேள்வியாதி செய்தலாம். ஆத்தியான்மிகவினை சிவபூசையாதி செய்தலாம். அதிமார்க்கவினை யோக முதலியன செய்தலாம். மாந்திரவினை மந்திரோச்சாரம் ஞானநூல் ஓதலாதி செய்தலாம். இவைகளுள் உலகவினையும், வைதிகவினையும் நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை ஆகிய இரண்டில் அடங்கி அசுத்தபோகங்களையும், ஆத்தியான்மிகவினை வித்தியாகலையில் அடங்கி சுத்தாசுத்த போகங்களையும், அதிமார்க்கம் மாந்திரம் ஆகிய இரண்டும் சாந்திகலை சாந்தியதீதகலையிலடங்கிச் சுத்தபோகங்களையும் பயப்பிக்குமென்க.

இன்னும் வினை பசுநல்வினை சிவநல்வினையென விரண்டாம். பசுநல்வினை யுலகவினையும், வைதிகவினையுமென வேயிரண்டாம். சிவநல்வினை பொதுவுஞ் சிறப்புமென வேயிரண்டாம். உலகவினையாவது முற்கூறிய தண்ணீர்ப்பந்தர் அன்னசாலை முதலியன வமைத்தலாம். வைதிகவினை கட்புலனாகாத அரியயனிந்திரன் முதலியதேவர்களை வழிபடுதலும், கட்புலனான பசு பார்ப்பார் தாய்தந்தை முதலாயினரை வழிபடுதலுமாம். ஆற்றுமிடனும் வேள்வி முதலிய வைதிக வினைகள் தண்ணீர்ப்பந்தர் முதலிய உலகவினை போலன்றிச் சிவனை நோக்கி அவிப்பாகங்கொடுத்தலும் வழிபடுதலு முடைமையின் அவை சிவபுண்ணியமா மென்றற்கு இழுக்கு என்னை யெனின், ஆண்டுச்சிவபிரானுக்கு அவிப்பாகங்கொடுத்தலும், வழிபடுதலும், பசுக்களாகிய ஏனைக்கடவுளரோடொப்பவைத்துச் செய்தலேயன்றிப் பொது நீக்கிப் பசுபதி யென்னுங்கருத்தாற் செய்தலின்மையின் அவையெல்லாஞ் செய்வோர் கருத்துவகையாற் பசுநல்வினையேயாம். சிவநல்வினையாகாவென்க. இனி வேள்வி முதலிய வைதிக வினைக்கண் சிவபுண்ணியமும் அபுத்திபூர்வமாய் நிகழ்தலின் அது புத்திபூர்வமாய் இனிச்செய்யக்கடவனவாகிய சிவபுண்ணியங்கட்கேதுவாதன் மாத்திரையிற்பயன்படுதலுடைத்தென்க. வேள்வி முதலியவுஞ் சிவபிரானை நோக்கிப் பொதுநீக்கிச் செய்யின், அஃது ஏனைய போலப் பசுபுண்ணியமாதலின்றிப் பொதுச்சிவபுண்ணியமாமெனக் கொள்க. இஃது உலகவினைக்[illegible]ன்னுமொக்கும். இவ்வைதிகவினைபோன்ற பொதுச்சிவபுண்ணியஞ் சிவாகம நல்வினையானா பொதுச்சிவ புண்ணியம் போலச் சிறப்புச் சிவ புண்ணியத்திற்கு அங்கமாகிப் பயன்படுதலுடைத்தென்க. பொதுச்சிவ நல்வினையாவது சிவதீக்கையென்னு மங்கமின்றி யவ்வாறு செய்வது. இவற்றினியல்புகளெல்லாம் பசு விலக்கணத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. ஆண்டுக்காண்க.

இக்கன்மமலம் பலவிதமாய்க் காணப்படுதல் எங்ஙனமெனில், தேவர்கள் மனிதர்கள் விலங்கு பக்ஷி முதலாக ஆன்மாக்களுக்குச் சரீரங்கள் வேறுபட்டிருக்கின்றன. இந்திரியங்களும் யானைகளுக்கு நாக்கு உள் முகமாயிருக்கின்றது. பாம்புக்குக் கண்களே காதுகளாயிருக்கின்றன. கோட்டான்களுக்குக்கண்கள் பகலில் குருடாயிரு



க்கின்றன, பூனைகளுக்குக்கண்கள் இரவில் அதிகப் பிரகாசமாயிருக்கின்றன. அவைபோலவே இன்னும் பலவிதமாக உயிர்களுக்கு இந்திரியங்கள் காணப்படுகின்றன. உணவுகளோ வெனின், சாதகப் பக்ஷிக்கு மேகத்தினின்றும் விழும் ஜலந்தவிலையாம். சில புழுக்களுக்குக் கற்களே உணவாகக்காணப்படுகின்றன. அன்னம் வண்டு முதலானவற்றிற்குப் பூந்தாது தேன் முதலானவைகளாம். மாடு முதலான மிருகங்களுக்குப் புல் முதலானவைகளாம். தேவர்களுக்கு அமிர்த முதலானவை. மனிதர்களுக்கு நெல் முதலானவை. இப்படிப் பல்விதங்களாகக் காணப்படுகின்றன.

போகங்களுக்கு உற்பத்தி ஸ்தானங்களும் சுவர்க்கம் பூமி முதலாகப் பலவிதமாகக் காணப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் கருமமே காரணமென்க. தநுகரணபுவனாதிகளுக்குப் பிறப்பிறப்புக் காணப்படுதல் பற்றி அதற்கேதுவாங் கன்மமலத்திற்கும் பிறப்பிறப்புக் கூறப்பட்டது. அது பற்றிக் கன்மம் அநாதி யென்பதற்கு இழுக்கில்லையென்க.

கன்மம் போகத்திற்குக் காரணமென்று கூறப்பட்டுள்ளது. போகம், சுகதுக்க ரூபமாயிருக்கும். அதற்கு ஏதுவாங் கன்மம், சரீரமுண்டான பின்னுண்டாகு மெனதலாலும், சிருஷ்டி யாரம்பத்தில் கன்மம் இன்மையாலும் சரீராதிக ளெப்படிவரும்? ஆதலால் கன்மம் அநாதி யென்பது கூடாதெனில், சிருஷ்டி யாரம்பத்திலும் ஆன்மாக்களுக்குப் பலவிதமான தேகாரம்பங்களிருப்பதால் கன்ம மநாதி யென்பது சித்தம். அல்லாவிடில் பல விதமாகச் சரீரம் வரக் காரணமில்லை. ஆன்மாக்களுக்குச் சரீராதிகளும்போகங்களும் பலவிதங்களென்று கூறப்பட்டுக்காணப்படுகின்றமையால் அவைகள் [illegible] ஆதலால் சிருட்டியாரம்ப காலத்திலும், வாசனா ரூபமாகக் கன்மமுண்டு. வித்தும் முளையும் ஒன்றற்கொன்று காரணமாய் முற்பிற்பாடு கூறப்படாமை போலக் கன்மத்திற்குங் கூறப்படாமை கண்டுகொள்க.

உதாரணம்—சித்தியார்.

"உடற்செயல் கன்ம மிந்த வுடல்வந்த வாறே தென்னின்
விட்டபடி முன்னு டம்பின் வினையிந்த வுடல் விளைக்கு[illegible]

தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட்டுடாறி வித்
விடத்தினின் மாமரத்தில் வித்தும்வத் தினிய மாம்போல்."

எனக் கூறியவாற்றாற் காண்க.

உருவுங் கன்மமும் சடமாதலின் அவை தாமே மறுமைக்
கன்மேனை வந்து கூடமாட்டா. உயிர் முற் பிறவியில் ஆக்கப்பட்டுக்
கிடந்த இருவினைக் கேடாக இப் பிறப்பின்கண் வரும் இன்ப துன்ப
நுகர்ச்சியாலன் மேலும் வினை பெருகலின் அதனால் மேன்மேனப் பிறந்
திறந்தலும் அறக்க நிரயங்களிற் சென்று மீட்டு முறையாத் தூல
உடம்பொடு நிலைபெறும் அவ் வினைப் பயன்களை முதல்வனே தனது
ஆணையால் கூட்டுவன். இறைவன் ஆன்மாக்கள் செய்த புண்ணிய
பாவங்களை ஏற்றுக்கொண்டு பயனளித்தல் யாதுகாரணம் பற்றி
யெனின், உயிர்கள் வீடு பேறு அடைதற் பொருட்டு வைத்த கருணை
காரணமேயாம். அநுக்கிரகஞ் செய்தல் கருணை யென்றல் ஒக்கும், நிக்
கிரகஞ் செய்தல் எப்படிக் கருணையென்று சொல்லலாமெனின் காரண
மாகிய வினை இரு வேறு வகைப்பட நிற்றலையின் காரிய
மாகிய பயனும் இருவேறு வகைப்படச் செய்தருளுவன். அநுக்கிர
கஞ் செய்தலேயன்றி அங்ஙனம் நிக்கிரகஞ் செய்தாரைக் கண்டித்த
லும் கருணையினால் நல்வழிப் படுத்தற் பொருட்டேயாம்.

உதாரணம்.

"[illegible] செய்வ
தக்கவ ரத்தாற் குற்ற மடித்தத்திர்த் தச்சம் பண்ணி
மிக்கவ ரத்தினாலே மீண்டற மியற்றி டென்பன்
எக்கிர மத்தி னூரு மிறைசெய லருளே யென்றும்."

என்பதாலறிக.

கன்மமலவியல்பு முடிந்தது.



OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 8 OCT 1913 MADRAS

## சுத்தமாயையின் இயல்பு.

சுத்தமாயையானது, நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், பரமசிவனாலே நித்தியம் அதிட்டிக்கப்படுவதாய், மலகன்மங்களோடு விரவாததாய், சொல்லின் வடிவும் பொருளின் வடிவுமாய், நாத முதலியவற்றின் வழியால் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குதற்குக் காரணமாய், சுத்த தத்துவம் ஐந்தும், நால் வகை வாக்கும், ஐம்பத்தோ ரக்கரமும், எண்பத்தொரு பதமும், சத்தகோடி மகா மந்திரங்களும், இருபத்தெட் டாகமங்களும், இருநூற்றேழு உபாகமங்களும், நான்கு வேதங்களும், பதினெண் புராணங்களும், ஆறு சாஸ்திரங்களும், அறுபத்துநான்கு கலைகளும், சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேச பேதங்கள், அரன் என்றிவர்களுக்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர்களுக்கும், உண்மைச் சரியை கிரியை யோகங்களை அநுட்டித்தவர்களுக்கும், தனுகரண புவன போகங்களும், பஞ்சகலைகளும், சுத்த காலமுதற் சுத்த நிலமீறாகிய முப்பத்தொரு தத்துவமும் பிறத்தற்கு உபாதான காரணமாய், சடமாய், மயக்குஞ் செய்யாததாய் இருக்கும். விந்து, குண்டலினி, சுத்தவித்தை, பிரமம், ஈஸ்வரனுடைய பரிக்கிரக சத்தி, சுத்தமாயை என்பன ஒரு பொருட் கிளவி. இந்தச் சுத்தமாயை உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை யெனின், நந்திகேசுரர், மந்திரமகேசுரர், அனுசதா[illegible] அநந்தேசுவரர் இவர்களின் சரீரமும், அதற்கு ஆதாரமான தத்துவ புவனாதிகளும், உபாதானத்தோடு கூடியது காரியமாதலால், கடம்போல வென்க. இவ்விடத்துச் சிவசத்தியே [illegible], ஆகாது. அது சித்ரூபமாதலால், அசித்தல்லவோ பரிணமிக்கு மென்க.

இப்படிப்பட்ட சுத்தமாயையினின்றுஞ் சிவதத்துவந் தோன்றும். இதில் சூக்குமை வாக்கு இருக்கும். அங்கே சாந்தியதீத புவனங்களுமிருக்கும். இது சிவனால் அதிஷ்டிக்கப்பட்டபடியால் சிவதத்துவ மென்னும் பெயராயிற்று. இச்சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவந் தோன்றும். இங்கே வைசந்தி யென்

னும் வாக்கும், நிவிர்த்தி முதலான கலைகளுமிருக்கும். இது சத்திக்கு அதிஷ்டானமாதலின் சத்தி தத்துவ மெனப் பெயராயிற்று. இத்தத்துவத்தினின்றுஞ் சதாசிவ தத்துவந்தோன்றும். இது மத்திமை யென்னும் வாக்குக்கு அதிஷ்டானமானதால் காமிக முதலான தந்திர பேதங்களுக்குக் காரணங்களாயும், சாமீப்பியமுத்தி யடைந்திருக்கிற பிரணவர் முதலானவர்களின் தநுகரண புவனாதிகளுக்குக் காரணமாயுமிருக்கும். இத்தத்துவத்தினின்றும் ஈசுவர தத்துவந்தோன்றும். இதில் தன் செவிக்கு மாத்திரங்கேட்குஞ் சூக்குமவைகரியிருக்கும். இது அநந்தேசுவரர், [illegible] பெற்ற உருத்திரர் சரீர புவனாதிகளுக்குக் காரணமாயிருக்கும். இத்தத்துவத்தினின்றும் சுத்தவித்தியா தத்துவந்தோன்றும். இதில் பிறர் செவிக்குங் கேட்குந் தூலவைகரியிருக்கும். இது வைகரி யென்னும் வாக்குக்கு அதிஷ்டானமாகையால் சப்தகோடி மகா மந்திரர் மந்திரமகேசர் முதலானவர்கள் சரீர புவனாதிகளையுண்டாக்கும். சிலர் சிவன் வழியாகவே யிலக்கணங்கூறுகின்றார்கள். அஃது எப்படி யென்னில், ஞானமாத்திரத்தோடு கூடிய பரமசிவனாலே அதிஷ்டிக்கப்பட்ட தத்துவம் சிவதத்துவம். கிரியையோடு மாத்திரங் கூடிய சிவனாலே அதிஷ்டிக்கப்பட்ட தத்துவம் சத்திதத்துவம். இரண்டுமுள்ளவரால் அதிஷ்டிக்கப்பட்டது சதாசிவ தத்துவம். கிரியை அதிகரித்தவரால் அதிஷ்டிக்கப்பட்டது ஈசுவர தத்துவம். ஞானம் அதிகரித்தவரால் அதிஷ்டிக்கப்பட்டது சுத்தவித்தியா தத்துவம். சிலர் சிவதத்துவ முதலிய ஐந்தத்துவங்களும் விந்துவின் காரியமே யென்கின்றார்கள். இந்தச் சிவதத்துவ முதலானவை விந்து முதலானவையோடு கூடிய சிவனுடைய படங்குடிலான்றுபோல விருத்தியான காரியமாகும். மெய்யிலுண்டாகிய புழுப்போலப் பரிணாம மன்று. எங்ஙனம் காரணத்தோடு கலந்து முன்னவஸ்தை நீங்காமையால் பிரளயம் வரையில் இருப்பதால் தத்துவமெனப் பெயர் பெற்றது.

இந்தச் சுத்த தத்துவமானது கன்ம சம்பந்த மின்மையால் பந்தகமாகமாட்டாது. சங்கை—சுத்ததத்துவ வாசிகளுக்குப்போக வேதுவான கன்மமின்மையால் எப்படி விசித்திரமாகப் போகமுண்டாகலாம்? ஞான [illegible]துவானகலையின்மையால் எப்படி ஞானமுண்டா



கலாம்? [illegible] நோக்கத்திற்கேதுவான வித்தையின்மையால் எப்படி விடய நோக்குண்டாகலாம்? இராகமின்மையால் எப்படி விடயத்தில் சத்தியுண்டாகலாம்? காலமின்மையால் போகமிவ்வளவுதானென்று எப்படி யளவிடக்கூடும்? நியதியின்மையால் போக்தாக்களின் பேத நியமமெப்படியுண்டாகலாம்? என்னில், உத்தரம்—, சுத்தாத்துவாவிலும் விந்துமயமானகலாதிதத்துவங்களும் தநுகரண புவனபோகங்களுமுண்டு. அவ்விடத்தில் போக பேதத்திற்கேதுவான கன்மமில்லாமற்போனபோதிலும் மலபரிபாக வசத்தால் விசித்திரமான போகமுண்டாகும். எப்படி யென்னில் எவனுக்கு மலபரிபாக மிகுந்திருக்கின்றதோ அவன் சாதாக்கிய தத்துவத்தில் போகங்களைப் புசிக்கின்றான். எவனுக்கு மலபரிபாகம் அதில்சிறிது குறைவாயிருக்கின்றதோ அவன் ஈசுவர தத்துவத்திலும் சுத்தவித்தியா தத்துவத்திலும் போகங்களைப் புசிக்கின்றான். ஆகையால் இவ்விடத்தில் கன்மம் போககாரணமன்று. பின்னும் இவ்விடத்துத் துக்கரூப போகமின்மையால் சிவனுக்குச் சரியல்லாதவன் இரக்கமற்றவன் என்னுங் குற்றமில்லை. ஆகையால் சுத்தாத்துவாவில் மலபரிபாகத்திற்குத் தக்கபடி சுகரூபமாகவே யிருக்கும் போகமுண்டு. இப்படியாக ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. இந்தச் சுத்த தத்துவங்களெல்லாம் பிரளயாகலர் சகலர்களுக்குப் பிரேரகாண்டமென்னப்படும்.

இனி நால்வகை வாக்குகளாவன:—சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்பனவாம். இவற்றுள் சூக்குமை வாக்காவது:—பர சரீரத்தினுள்ளாக நாத மாத்திரையாய் விளங்குதலும், ஞான மாத்திரைக்கு ஏதுவாதலுமாகிய இலக்கணத்தையுடையதாம். பைசந்தி வாக்காவது:—மேல் விளங்கித் தோன்றுதற்கு [illegible]யாகிய பஞ்ச வன்னங்களோடுஞ் சூக்கும ரூபமாய் அடைபட வொடுங்கி நிற்கும் மயில் முட்டையினீர்போலப் பலவகைப்பட வெழுத்துக்கள் மத்திமைத் தானத்துப் பிரிவுபட விளங்கித் தோன்று முறைமையின்றி அடங்கி மிகவுஞ் சூக்கும ரூபமாகக் கொண்டு சிந்தையின் கண் நிற்றலும், நிருவிகற்ப உணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டு இலக்கணமாக [illegible]யது. மத்திமை வாக்காவது:— செவியிற்கேட்கப்படாததாயும், மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்குதலுமாயுஞ் சொல்

வயான் தன்னுள்ளே புணர்ந்து சவிகற்ப வுணர்வுக்கேதுவாய் தன்னுள்ளே புணரப்படும் முறைமையாதலும், பிராண வாயுவின் தொழிற்பாடின்றி உதான வாயுவின் தொழிற்பாடின்றித் தொனிக்கு மிசைவிய ஆன்மவின்மையிற் சூக்குமரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றுவதும் பல்லிதழ் நாவண்ணங்களிற் பட்டுச் செவிப்போத வின்மையுமாகிய இவ்விரண்டிலக்கணத்தாலு முறைமையே பைசந்திக்கும் வைகரிக்கும் வேறுபாடறியப்படுவது.

வைகரிவாக்காவது:— தன் செவிக்கு மாத்திரம் கேட்குஞ் சூக்கும வைகரி யென்றும், பிறர் செவிக்குங் கேட்குந் தூல வைகரியென்றும் இரண்டு வகைப்படும். அதன் இலக்கணமாவது சொல்வானுக்குங் கேட்பானுக்கும் சவிகற்ப வுணர்வு உண்டாதற்கு ஏதுவாதலும், மத்திமைக் காரணத்தாற் சூக்கும ரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்று வுந்தப்பட்டெழுந்து புறத்தோசையுடைய துடைத்தாதலுமாகிய இரண்டும் இலக்கணமாக வுடையது. இனி ஐம்பத்தோரக்கரங்களாவன:— அகரமுதல் க்ஷகரமீறாகவுள்ள வெழுத்துக்களாம். எண்பத்தொருபதங்களாவன:— ஓம் என்றும் பது முதலாகச் சொல்லப்பட்டவைகளாம். சத்தகோடி மகாமந்திரங்களாவன:— நமசுத முதலாகச் சொல்லப்பட்ட வருத்தங்களையுடைய மந்திரங்களாம். இருபத்தெட்டாகமங்களாவன:— காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதகம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம். இவ்வாகமங்கள் மந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தம் எனவும் பெயர் பெறும். இவ்வாகமங்களுக்குக் கிரந்தவளவாவன:— காமிகத்துக்குப் பரார்த்தம், யோகஜத்துக்கு இலக்ஷம், சிந்தியத்துக்கு இலக்ஷம், காரணத்துக்குக்கோடி, அசிதத்துக்கு நியுதம், தீப்தத்துக்கு நியுதம், சூக்குமத்துக்குப் பதுமம், சகச்சிரத்துக்குச் சங்கம், அஞ்சுமானுக்கு ஐந்திலக்ஷம், சுப்பிரபேதத்துக்கு மூன்றுகோடி, விசயத்துக்கு மூன்றுகோடி, நிச்சுவாசத்துக்குக் கோடி, சுவாயம்புவத்துக்கு



மூன்றரைக்கோடி, ஆக்கினேயத்துக்கு முப்பதினாயிரம், வீரத்துக்கு நியுதம், ரௌரவத்துக்கு அற்புதம், மகுடத்துக்கு இலக்ஷம், விமலத்துக்கு மூன்றிலக்ஷம், சந்திர ஞானத்துக்கு மூன்றுகோடி, முகவிம்பத்துக்கு இலக்ஷம், புரோற்கீதத்துக்கு மூன்றிலக்ஷம், இலளிதத்துக்கு எண்ணாயிரம், சித்தத்துக்கு ஒன்றரைக் கோடி, சந்தானத்துக்கு ஆறாயிரம், சர்வோக்தத்துக்கு இரண்டிலக்ஷம், பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டிலக்ஷம், கிரணத்துக்கு ஐந்து கோடி, வாதுளத்துக்கு இலக்ஷம். ஆகமம் என்பதற்குப் பொருள்:— ஆ என்பது-பாசம், க என்பது-பசு, ம என்பது-பதி எனப்பொருள் படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த லக்ஷணத்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்தபொருள் என்க. ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாம் ஆதலால் ஆன்மாக்களுக்கு மலத்தைநாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து, மோக்ஷத்தைக் கொடுத்தல் பற்றி ஆகமமெனப் பெயராயிற்றென்று கூறுதலும் ஒன்று.

இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்களுடையனவா யிருக்கும்.

இவற்றுள் ஞான பாதத்தில் பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதான சத்தியென்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவ முதற் பிருதிவிதத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களினுற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியா முறைமையும், புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், அவாந்தரப் பிரளயம் மத்திமப்பிரளயம் மகாப் பிரளயங்களின் சொரூபமும், அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியா முறைமையும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், பாசுபதம் மாவிரதம் காபால முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும்.

இனி யோக பாதத்தில் இந்த முப்பத்தாறு தத்துவங்களும், புவனேசரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சுத்தத்துக்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும்வல்லமையும், அணி

மாதி சித்திகளுண்டா முறைமையும், இயம முதலிய அட்டாங்கங்களின் முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில் மந்திரங்களின் உத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமங்களும், சமயம் விசேடம் நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக் குபாயமாகிய தீக்கையுங் கூறப்படும்.

இனிச் சரியாபாதத்தில் பிராயச்சித்த விதியும், பவித்திரவிதியும், சிவலிங்க விலக்கணமும், நந்தி முதலிய கணநாத விலக்கணமும், செபமாலை யோகபட்டந் தண்டங் கமண்டல முதலியவற்றினிலக்கணமும், அந்தியேட்டி விதியுங் கூறப்படும்.

இவ் வாகமங்கள், பரமசிவனுக்கு அவயவங்களாய் நிற்குமுறை. எப்படியெனின், கூறுதும். பரமசிவனுக்கு, காமிகம் அடிகளாம்; யோகசம் கணைக்கால்களாம்; சிந்தியம் திருவடி விரல்களாம்; காரணம் கெண்டைக் கால்களாம்; அசிதம் முழந்தாள்களாம்; தீப்தம் தொடைகளாம்; சூக்குமம் குய்யமாம்; சகச்சிரம் கடிதடமாம்; அஞ்சுமான் முதுகாம்; சுப்பிரபேதம் கொப்பூழாம்; விசயம் உதரமாம்; நிச்சுவாசம் மூக்காம்; சுவாயம்புவம் தனங்களாம்; ஆக்கினேயம் விழிகளாம்; வீரம்கழுத்தாம்; ரௌரவம் செவிகளாம்; மகுடம் முடியாம்; விமலம் கைகளாம்; சந்திரஞானம் மார்பாம்; முகவிம்பம் முகமாம்; புரோற்கீதம் நாவாம்; இலளிதம் கபோலங்களாம்; சித்தம் நெற்றியாம்; சந்தானம் குண்டலமாம்; சருவோக்தம் உபவீதமாம்; பாரமேசுரம் ஆரமாம்; கிரணம் இரத்தினாபரணங்களாம்; வாதுளம் பரிவட்டமாம்; இச் சைவாகம சித்தாந்தம் திருவமுதாம் என்க.

காமிகத்தில் நிச்சுவாசம் இருதயமென்றும், வாதுளம் பிராணனென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

இவ் வாகமங்கள் சிவபேதம் என்றும் உருத்திரபேதம் என்றும் இரண்டு வகைப்படும். சிவபேதமாவன:—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் என்னும் பத்துமாம். உருத்திர பேதமாவன:—விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம்



ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்னும் பதினெட்டுமாம். இவ் விருபத்தெட்டாகமங்களையும் கேட்டவர்கள் பெயரும் உபபேதங்களும் கூறுவாம். காமிகத்தைக் கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர் என மூவர். உபபேதம் மூன்று. யோகசத்தைக் கேட்டவர் சுதர், பஸ்மர், விபு என மூவர். உபபேதம் ஐந்து. சிந்தியத்தைக் கேட்டவர் சுதீப்தர், கோபதி, அம்பிகை என மூவர். உபபேதம் ஆறு. காரணத்தைக் கேட்டவர் காரணர், சர்வருத்ரர், பிரசாபதி என மூவர். உபபேதம் ஏழு. அசிதத்தைக் கேட்டவர் சுசிவர், சிவர், அச்சுதர் என மூவர், உபபேதம் நான்கு. தீப்தத்தைக் கேட்டவர் ஈசர், ஈசானர், உதாசனர் என மூவர். ஈசானருக்குப் பதிலாக திரிமூர்த்தி என்று சிலவாகமங்கள் கூறும். உபபேதம் ஒன்பது. சூக்குமத்தைக் கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர் என மூவர். உபபேதம் ஒன்று. சகச்சிரத்தைக் கேட்டவர் காலர், பீமர், தருமர் என மூவர். உபபேதம் பத்து. அஞ்சுமானைக் கேட்டவர் அம்பு, அக்ரர், இரவியென மூவர். உபபேதம் பன்னிரண்டு. சுப்பிரபேதத்தைக் கேட்டவர் தசேசர் (தேசேசர் என்றும் ஆகமங் கூறும்), விக்கினேசுவரர், சசி என மூவர். உபபேதம் ஒன்று. இந்த முப்பதுபேரும் சிவபேதம் என்றறிக.

விசயத்தைக் கேட்டவர் அநாதி உருத்திரர், பரமேசர் என இருவர். உபபேதம் எட்டு. நிச்சுவாசத்தைக் கேட்டவர் தசாணர், பார்வதி என இருவர். உபபேதம் எட்டு. சுவாயம்புவத்தைக் கேட்டவர் நிதநேசர், பிரமன் என இருவர். உபபேதம் மூன்று. ஆக்கினேயத்தைக்கேட்டவர் வியோமர், உதாசனர் என இருவர். உபபேதம் ஒன்று. வீரத்தைக் கேட்டவர் தேஜசு, பிரசாபதி என இருவர். உபபேதம் பதின்மூன்று. இரௌரவத்தைக் கேட்டவர் பிராம்ஹணேசர், திருநந்திதேவர் என இருவர். உபபேதம் ஆறு. மகுடத்தைக் கேட்டவர் சிவர், மகாதேவர் என இருவர். உபபேதம் இரண்டு. விமலத்தைக் கேட்டவர் சருவாத்மகர், வீரபத்திரர் என இருவர். உபபேதம் பதினாறு. சந்திரஞானத்தைக் கேட்டவர் அநந்தர், பிரகம்பதி என இருவர். உபபேதம் பதினொன்று. முகவிம்பத்தைக் கேட்

டவர் பிரசானந்தர், ததீசி என இருவர். உபபேதம் பதினொந்து. புரோற்கீதத்தைக் கேட்டவர் ருவி, கவசர் என இருவர். உபபேதம் பதினாறு. இலளிதத்தைக் கேட்டவர் ஆலயேசர், இளிகர் என இருவர். உபபேதம் மூன்று. சித்தத்தைக் கேட்டவர் பிந்து, சண்டேசுவரர் என இருவர். உபபேதம் நான்கு. சந்தானத்தைக் கேட்டவர் சிவநிஷ்டர், அசம்வாபர் (அசம்பாதர்களையும் ஆகமங்கூறும்) என இருவர். உபபேதம் பன்னிரண்டு. சருவோக்தத்தைக் கேட்டவர் சோமர், திருசிம்மர் என இருவர். உபபேதம் ஐந்து. பாரமேசுரத்தைக் கேட்டவர் சிதேவி, உசநர் என இருவர். உபபேதம் ஏழு. கிரணத்தைக் கேட்டவர் தேவவிபவர், சம்வர்த்தகர் என இருவர். உபபேதம் ஒன்பது. வாதுளத்தைக் கேட்டவர் சிவர், மகாகாளர் என இருவர். உபபேதம் பன்னிரண்டு. ஆக இருநூற்றேழு. இந்த முப்பத்தாறு பேரும் உருத்திரபேதம் என்றறிக.

இந்த ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐந்து வகைப்படும். தற்காலத்திற் பயன்றருவது வைதிகம், ஆத்தும விசார வியற்கையது அத்தியான்மிகம், யோகவியற்கையது அதிமார்க்கம், சிவஞானவியற்கையது மாந்திரம் எனப்படும். அவற்றுள், மாந்திரம், பிற நால்களைப் பூருவபக்ஷமாகக் கீழ்ப்படுத்தி, மேம்பட்டு விளங்கும் காமிக முதலிய சைவாகமங்கள். ஆகமாந்தம் என்னும் ஞானபகுதி, யோகரூடிநாமமாகிய சித்தாந்தம் என்னும் பெயரையுடையது. அது இரத்தினத்திரயத்திலே, "சித்தாந்தமே சித்தாந்தம், அவைக்கு வேறுபட்டன பூருவபக்ஷங்கள்" என்றும், காந்தத்திலே "சிவன் வெள்ளி மலையாகிய கைலாசத்திலே சனகர் முதலிய முனீந்திரர்களுக்குத் திரிபதார்த்தங்களினாலே இரகசியமாயும், ஆகமாந்தம் என்னும் பெயர்த்தாகியும் உள்ள சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்" என்றும், "சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றும் இல்லை. இந்தச் சைவ நாலே மூலமாம். சைவமே வைதிகம் எனப்படும். வைதிகமே சைவம் எனப்படும். சைவமானது வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதிகம் சைவத்திற் றாழ்ந்தது. முனிவரரே, அற்றாயினும், சைவம் வேதப்பொருளோடு ஒற்றுமையாய் இருத்தலால், வைதிகம் என்றும், வேதசாரம்



என்றும் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானமே பரஞானம். பசு பாசபதார்த்தபோதமாகிய வேத முதலியன அபரஞானமாம். இராத்திரியில் மனிதாது கண்ணும் பூனையின் கண்ணும் விலக்ஷணமாய் இருப்பது போல, இந்தப் பரஞானமும் அபரஞானமும் விலக்ஷணமாயிருக்கும்" என்றும் கூறுபவற்றால் அறிக. "லௌகிகம் முதலிய ஐந்தும் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையன. காமிகத்தில் சித்தாந்தம் மந்திர தந்திரமாகும். அதி மார்க்கம் அதனிற் றாழ்ந்தது. அத்தியான்மிகம் அதனினும் தாழ்ந்தது, அதனினும் தாழ்ந்தது வைதிகம். வைதிகத்திலும் தாழ்ந்தது லௌகிகம்" என்று சொல்லப்பட்டது.

சைவாகமங்கள் வைதிக பாஹியம் ஆதலின் அப்பிரமாணங்கள் என்று சிலர் அறியாதுகூறுவர். வேதாந்த நிஷ்டை பெற்றுக் கர்மகமற்ற ஞானிகளும், எனது சிவாகமத்திலே தற்பரர்களாகி ஞானபாதத்திலே நிலை நின்றோருமாகிய இருவகையோரும் பெறற்கரிய சாயுச்சியம் பெறுவர்கள். கருமத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் வேதாகமம் என்று பிரசித்தி பெற்ற இரண்டு மார்க்கங்களிலும் நில்லாத புரவிகள் சாத்திரத்திற் கூறிய நால்வகைத் தண்டங்களாலும் தண்டிக்கற் பாலர்கள் என்னும் காந்த சம்பவ சிதம்பர மான்மியத்தில் சிவன் கூறிய பொருளையுடைய வியாச வாக்கியத்தினாலே, அது பேதைமையாம் என மறுக்க. வேதநெறிவழுவிய பாந்தர்க்கே தந்திரங்கள் கூறப்பட்டன எனச் சில நூல்களிற் கூறிய தென்னையெனின், ஆண்டுக் கூறியது வாம பாசுபத லாகுள பைரவ முதலிய தந்திரங்களை அன்றிச் சிவ சித்தாந்த தந்திரங்களை அன்றென்க. அது அப்பய தீக்ஷிதர் இயற்றிய சிவதத்துவ விவேக விருத்தியில் பல பிரமாணங் கொண்டு சாதிக்கப்பட்டது. காந்தத்திலே, சிவன் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து வேதங்களையும் உபநிடதங்களையும் சனகர் முதலிய முனீந்திரர்களுக்கு ஓதுவித்தார். அவர்கள் நெடுநாள் வரை ஓதியும், சிவனது மாயையினாலே ஞானம் நிலைபெறுதலராயினர் என்றும், பின்பு ஆகமாந்தம் என்னும் பெயருடைய சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும் கூறுமாற்றால் அறிக. சைவ புராணத்தில் "பசு சாத்திரங்களைப் பற்றுதல் விட்டுச் சிவசாத்திரத்தைப் பற்றிப் [illegible]பயிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்

தாருமே ஆசாரியராவரென்று புகழப்படுவர். சிவாகமத்திற் கூறப்பட்ட ஞானமே ஞானமென்று கூறப்படும். அதுவே முத்திசாதன" மென்றும், கூறுதலாலும் சுவேதர் உபமன்னியு கிருஷ்ணர் அருச்சுனர் முதலியோர் சிவ சித்தாந்த மார்க்கச் சிரவணஞ் செய்தமையாலும் சிவசித்தாந்தம் வேதநெறி வழுவிய மாந்தருக்குரிய தென்பது சிறிதும் பொருந்தாது. இன்னும் பிரமமீமாஞ்சைக்கு நீலகண்டசிவாசாரியர் இயற்றிய பாஷ்யத்தில், "வேத சிவாகமங்களுக்குப் பேதங் காண்கின்றிலம், வேதமே சிவாகமம்" என்று கூறப்பட்டது. இப்படிப்பட்ட சைவசித்தாந்தத்தைப் பல பிறவிகளிற் செய்த தபோ பலத்தினாலே அடைவார்கள்.

உதாரணம்—சிவசிவஞான சித்தியார்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக் கண்சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து



முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில்வீழ்ந்திடுவரிதுவென்னபிராந்தி. என்றும்.

குமரகுருபரசுவாமிகள் பண்டார மும்மணிக்கோவையில்

"வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே—அவற்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வா றயப்ப
ஒருங்குவே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே"

என்றும், கூறுமாற்றால் சைவசித்தாந்தத்தினருமையை நன்றாகக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

இனி சிவாகமங்கள் இருநூற்றேழாவன:—சுதந்திராரம், பைரவோத்தரம், மிருகேந்திரம், பிஞ்ஞகோத்திரம், தாரம், சுசசம், சந்தாதி, ஆத்துமயோகம், சுரேந்தியம், சுபகம், வாமம், பாசுபாசம், பரோற்பவம், (சுரோற்பவம்) அமிருதம், காரணம், பாவகம், தௌதிகம், மகேந்திரம், பீமம், மாரணம், திவேஷ்டம், பிரபூதம், பரோத்பூதம், பார்வதீசம்மிதை, பதுமசம்மிதை, அமேயம், சப்தம், ஆச்சாத்தியம், அசங்கியம், அமிதௌஜஸம், ஆநந்தம், மாதவோத்பூதம், அற்புதம், அகூதம், அதீதம், மங்களம், சுத்தம், அப்பிரமேயம், சாதிபாக்கு, பிரபுத்தம், விபுதம், அத்தம், அலங்காரம், சுபோதகம், வித்தியாபுராண தந்திரம், வாசவம், நீலலோகிதம், பிரகாரணம், பூததந்திரம், ஆத்துமாலங்காரம், காச்சியபம், கௌதமம், ஐந்திரம், பிராமியம், வாசிட்டம், சனகம், விசயம், உற்பவம், சௌ

ல

ம்பிம்பம், அகோரம், மிருத்தியுகாசகம், குபேரம், மகாகோரம், விமலம், நிச்சுவாசம், உத்திர நிச்சுவாசம், நிச்சுவாசமுறமுகாதயம், நிச்சுவாச நயனம், நிச்சுவாசகாரிகை, கோரசமிஞம், யமாக்கியம், குப்யம், பிரசாபதிமதம், பதுமம், சுவாயம்புவம், பிரத்தாரம், புல்லமலம், பிரபோதம், போதம், போதகம், அமோகம், மோகசமயம், ஆகடம், சகூடாதிகம், பிதலம், விலேககம், பத்தரம், வீரம், காலக்கனம், கலாநிதம், இரௌரவம், இரௌரவோத்தரம், மகாகாளமதம், சந்திரம், மகுடம், மகுடோத்தரம், அநந்தம், போகம், ஆக்கிராந்தம், விருஷபிங்கம், விருஷோத்தரம், விருஷோற்புதம், சுதந்தம், இரௌ[illegible]தரம், பத்தரவிதம், அரேவதம், அதிக்கிராந்தம், அட்டஹாசம், அலங்கிருதம், அர்ச்சிதம், தாரணம், மாரணம், தந்திரம், ஸ்திர[illegible] ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுவரம், ஏகபாதம், சங்[illegible] நீலருத்தரகம், சிவபத்திரம், கற்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசநம், சிவசேகரம், தேவிமதம், சதுர்முகம், மலயம், (மகாயோகம்) அயேர்கம், சமுஸ்தோபம், பிரதிபிம்பகம், ஆத்துமாலங்காரம், வரியங்வியம், தௌடிகம், அடிநீரகம், கலாதியயம், [illegible] (ஹாலரோகம்) குட்டிமம், பட்டசேகரம், மகாவி[illegible]த, மகாசௌரம், கவசம், வராகம், பிங்களமதம், பாசபந்தம், தண்டதரம், அங்குசம், தநுர்த்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர்வேதம், தநுர்வேதம், சர்ப்பதம், ஷட்ரீவி[illegible]பதநம், கீதம், பரதம், ஆதோத்தியம், இலளிதம், இலளிதோத்தரம், கௌமாரம், சாரோத்தரம், ஓ[illegible]தோத்தரம், சாலாபேதம், சிகண்டம், இலிங்காத்யக்ஷம், சூராத்தியட்டம், சங்கரம், அமலேஸ்வரம், அசங்கியம், அநிலம், திவ்ந்திவம், சிவதர்மோத்தரம், வாயுப்பிரோத்தம், திவ்வியப்பிரோத்தம், ஈசாநம், சர்வோற்கீதம், மதங்கம், பக்ஷணிபக்ஷம், பாரமேஸ்வரம், பௌஷ்கரம், சுப்பிரயோகம், அம்சம், சாமாந்நியம், காருடம், நைருதம், நீலம், ருக்ஷம், பாநுகம், தேநுகம், பிரபுத்தம், புத்தம், காலம், வாதுளம், உத்ரதவாதுளம், காலஞானம், பிரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேஷ்டம், நித்தியம், சுத்தம், மகாநநம், விசுவம், விசுவாத்மகம் என்பனவாம். இவ்வுபாகமங்கள் பரமேசுவரனுக்குப் பிராணவாயுவாகவும், இருபத்திரண்டு நாடிகளாகவும், வாசநாத்திரவியப்பூச்சாகவும், புட்பமாலையாவும் கூறப்படும். தந்திரம், சித்தாந்தம், மந்திரம், ஆகமம் என்பன ஒரு பொருட் சொற்கள்.



நான்கு வேதங்களாவன:—இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பனவாம். அவற்றுள், இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூற்றொரு சாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும், அதர்வவேதம் ஒன்பது சாகையும் உடையனவாம். வேதங்கள் நான்கு பகுதியாகத் தோன்றினபடியால் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் வருணங்களும்—பிரமசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்களும் நான்காயின. இந்த வேதங்கள் கருமகாண்டம் ஞானகாண்டம் என இரண்டுவகைப்படும். கருமகாண்டம் கர்மாநுஷ்டானக்கிரமங்களைச் சொல்லும். ஞானகாண்டம் சிவபெருமானது சச்சிதாநந்தசொரூபத்தைக் கூறும். வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப்பொருள்படும். இது ஆயிரத்தெட்டுநூற்றெண்பது உபநிஷத்தாயிருக்கும். இவைகளுள்ளே அதிசாரமாயும், இரகசியமாயுமுள்ள உபநிடதங்கள் நூற்றெட்டு.

இருக்கு வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள்:—ஐதரேயம், கௌஷீதகி, நாதவிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அக்ஷமாலிகை, திரிபுரை, சௌபாக்கியம், வக்விருச்சானை என்னும் பத்துமாம்.

யசுர்வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள்:—கடவல்லி, தைத்திரீயம், பிரமம், கைவல்லியம், சுவேதாச்சுவதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்கினிருத்திரம், க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகசியம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாக்ஷரம், அக்ஷியம், அவதூதம், கடம், உருத்திரவிருதயம், யோககுண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணாக்கினிகோத்திரம், வராகம், கலிசந்தரணம், சரசுவதி, ஈசாவாசியம், பிருகதாரணியகம், சாபாலம், அம்சம், பரமகம்சம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகி, மண்டலம், அத்துவயதாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், அத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞவல்கியம், சாட்டியாயனி, முத்திகம் என்னும் ஐம்பத்தொன்றுமாம்.

சாமவேதத்துக்கு உள்ள உபநிடதங்கள்:—கேனம், சாந்தோக்கியம், ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிரசூசிகம்,

யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியக்தம், குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்க சாபாலம், தரிசனம், சாபாலம் என்னும் பதினாறுமாம்.

அதர்வ வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள்:—பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகசாபாலம், நிருசிம்மதாபனி, நாரதபரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்விபூதி மகாநாராயணம், இராமரகசியம், இராமதாபனி, சாண்டில்யம், பரமஹம்ச பரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம், திரிபுரதாபினி, தேவி, பாவனை, பஸ்மஜாபாலம், கணபதி, மகாவாக்கியம், கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்கிரீவம், தத்தாத்திரேயம், காருடம் என்னும் முப்பத்தொன்றுமாம்.

இவற்றுள்ளே அதர்வசிரோபநிடதம், அதர்வசிகோபநிடதம், கைவல்லியோபநிடதம், சுவேதாச்சுவதரோபநிடதம், காலாக்கினிருத்திரோபநிடதம் என்னும் ஐந்தும் பஞ்சருத்திர மென்னப்படும்.

வேதத்திலே பூருவபக்கமாகச் சொல்லிப் பின்னர்த் தள்ளிய சில பக்கங்களையே சிலர் சித்தாந்த பக்கமெனக் கொண்டு, சித்தாந்த வாக்கியங்களுக்குப் பெரியோர் உரைக்கும் உண்மைப் பொருளை விடுத்துத் தாம்கொண்ட விபரீதப் பக்கங்களுக்கிசையப் பொருள் கற்பித்து, அங்ஙனம் தாம் கற்பித்த மீமாஞ்சை மாயாவாதம் பாஞ்சராத்திரம் முதலிய சமயங்களைத் தனித்தனியே வைதிக சமயங்களாகக்கொண்டு, அவ்வைதிக சமயங்களை விரித்துணர்த்தி அவரவர்கள் கருமங்களுக்கிசைய ஒவ்வொருவரும் ஒவ்வோர் நூலைச் செய்தார்கள். உலகத்தில் பலர் இந் நூல்களையே வேதத்தின் உண்மைப்பொருளை விரித்துரைக்கும் நூல்களெனக் கொண்டு வேதாந்தத்தின் உண்மைப் பொருளாகிய சைவசித்தாந்தத்தை இழந்திருக்கின்றார்கள். ஐயோ இஃது என்னமயக்கம்! வேதத்தின் ஞானகாண்டப்பொருள் அனேக கோடி பிறவிகளிற் செய்த தவபலத்தினாலேயே நிருவாணதீட்சை செய்யப்பெற்றுச் சித்தாந்தத்தை ஓதியுணர்ந்தோர்களுக்கே விளங்குமென்க.

உபநிடதங்களை உற்றுநோக்கி வியாசமுனிவர் செய்தருளிய சூத்திர ரூபமாகிய பிரமமீமாஞ்சை வேதாந்தமெனப்படும். இஃது



உத்தரமீமாஞ்சை யெனவும் சாரீரகசூத்திரமெனவும் வேதாந்தசூத்திரமெனவும் பெயர்பெறும். இந்த வேதாந்தசூத்திரம் நான்கு அத்தியாயங்களையும், பதினாறுபாதங்களையும், நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும், ஐந்நூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையும் உடையது. வேதாந்த சூத்திரத்தின் முதலாம் அத்தியாயத்திலே சிவத்தினியல்பும், இரண்டாம் அத்தியாயத்திலே சாங்கிய முதலிய புறச்சமய விரோதபரிகாரமும், மூன்றாம் அத்தியாயத்திலே வித்தியாசாதன நிர்ணயமும், நான்காம் அத்தியாயத்திலே ஞானசாதனபலமாகிய வீடுபேறும் கூறப்படும். முதலாம் அத்தியாயத்தின் முதலாம் பாதத்தின் முதலாம் சூத்திரம் பிரமேயமாகிய சிவத்தினியல்பையும், இரண்டாம் சூத்திரம் பிரமாதாவாகிய ஆன்மவியல்பையும், மூன்றாஞ் சூத்திரம் பிரமாணமாகிய சிவஞானவிடயத்தையுங் கூறும். இந்த வேதாந்த சூத்திரத்தின் மெய்ப்பொருள் வேதாகமங்களை நிலைகண்டுணர்ந்த நீலகண்ட சிவாசாரியார் உரைத்த பாடியத்தால் இனிதுவிளங்கும். மற்றைச் சங்கராசாரியர் இராமாநுசாசாரியர் மத்துவாசாரியர் உரைத்த பாடியங்கள் சிவாகமங்களுக்கு மாறுபட்ட புறச்சமய நூற் பொருளுடையனவாம்.

இந்தவேதங்கள் பரமசிவனது ஆசனமாயும் பாதுகையாயும் வாகனமாயும் நூபுரமாயும் கோவணமாயும் சரடாயும் கண்களாயும் மொழியாயும் வடிவமாயும் செங்கோலாயும் ஆணையாயும் விளங்கும்.

இந்த வேதங்கள் ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுத்து விதிவிலக்கைக்கற்பித்துப் போகங்களைக் கூட்டிப் பாசப்பிணிப்பை அறுத்து முத்தியைக்கொடுக்கும்.

உதாரணம்—திருவிளையாடல்.

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகும் மறையே நமது வடிவாகும்.

வேதந் தானே நமதாணைச் சூத்தி வடிவாய் விதிவிலக்காய்ப்
போதங் கொளுத்தி நடாத்திப் போகங் கொடுத்துப் பல்லுயிர்க்கும்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுதேன்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும்.

திருவாசகம்.

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

தன்னை என்றது தனது, அருளை. தன் ஐ, தன்னை. தன் - சிவம். ஐ - அருள். வேற்றுமையியல்பு முடிந்தது.

பதினெண்புராணங்களாவன:—சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்த மென்பனவாம்.

இவற்றுள் சைவமுதல் பிரமாண்டம் ஈறாகக் கூறப்பட்ட பத்தும் சிவபுராணங்களாம். காருடமுதல் பாகவதம் ஈறான நான்கும் விட்டுணு புராணங்களாம். பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம் அக்கினிபுராணமாம். பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம்.

இனிச் சைவபுராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், பவிடியபுராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேயபுராணம் முப்பத்தீராயிரங் கிரந்தமும், இலிங்க புராணம் பதினோராயிரங்கிரந்தமும், காந்தபுராணம் இலக்கங் கிரந்தமும், வராகபுராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், வாமனபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், மச்சபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், கூர்மபுராணம் ஆயிரங் கிரந்தமும், பிரமாண்டபுராணம் பன்னீராயிரங் கிரந்தமும், காருடபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், நாரதீயபுராணம் இருபத்தையாயிரங் கிரந்தமும், வைணவபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பாகவதபுராணம் பதினெண்ணாயிரங் கிரந்தமும், பிரமபுராணம் பதினாயிரங் கிரந்தமும், பதுமபுராணம் ஐம்பத்தையாயிரங் கிரந்தமும் ஆக்கினேய புராணம் எண்ணாயிரங் கிரந்தமும், பிரமகைவர்த்தபுராணம் பன்னீராயிரங் கிரந்தமு முடையனவாம். இதிகாசமும் ஈண்டடங்கும். சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். விஷ்ணுபுராணம் நான்கும் தாமசங்களாம். பிரமபுராணம் இரண்



டும் இராசசங்களாம். அக்கினி புராணமும் சூரியபுராணமும் திரிகுண யுக்தமாம்.

(௧.) சைவபுராணம், பிரமன் விட்டுணு இருவர் பிறப்பு இறப்புக்கள், உலக சிருட்டிகள், பிரபஞ்ச விரிவுகள், உலகமெல்லாம் சிவலிங்கத்தினின்று உற்பத்தியானமை, சிவலிங்க வழிபாடு, புண்ணியகாலம், புண்ணிய க்ஷேத்திரம், புண்ணியதீர்த்தம், பிரமன் விண்டு இருவரும் சிவலிங்க வயத்தராயினமை, சிவலிங்கபூசை முறைமை, ஆசரிக்கும்விதிகள், யோகாப்பியாசம், தீர்த்தமான்மியம், சிவாநந்திய நிட்டாநுபூதி, திரிபுராசுரர் வரலாறு, தக்கன் யாகம், விநாயக சுப்பிரமணியர் தோற்றம் முதலானவற்றை யுணர்த்தும். (௨.) பவிடியபுராணம், பிரமன் மனுவுக்கு அகோர கற்பத்தில் உலக முளதாமுறைமையும், இருட்டி பேத முதலியவைகளையும் உரைத்த முறையை உணர்த்தும். (௩.) மார்க்கண்டேய புராணம், பாண்டவர் ஐவருக்கும் திரௌபதி யொருத்தி மனைவியாதற்குக் காரணமும், பலராமன் மதுமயக்கத்தினால் தான்செய்த பிரமகத்தி நிவிர்த்தியின் பொருட்டுப் பிராயச்சித்தஞ்செய்தற் கேதுவும், திரௌபதி புதல்வர் ஐவருக்கும், காத்தற்றலைவனான கண்ணன் அருச்சுனன் இருவருக்கும் அகால மரணம் எய்தற்குக்காரணமும் உணர்த்தும். (௪.) இலிங்க புராணம், அக்கினி கற்பத் திறுதியில் சீவர்களடையுஞ் சீலம் ஐசுவரியம் இன்பம் மோக்ஷங்களையும், சிவலிங்க மகிமைகளையும் விரித்துணர்த்தும். (௫.) காந்தபுராணம் தற்புருட கற்பத்தின் சம்பவங்களையும், அறுமுகக் கடவுளுடைய மான்மியத்தையும் விரித்துணர்த்தும். (௬.) வராகபுராணம், விண்டுவின் வாயில் காவலராகிய சயவிசயர் வைகுண்ட லோகம் புகுந்த முனிவரைத் தடுத்துச் சாபமேற்றுப் பூமியிற் காசிபன் திதியென்பவர் புதல்வராய்ப் பிறந்து, இரணியன் இரணியாக்கன் எனப்பெயர் பெற்றமையும், இரணியன் மூவுலகங்களையும் வென்றமையையும், இரணியாக்கன் சுவர்க்கத்துக்குப்போய்த் தேவர்களை வென்றமையையும், தேவர்கள் வராகவுருவமுற்றிருந்த விண்டுவை வேண்ட அவ்விண்டு அவ்விரணியாக்கனைக் கொன்றமையையும், திதி என்பவளுக்கும் விண்டுவுக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் திதி தோற்றமையையும், விண்டு வராக ரூபத்தை நீக்கிக்கொண்டமையையும் உணர்த்தும். (௭.) வாமனபுராணம், தக்கன்

யாகம், இமயமலைப்பாலிருள்ள கேதாரேசுவர புரத்து விளங்கும் சிவலிங்கப்பெருமான் மகிமை, வைதிகாச்சிரம மகிமை, காமதகனம், சோமமான்மியம், தாருகாவன தீர்த்தமான்மியம், உமாமகேசர் விவாகம், முருகக்கடவுள் திருவவதாரம், மனுவந்தர சிருட்டி, சுவாரோசிஷ மனுவந்தரத்தில் இருந்த வைதீசயமாகிய பலிச் சக்கரவர்த்தி பரிபாலனம், அப்பலி அரசனை அடக்கவந்த வாமனமூர்த்தி வரலாறு என்னும் இவைகளையுணர்த்தும். (அ.) மச்சபுராணம் விண்டுவினது மச்சாவதார மான்மியமும், அவ்விண்டு ஜலப்பிரளய காலத்தில் மனுவையும் பிறரையும் ஓர் படகிலேற்றி வைத்துக் காத்தமையும், பிரமசிருஷ்டியும், திரிபுரத்தசுரர் சங்காரமும், தாரகாசுரனுக்கும் தேவர்களுக்கும் நிகழ்ந்த யுத்தமும், பார்வதி திருக்கலியாணமும், முருகக்கடவுள் திருவவதாரமும், விண்டுவவ தாரமுமாகிய கதைகளை யுமுணர்த்தும். (கூ.) கூர்மபுராணம், ஆமை வடிவங்கொண்ட சனார்த்தனன் இருடிகளுக்கும் இந்திரத்தியும னுக்கும் அறம் பொருள் இன்பம் வீடென்னு முறுதிப்பொருள் நான்கனையும் மொழிந்த வரலாறு உணர்த்தும். (௰.) பிரமாண்ட புராணம், பிரமன் பிரமாண்டத்தின் மகிமையையும், இனிவருங் கற்பங்கடோறு நிகழும் கதைகளையும் சொல்லிய வரலாறு உணர்த்தும். (கக.) காருடபுராணம், உலகசிருஷ்டியும், ... சங்கிரகம், தயிர விவரணம், சமயாசாரம், சோதிடம், புண்ணியக்ஷேத்திரம், சாமுத்திரிகாலக்ஷணம், இரத்னவிசேடம், ஔஷத முதலியவற்றை யுணர்த்தும். (கஉ.) நாரதீயபுராணம், விண்டு தோத்திரங்களையும், அவ் விண்டுவினை ஆராதனை செய்தற்குரிய புண்ணியகாலங்களையும், அருவர் பிரமலாதர் கதைகளையும், யோகி... கதைகளையும் உணர்த்தும். (கங.) விண்டுபுராணம், உலக சிருஷ்டியையும், பிரமனுடைய புதல்வர்களாகிய மரீசி, அத்திரி, ஆங்கிரசு, புலத்தியன், புலகன், கிரது, வசிட்டன், தக்கன், பிருகு என்னு மிவர்களால் சீவர்கள் உலகத்தில் படைக்கப்பட்டப் பெருமையையும், கற்பகாலத் திறுதியில் நிகழும் சங்காரத்தையும், பிரதி சர்க்கத்தையும், மனுவந்தரத்துள்ள அரசர் பரிபாலனங்களையும், பலவகைப்பட்ட லோகங்களையும், கிரக மண்டலங்களையும், சப்த கண்டங்களையும், அவற்றைச் சூழ்ந்த சப்த சாகரங்களையும், வியாசபகவான் வேதபுராண இதிகாசங்களை ஒழுங்



குபெற அமைத்த முறைகளையும், சாதி ஒழுக்கங்கள் முதலியவற்றையும், அரசர்களுடைய பரிபாலனங்களையும், அவர்கள் இராச்சியங்களையும், கண்ணனுடைய சரித்திரத்தையும், திரேதாயுக முதல் கலியுகம் வரையும் மனிதர் முறையால் தீச்செயல்களில் தலைப்பட்டு அவற்றானெய்தும் சலப்பிரளய அக்கினிப் பிரளயங்களினால் அழியுமாறுகளையும், கற்பகாலத் திறுதியில் எய்தும் உலக ஒழிவையும் உணர்த்தும். (கச.) பாகவதபுராணம், அத்தினபுரத் தரசனா பரீக்சித்து என்பவருக்குச் சுகமுனிவன் மரணத்தினைக் கடக்கு முபாயங்களை விரித்து அறிவிக்குமாறு உணர்த்தும். (கரு.) பிரம புராணம், உலக சிருட்டியையும், மனுவந்தரங்களையும், கண்ணன் காலபரியந்தம் இருந்த பெரிய சந்திரகுலத்து அரசர்களையும், சூரியன் சிவபெருமான் சந்நிதானத் திருக்கோயில்களையும், திருத்தல வனங்களையும், ஏகாந்த மான்மியத்தையும் உணர்த்தும். (கசு.) பதுமபுராணம், உலக சிருட்டி செய்யும் பொருட்டுப் பிரமன் ஓர் பதுமத்திலே தோற்றிய கதைகளையும், எல்லோருஞ் சென்று தரிசனம் செய்தற்கு உரிய ஆலயங்களையும், தீர்த்தங்களையும், பூமிக்கு மேலுள்ள அண்ட விரிவுகளையும், நாகருலகங்களையும், தீர்த்தமாடற் புண்ணியங்களையும், இலக்குமி நாராயணர் பொருட்டுச் செபிக்கற் பாலனவாகிய மந்திர முதலியவற்றையும் புனைந்துணர்த்தும். (கஎ.) ஆக்கினேய புராணம், விண்டுவின் அவதாரங்களையும், சிவபெருமானைக் குறித்துச் செய்யும் ஞான பூசையையும், பிரபஞ்ச விவரணங்களையும், அரசர் கடன்களையும் உணர்த்தும். (கஅ.) பிரமகைவர்த்த புராணம், கண்ணன் மகிமையையும், பிரமனாகர் கதைகளையும் உணர்த்தும்.

ஆறு சாஸ்திரங்களாவன:—சிக்கை, கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பனவாம். (1) சிக்கை வேதங்களை யெடுத்தல் படுத்தல் முதலிய விசை வேறுபாட்டினுச்சரிக்குமா றுணர்த்துவது. (2) கற்ப சூத்திரம் வேதங்களிற் கூறுங் கருமங்களை யநுட்டிக்கு முறைமை யுணர்த்துவது. (3) வியாகரணம் வேதங்களினெழுத்துச் சொற்பொருளியல்புணர்த்துவது. (4) நிருத்தம் வேதங்களின் சொல்பொருளுணர்விப்பது. (5) சந்தோவிசிதி வேத மந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும், அவற்றிற் கெழுத்து இனைத்தென்றலு முணர்த்து

வ௯. (6) சோதிடம் வேதத்திற் கூறுங் கருமங்கள் செய்தற்குரிய கால விசேடங்களை யுணர்த்துவது.

அறுபத்து நான்கு கலைகளாவன:— க. வேதம். உ. வாத்தியம். ௩. நிருத்தியம். அதாவது அபிநயம். ௪. நாட்டியம். ௫. சித்திரமெழுதல். ௬. வீணை வாசிப்பு. ௭. கர்ணவேலை. ௮. திருஷ்டிருமான சாத்திரம். ௯. இரத்தினப் பரிசை. ௰. உலோகப் பரிசை. கக. விருக்ஷ ஆயுர்வேதம். க௨. நந்த்சங்கப் போர்... களை இரத்தினமாக்கல். க௩. ஆடு கோழி வான்கோழி இவைகளின் யுத்த விதி. க௪. சுகசாரிகப்பிரலாபனம். அதாவது கிளி நாகணவாய்ப் பறவைகளைப் பேசுவித்தல். க௫. தேச ஞானம். க௬. பாஷாஞானம். க௭. சூதசாஸ்திரம். அதாவது சமையல் வித்தை. க௮. ஆகரஞானம். அதாவது புதையலறிதல். க௯. இயந்திர ஞானம். அதாவது இயந்திரம் போடவேண்டிய விதங்களை யறிதல். உ0. யாப்பிலக்கணம். உக. சூதாடலை யுணர்தல். உ௨. காம சாஸ்திரம். உ௩. பாடல்செய்ய வேண்டிய விதங்களை யுணர்தல். உ௪. சப்த ஸ்வரங்களை யுணர்தல். உ௫. சகுனம் பார்த்தல். உ௬. இரசவாதம். உ௭. கன்னியாவாதம். அதாவது மண்ணைப் பரிசுத்தித் தங்கமாக்குதல். உ௮. சாமுத்திரிகா சாஸ்திரம். உ௯. அசுவாதி இலக்கணங்களை யுணர்த்தும் நூல். ௩0. சாரத்திய ஞானம், அதாவது தேர் முதலியன நடத்தல். ௩க. மிருக வைத்தியம். ௩௨. வாள்யுத்தம். ௩௩. அக்கினித்தம்பம். ௩௪. சேர்த்தம்பம். ௩௫. காயசித்தி பண்ணல். ௩௬. வயந்தம்பம். அதாவது தனக்குரியவையை எப்போதும் நிலை நிறுத்துதல். ௩௭. உதககாதம். அதாவது ஜலத்தில் நீந்துதல். ௩௮. இந்திரஜாலம். ௩௯. மணிசித்தி. ௪0. மந்திரசித்தி. ௪க. ஔஷத சித்தி. ௪௨. பாதுகாசித்தி. ௪௩. அஞ்சனம். அதாவது மைபோட்டுப் பார்த்தல். ௪௪. சுரவஞ்சனம். அதாவது மிருகம் பக்ஷி முதலியவைகளைப்போல நடித்து அவைகளை வரவழைத்தல். ௪௫. கிருஷி. அதாவது விவசாயம். ௪௬. வியாபாரம். ௪௭. யுத்தகௌசலம். அதாவது யுத்தம் செய்தல். ௪௮. வித்வேஷணம். அதாவது சூனியம்வைத்தல். ௪௯. உச்சாடனம். அதாவது பிசாசுமுதலியவை ஓட்டல். ௫0. பாஷண்டசமயஞானம். அதாவது நாஸ்திகமதங்களையுணர்தல். ௫க. நகத்தைக்கொண்டு உருவவிலக்கணங்களை யுணர்தல். ௫௨. பல்லைப்



பார்த்து உருவகுணங்களைச் சொல்லல். ௫௩. சுழிகளைப்பார்த்துப் பலன் சொல்லல். ௫௪. தூங்கும்படி செய்தல். ௫௫. லிபிகௌசலம். அதாவது எல்லாப்பாஷைகளின் எழுத்துக்களையும் எழுதுதல். ௫௬. ரூபசொரூபஞானம். அதாவது எல்லாப்பக்ஷிகளின் உருவங்களை யுணர்தல். ௫௭. சர்ப்பவசீகரம். ௫௮. வியாக்கிராதி ஸ்தம்பனம். அதாவது புலி முதலியவைகளைக் கட்டல். ௫௯. விஷமிறக்குதல். ௬0. பூஷணகௌசலம். அதாவது ஆபரணமுதலியவை செய்தல். ௬க. ஸ்திரீ புருஷவசீகரணம். ௬௨. மல்யுத்தம். ௬௩. வாக்குத்தம்பம். ௬௪. இரேகைஞானம். ஆக அறுபத்துநான்குகலைகளும் உணர்ந்துகொள்க. இவற்றின் விரிவைச் சைவ தந்திரத்திற் காண்க.

சுத்தமாயையியல்பு முடிந்தது.

---

## அசுத்தமாயையினியல்பு.

---

"உலகிற்கு முதற்காரணமெனப்படும் அசுத்தமாயையாவது:— நித்தியமாய், அருவமாய், ஒன்றாய், உலகம் உண்டாதற்கு ஓர் விதையாய், சடமாய், வியாபகமாய், முதல்வனுக்கு ஓர் பரிக்கிரகசத்தியாய், தனுகரண புவனபோகங்களாக விரிந்தோர்மலமாய், ஆன்மாக்களையெல்லாங் கன்மத்தாற் பந்திப்பதாய், தன் காரியமுகத்தான் ஞானக்கிரியைகளை விளக்குமாயினும் மயக்குவதாயிருக்கும். மாயையென்பதின் பொருள் யாதெனில், மா என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல், ஆகலின் எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குவதற்கும், தன்கணின்று தோன்றுதற்குங் காரணமாய் நின்றது எனக். ஆதலால் ஒன்றற்கொன்று நுண்ணிதிற்செல்லுந் தத்துவங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாதோ அதனை மாயையென்றலே பொருத்த முடைமை யென்வறிக" என்றார் சிவஞானமாபாடியகாரர். இந்த மாயை ஒன்றே அநேகமென்பதற்குப் பிரமாணமில்லை. மூலகாரணமாதலால் நித்தியமென்று சொல்லப்படும். அநித்தியமாகில், பிரளயகாலத்தில் கன்மங்களுக்கு ஆசிரயமில்லாமற்போகும். அவற்றிற்கு விந்து ஆசிரயமாகாது. அந்தக்கன்மத்திற்கு வேறாகையால், ஆன்மாக்களும் ஆசிரயமாகா. சடமாய்ப் போகவேண்டி வருதலால் மாயாகாரிய

வெளிக்குந்தோன்றுகின்றமையால், அது வியாபகமாகும். அப்படியே
மிருகேந்திர முதலிய ஆகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. இந்த
மாயை விசித்திரமான காரியங்களை யுண்டாக்குகின்றபடியால் விசித்
திர சத்தியுள்ளது. அணுத்துமாவான தேகாதிகளில் ஆத்மப்பிரம
த்தை யுண்டாக்குகின்றபடியால் மோகினியென்று கூறப்படும். இது
சகலர்கள் எல்லாருக்கும் சாதாரணமாயும் பிரளயத்தில் ஒடுமடை
ந்த தேகமுதலாகர்மிகளுக்குஞ் சிருட்டி காலத்தில் கருக்கும ஆல
தேகங்களைத் தோற்றுவிக்கக் காரணமாயுமிருக்கும். இது லயம்
ரூபமான பிரபஞ்சத்திற்குக் காரணமாகையால் வஸ்து ரூபமாகும்.
இப்படிப்பட்ட மாயையினின்றும் காலதத்துவந்தோன்றி முதல்வின்
ஆணையால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றாய்ப்
பட்டுந் தோற்றம், நிலை, இறுதியென்னும் முத்தொழிலுமுடைய தன
க்குக் கீழுள்ள உடலும் உலகுமாகிய காரியப்பிரபஞ்சம் அனைத்தை
யும் காலவரையறைப்படுத்தி, கன்மத்தை வரைசெய்து நிற்கும்.
நியதி தத்துவம், அக்காலத்தின் பின்னாக மாயையினின்றுந்தோன்றி
முதல்வன் ஆணையால், அவரவர் செய்த கன்மம் அவரவரே அநுபவிக்கு
மாறு நியமிக்கும். ஆனால் ஒருவர் செய்த பலன்களை ஒருவர் புசி
க்கக் காண்கின்றோமெனின், யாகத்தில் இருத்துவிக்குகள் செய்த
கருமபலத்தை யஜமான் புசிக்குமாறுபோல ஏவினவன் தொழில்
செய்தவனுடைய பலத்தைப் புசிப்பன். அவ்வாறு ஏவினவனும்
ஏவல் செய்தவனுமின்றி ஒருவன் தனதென்று செய்த கருமபல
த்தை பின்னொருவன் புசிக்கக் காண்கின்றோமெனில், அதுவும்
பூருவ ஜென்மசம்பந்தமன்றி வராதென்க.

சங்கை. ஈசுவரசத்தியே நியமனத்தைப் பண்ணுமாதலால்,
நியதிதத்துவ மூலமாகப் பண்ணுவது யாது காரண மெனின்,
ஈசுவரசத்தி நின்மலமாகையால், நியதிமூலமாகவன்றித் தானே
பண்ணும்பொழுது, அது முத்தியைப் பண்ணுமென்க. அதன்
பின், அம்மாயையினின்றுங் கலாதத்துவந் தோன்றி ஆணவத்தை
ஏகதேசத்தில் நீக்கி ஆன்மாவின் தொழில் செய்யுங் கிரியா
சத்தியை விளக்கி, முதல்வன் ஆணையால் வினைக்கீடாக வரும்
போகத்திற் செலுத்தி நிற்கும். சங்கை. சித்ரூபனுயுள்ள
ஆன்மாவை கலாதத்துவம் பிரகாசிப்பிக்க வேண்டுமோவெனில்.



ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை, அநாதியே ஆணவமலம்
மறைத்துக்கொண்டிருக்கின்றபடியால் அந்த ஆணவமலத்தைக் கலை
யினாலே சிறிது நீக்கவேண்டியிருக்கின்றது. நீக்காதிருக்கில் விட
யத்தைக்கிரகிக்குந் தன்மையின்றிக் கேவலாவஸ்தையே யாய் ஆன்
மாவென்பது ஒன்று இல்லையென்பது போன்று சூனியமாகவேயாய்
விடும். ஆனால் அதனால் ஆணவமுழுவதும் நீக்கப்படாதோவென்
னில், படாது; ஆன்மாக்களுடைய கன்மானு குணமாகக் கேவலத்தி
ருக்கிற ஆன்மாவைப் பாசிமூடின குளத்தில் கல்லைவிட்டெறிய
து அவ்விடம் பாசிநீங்குமாறு போல் இந்தக் கலையினாலே
ஆணவத்தை ஏகதேசத்தில் நீக்கி ஈசுவரன் கலையைப் பிரகாசிக்கச்
செய்வர். ஈசுவரன் கலையை அதிட்டித்துக் கொண்டு, ஆணவத்
தைச் சிறிது நீக்கவேண்டுமோ, தம்முடைய சத்தியினாலே நீக்க
லாகாதோவென்னில், ஈசுவர சத்தி பரிசத்தால் அஞ்ஞானம் முழு
வதும் நீங்கவேண்டும். மலபரிபாகமின்றி அஞ்ஞான கேவலனாயிரு
க்கையினாலே பராசத்திக்கு பரிசயோக்கியமல்லாததுகொண்டு [illegible]
வாலவர் நித்திரை பண்ணுகிற இடத்தைத் தாம் பரிசியாமல் [illegible]
னாலே தட்டி யெழுப்புமாறுபோல, ஈசுவரன், பரிக்கிரகசத்தியாகிய
கலாதத்துவத்தினாலே, சிறிது அஞ்ஞானத்தை நீக்குவரென்க.
பின்பு அக்கலையினின்றும் வித்தியாதத்துவந்தோன்றி ஆன்மாவி
னது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கி முதல்வன் ஆணையால்
அப்போகத்தின்கட் செலுத்தி நிற்கும் விடயதரிசனத்துக்கு ஆன்ம
ஞானமேயமையாதோவெனின், ஆன்மஞானமானது சுத்தமைத்த
நியமாகையால் சிவாபிமுகமாவது ஒழிந்து விஷயாபிமுகமாகாது.
அபிமுகம் எதிர்நோக்கினது. விடயதரிசனத்தில், புத்தி கரண
மாதாதோவெனின், புத்தியும், ஆன்மாவினாலே கிரகிக்கப்படுகையி
னாலே அதுவும் சடமே; புத்தி ஆன்மாவுக்கு விடயமாகையால்
சக்ஷூரிந்திரியமாக உருவங்களைக் கிரகிக்குமாறுபோல இந்தப் புத்தி
யையுங் கிரகிக்கிறதுக்கு வித்தை கருவியென்க. விடயதரிசனத்தில்
சக்ஷூ முதலிய இந்திரியங்களைப் போலன்றி புத்தியாதிகரணத்தி
யங்களுள் மனம் சமுசயத்தையும், அகங்காரம் அபிமானத்தையும்,
புத்தி நிச்சயத்தையும் பண்ணுகையால் பதார்த்த தரிசனத்தில்
சூரியப்பிரகாசம்போல விடயதரிசனத்தில் இவைகள் வித்தைக்குத்

துணைக்காரணமாயிருக்கும். ஆகையால், கலையானது, ஆணவத்தைச் சிறிது நீக்கி ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பிக்க இந்த வித்தை ஞானத்தைக் கருவிதம்பண்ணி விடய தரிசனஞ்செய்யப்பண்ணுவிக்கும். கருவிதம்—கலக்கப்பட்டது.

இனி அவ்வித்தையினின்று அராகதத்துவம் தோன்றி, ஆன்மாவினது இச்சாசத்தியை விளக்கி முதல்வன் ஆணையால் விளக்கிடாக வரும், அப்போகத்திற் செலுத்திநிற்கும். சங்கை. அராகதத்துவமென்று ஒன்று தோன்றி விடய இச்சையைப்பண்ண வேண்டுமோ? ஆன்மா இச்சாஞானக்கிரியாவான் ஆகையால் அந்த இச்சை தானே போதுமென்னில் சாக்கிரத்தில் அந்த இச்சாஞானக்கிரியைகள் இருக்கையிலும் விருப்பமில்லாதபோது புருடனுக்குப் போகமில்லாமலிருக்கையாலும், சத்தனான புருடனுக்கு அசுத்தமாயிருக்கிற போகங்களைப் புசிக்கையில் அமைவுபெறாமலிருக்கையினாலும் இந்த அராகதத்துவமுண்டாகி, போக்தாவுக்கு உபகாரத்தைப்பண்ணுமென்க. இவ்வாறு கலைமுதலிய மூன்றும் தொழில் முதலிய மூன்றையும் விளக்கிய வழி ஆன்மா கன்மத்தை வரையறுத்தலும் நியமித்தலும் செய்யுமாதலான் உபகரிப்பனவாய காலநியதிகளும் உள்படப் பஞ்சகஞ்சுகமுடைய உயிர், அவ்விச்சை முதலிய மூன்றையும் ஏகதேசத்தின் மருவி, வேறுவகையான் நிச்சமாகிய புருடதத்துவமெனப் பெயர் பெற்று, முதல்வன் ஆணையால் அப்போகத்தில் உன்முகமாய் நிற்குமென்க. சிறப்பு வகையான புருடனை நிற்றல், எண்ணெயும் திரியும் அக்கினியும் கூடினவிடத்துத் தீபம்போலக் கலாதியும் பிரகிருதியிற்றோன்றிய அவிச்சை முதலிய பஞ்சக்கிலேசமும் உடைத்தாய வழியே யென்க.

பஞ்சக்கிலேசமாவன:—அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பனவாம். இங்கே பொதுமை யென்றது சாதாரணத்தை; சாதாரணமாவது:—விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்குமில்லாத புத்தியாதி காலாக்கினி ருத்திர புவன பரியந்தம் உண்டான போகங்களைப் புசிக்கச் சமர்த்தனாய் நிற்பது. சங்கை. ஆனால் கலாதியே புருடதத்துவத்துக்குக் காரணமாயிடும், பிரகிருதியிற் றோன்றிய அவித்தியா சம்பந்தம் வேண்டாவென்னில்; பிரகிருதி, அவித்



தை சம்பந்தமில்லாதபொழுது பிரளயாகலனுமிச்சிரத்துவ விருத்தியேயாய் பிராகிருத போகத்தைப் புசிக்கமாட்டான். ஆகையால் பிரகிருதி அவித்தியா சம்பந்தமும் வேண்டுமென்க. ஆன்மாவுக்கே புருடனென்னும் நாமமன்றிப் புருடதத்துவமென்று வேறேயொன்று இல்லையென்னில், அப்பொழுது தத்துவம் முப்பத்தாறு என்கிற எண்ணிக்கையுங்கூடாது; வித்தியாகலா சோதனையில் புருடதத்துவ சோதனையுமில்லையாம்; கஞ்சுகஸ்தனமாக இந்தப் புருட தத்துவமென்று ஒன்று ஆன்மாவை ஆவரித்துக்கொண்டு சஞ்சரியாதபொழுது முழுதுவியாபியாயிருக்கின்ற ஆன்மாவுக்குப் போக்குவரத்துங் கூடாது. ஆகையால் புருடதத்துவம் அவசியம் உள்ளது என்பது அங்கீகாரம். இது புவனாதாரமாகாமல் ஆன்மாவையே ஆவரித்துக்கொண்டிருக்க இதில் இருக்குமென்ற புவனங்களும் இலக்கணையாகப் பிரகிருதி மத்தகத்தில் இருக்குமென்கையால் புருடதத்துவமென்றொன்றில்லை; ஆன்மாவுக்கே ஓர் சமயத்திலுண்டான நாமமென்று கூறுவாரெனில், முன்சொன்ன யுத்தியினால் அது கூடாதென்க. கலைமுதலிய பஞ்சகஞ்சுகத்தோடு பிரகிருதியிலுள்ள அவித்தையுங்கூடில் ஷட்கஞ்சுகமாமென்னில், கூறினது ஒக்கும்; அவித்தை, தாத்துவிகமாய்க் குணமாமன்றித் தத்துவமன்று. ஆதலால் பஞ்சகஞ்சுகமே இந்தப் பும்ஸ்துவமலமென்க. காலாக்கினி ருத்திரபுவனபரியந்தம் வியாபித்திருக்கையில் நிவிர்த்தியிலுள்ள காலாக்கினி ருத்திர சோதனையிலே போகவேண்டுமென்னில் அப்படியன்று. இந்தப் பும்ஸ்துவத்தைப் பிரகிருதிக்குமேல் எண்ணப்படுகையால், காலாக்கினிருத்திர புவனமாதியாகப் பிரகிருதி பரியந்தம் புவன சோதனைகளில் ஸ்தூலரூபம் நிவிர்த்தியாகி ஸ்ரீகண்ட பரமேசுவர புவனமாதியாகிய கலாதத்துவ சோதனையிலே முழுவதும் நீங்கும். அப்பொழுது ஆன்மாவுக்குப் புருடனென்கிற நாமமில்லையாகுமென்க. அதன்பின் கலையினின்றும் மூலப்பகுதி முதல்வன் ஆணையாற்றோன்றி விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சை முதலியவற்றைத் தோற்றுவிக்கும்.

பின்பு அம்மூலப்பகுதியினின்றும் குணதத்துவந் தோன்றி சாத்துவிக முதலிய மூவகையாய், அவற்றுள் ஒவ்வொன்று முத்திறப்பட்டு ஒன்பது வகையாகும். அவையாவன:—சாத்துவிகம் பிரகாசம் சுகம், தைரியம் ஆகிய மூன்று குணங்களை யுடைத்தாயிருக்

கும். இராசதம் பிரவிருத்தி, துக்கம், சௌரியம் ஆகிய மூன்று குணங்களை யுடைத்தாயிருக்கும். தாமசம் அஞ்ஞானம், மோகம், ஆலசியம் ஆகிய மூன்று குணங்களை யுடைத்தாயிருக்கும் என்க. ஒருகுணம் இவ்விரு குணங்களையும் அடக்கித் தான் மேலிட்டு நின்ற பொழுது அதில் இரண்டு குணங்களுள்ளிட்ட பிரதான குணத்தோடு மூன்று குணமாகும். இப்படியே மூன்று குணமும் ஒன்பது குணமாகும் எனக் கூறுவாருமுளர்.

பின்பு குணதத்துவத்தினின்றும், புத்தி தத்துவந்தோன்றி, அவ்வுயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள் தம்பாற்சாரப்பட்டும், இருவினைக் கீடாக வந்த விடயத்தை இஃது இன்னதென நிச்சயித்தும், நிச்சயித்த பின்னர்ச் சுகதுக்க மோகவடிவாய்ப் பரிணமித்தும், பரிணமித்தவழி உயிரின் அறிவுத்தொழிற்கட்கு விடயமாகியும், முதல்வன் ஆணைபாற் நிகழும். இப்படிப்பட்ட புத்திதத்துவத்தின் குணங்கள் எட்டு வகைப்படும்; அவையாவன:—தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் என்பனவாம். அவற்றுள் தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் இந்நான்கும் சாத்துவிகம். அவைராக்கியம் ஒன்றும் ராஜசம். அதர்மம், அஞ்ஞானம், அனைசுவரியம் இம்மூன்றும் தாமசம். அவற்றுள் தர்மம் இயமம், நியமம் என இரண்டு பேதப்பட்டு விரியவல் பலதிறப்படும். அவற்றின் இலக்கணம் முன்னமே கூறப்பட்டுள்ளன. ஞானம் பத்துவகைப்படும். அவற்றின் இலக்கணமும் முன்னமே கூறப்பட்டுள்ளன.

மூன்றாவதான வைராக்கியம் பத்துவகைப்படும். அவையாவன:—வியாதி பீடைகளால் வரும் [illegible] வைராக்கியம், தன்னுடைய தேக தோடத்தைக்கண்டு வருந் தேகவைராக்கியம், சகல சம்பத்துக்களையுங் குறைவற அநுபவித்து இனிப்போதும் என்றுவரும் ஐசுவரியவைராக்கியம், ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகங்களினாலே வரும் பிரபஞ்ச வைராக்கியம், பொருளைத் தேடுதலினாலும் காத்தலினாலும் கள்ளர்கொண்டு போதலினாலும் உண்டாகும் துக்கம் பற்றி வரும் திரவியவைராக்கியம், தாய் தந்தை மனைவி மைந்தர் சுற்றத்தார் நண்பர் முதலாயினோரைப் பிரிந்த துக்கத்திலே மேல் கூட்ட-



மெல்லாம்பிரிந்தகாலத்திலே துக்கத்துக்கு ஏதுவென்றுவருஞ்சங்கத்துவைராக்கியம், காமுகனாயிருக்கின்றவன் தான் மோகிக்கப்பெற்ற ஸ்திரீயினிடத்திலே குணத்தாலாயினும் தேகத்தாலாயினும் வைராக்கியத்துக்கு ஏதுவாகிய ஒரு தோடத்தைக் கண்டபோது வரும் ஸ்திரீ வைராக்கியம், அன்னபானாதிகள் ஒருபொழுது இல்லாதிருக்கினும் தேகநில்லாது, எத்தனை நாள் எத்தனை வகையாய்ப் புசித்தாலும் திருப்தியடையாது என்று வரும் போசன வைராக்கியம், தானத்துக்குப் போய்த் தள்ளுண்டதினால் வரும் பிரதிக்கிரக வைராக்கியம், இத்திலே இப்படிப்பட்டதொரு ஏதுவுமின்றிப் பூருவ ஜன்ம சிவ பூஜா புண்ணிய பலத்தினாலே தேகாதியாகிய சர்வவஸ்துக்களிலும் வரும் வைராக்கியம் என்பனவாம். இவற்றுள் இறுதியிற் கூறிய வைராக்கியம் உத்தமம். நின்ற ஒன்பதும் மத்திமம்.

நான்காவதான ஐசுவரியம், அணிமாதி பேதத்தால் எட்டுவிதப்படும். அவையாவன:—அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். அவைகளுள் (௧) அணிமாவாவது:—மிகச்சிறிய உயிர்தோறும் தான் பரமாணுவாய்ச் சென்றிருக்குஞ் சிறுமையாம். (௨) மகிமாவாவது:—பிருதிவி முதற் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் பெருமையாம். (௩) லகிமாவாவது:—மேருமலையைப்போலப் பாரமாயிருக்கும் யோகியை எடுத்தால் இலகுவாயிருப்பதாம். (௪) கரிமாவாவது:—அணுவைப் போல் இலகுவாயிருக்கும் யோகியை எடுத்தால் மேருமலையைப் போலப் பாரமாயிருப்பதாம். (௫) பிராப்தியாவது:—பாதாளத்தினின்றும் பிரமலோகஞ் சென்றுபுகுதலும் மீண்டும் பாதாளத்தை யடைதலுமாம். (௬) பிராகாமியமாவது:—பரகாயத்திற் பிரவேசித்தலும், ஆகாயத்தில் இயங்குதலும், தான் இச்சித்த போகமனைத்தையும் தானிருக்குமிடத்தில் வருவித்தலுமாம். ஆகாயத்துள்ள சூரியனது உடம்பின் வெயிலிலும் எல்லாம் விளங்குதல் போல மண்ணுலகத்துப் பொருள்களையும் விண்ணுலகத்துப் பொருள்களையும் முக்காலங்களையும் தன் சரீரத்தொளியால் அறிதலும் பிராகாமியம் என்று வேதங் கூறும். (௭) ஈசத்துவமாவது:—முத்தொழில்களையும் தன்னிச்சைப்படி செய்து சூரியன் முதலிய கிரகங்கள் தன்னேவல் கேட்ப வாழ்

தலாம்.(அ)வசித்துவமாவது:—இந்திராதிதேவர்களையும் அசுரர்களையும் மனிதர்களையும் பூதங்களையும் மிருகங்களையும் பறவைகளையும் தன் வசமாக்கிக்கொள்ளுதலாம். அநுபவிக்கும்போது கன்மாதிகளால் உபாதையில்லாமலிருக்கையும் வசித்துவம் என்று வேதங் கூறும். இஃது எட்டுக்குணமாம் பார்த்திவ ஐசுவரியம். இது பிசாசர்களுக்காகும். இந்தப்பார்த்திவ ஐசுவரியமும் ஜலத்தின் ஆப்பிய ஐசுவரியமும் கூடிப் பதினாறு குணம் இராக்கதர்களுக்கு ஆகும்; இவற்றுடன் தைஜசமுஞ் சேர்ந்து இருபத்துநாலு குணம் இயக்கர்களுக்காகும்; இவற்றுள் வாயவியமுஞ் சேர்ந்து முப்பத்திரண்டு குணம் கந்திருவர்களுக்காகும்; இவற்றுடன் ஆகாயமுஞ்சேர்ந்து நாற்பது குணம் இந்திரனுக்காகும்; இவற்றுடன் மானதமுஞ் சேர்ந்து ஐம்பது குணம் பிரசாபதிக்கும் இவற்றுடன் பௌத்தமுஞ் சேர்ந்து அறுபத்துநாலுகுணம் பிரமாவுக்குமாகும். இதன்விரிவை ஆகமங்களுட் காண்க.

அதர்மமாவது:—ஹிம்சை, களவுசெய்தல், பொய்சொல்லுதல், சோரத மாதரைச் சேருதல், ஒருவன் செய்த அபகாரத்திற்குப் பதில் அபகாரஞ்செய்தல், மாச்சரியம், நித்தியகன்மத்தில் லோபம், சௌசமின்மை, சந்தோஷமின்மை, கபடமாயிருக்கையென பத்து விதப்படும்.

அஞ்ஞானமாவது:—தமஸ், மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என்னும் பேதத்தால் ஐந்துவிதப்படும். அவற்றுள் தமஸ் என்பது அனாத்மாவை ஆத்மாவாகப் பாவித்தல். அது சாராகந்தமுதலான மத பேதத்தால் பத்துவிதமாம். மோகமென்பது அணிமாதி எட்டு ஐசுவரியம் சித்திக்கில் அ[illegible] பரமென்றிருக்கை. மகாமோகமென்பது திவ்விய[illegible]ம் அதிவ்வியங்களென்றும் பத்துவிதமாகப் பேதப்பட்டிருக்கும். [illegible]ப்தாதிகளைப்பரமென்று நிச்சயித்தலாகும். தாமிஸ்ரமென்பது சப்தாதி விடயங்கள் அணிமாதிகள் ஆகிய இவைகள் அழிவில் வரும் தாபமாம். அந்ததாமிஸ்ரமென்பது சப்தாதி விஷயங்களை அணிமாதி ஐசுவரியங்களைப் பிறர் புசிக்கையில் அதைச் சகிக்காமையாம். அவைராக்கியம் நூறு பேதப்படும். அனைசுவரியம் எட்டுவிதப்பட்டு விரியால் நாற்



றெழுபத்தாறாகும். அவற்றை விரிக்கிற் பெருகும். ஆகமங்களுட் காண்க. ஆகவே தர்மம் பத்துவிதம், ஞானம் எண்பதுவிதம், வைராக்கியம் நூறு விதம், ஐசுவரியம் அறுபத்துநாலு விதம், அதர்மம் பத்து விதம், அஞ்ஞானம் அறுபத்துநான்கு விதம், அவைராக்கியம் நூறுவிதம், அனைசுவரியம் நூற்றெண்பத்துநான்குவிதம் ஆகக் கூடிப் புத்தி தத்துவத்தின் விர்த்திகள் அறுநூற்றுப்பன்னிரண்டு.

இந்த எட்டுத் தர்மமுள்ள புத்தியாகிற மகா சக்கரத்தில் ஆன்மாக்கள் இளையுறாது சுழன்று திரிகின்றார்கள். ஆதலால் அவற்றின் முடிவு ஒருவருக்குந் தெரியாதென்க. அப்படிப்பட்ட புத்தி தத்துவத்தினின்றும் அகங்கார தத்துவந்தோன்றி இவ்விடத்து என்னோடு ஒப்பவர் ஒருவரும் இல்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய், வாயிற்காட்சிக்கு விடயமாய்த் தோன்றியதொன்றனை இஃது இன்னதென்றும் புத்திதத்துவம் நிச்சயிக்கும்படியாக யானென்றும் எனதென்றும் அதன்கண் ஒருப்பட்டெழுந்து முதல்வன் ஆணையால் ஆன்மாவோடு வேற்றுமையின்றி நிற்கும். அவ்வகங்கார தத்துவம் குணவேற்றுமையால் பூதாதியகங்காரம், வைகரியகங்காரம், தைசதவகங்காரம் என மூன்றுபடும் என்க. அம்மூன்றினுள் தைசத அகங்காரத்தினின்றும் மனமென்பது தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இது யாதாகற்பாற்றெனச் சித்த ரூபமாய் நின்று சிந்தித்தும், பின்னர் அதன்கண் ஐயுற்று நிச்சயித்தற்கண்ணதாகிய வேட்கையை விளைத்தும் முதல்வன் ஆணையால் நிற்கும். அம்மனம் சலமனவும் அசலமனவும் இரண்டு வகைப்படும். சலமானது உள்ளே நின்று சங்கற்ப விகற்பங்களைப் பண்ணும். அசலமானது புறஞ்சென்று இந்திரியத் துவாரங்களின்மேல் புறப்பட்டு நின்று அருத்தத்தோடே இந்திரியங்களை [illegible] பண்ணி நிற்கும். கண் முதலானவற்றால் நோக்கப்பட்ட விஷயத்தில் இவன்பிராமணனென்பது முதலான நிச்சயம் சங்கற்பமென்னப்படும். நன்றாக விசேடண விசேடிய ரூபத்தோற் பெற்று நிச்சயிப்பதால் சங்கற்பமென்பர். அப்படிப்பட்ட விடயத்தில் இவன் பிராமணனோ அல்லது க்ஷத்திரியனோ என்பது முதலான சங்கற்பம், விகற்பம் என்று சொல்லப்படும். பலவிதமாகக் கற்பித்தலால் விகற்பமென்பர். சித்தம் இதில் அடங்கிவிடும் என்க. இந்தப் புத்தி, அகங்காரம், மனம், சித்தமென

நான்கும் வெளி விடயங்களை நோக்காமையால் அந்தக்கரணமெனப் படும்.

மனத்தின் பின்னதாகமெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் அத் தைசத அகங்காரத்தினின்றும் முதல்வன் ஆணையாலே தோன்றும். இவை அறியுங் கருவியாகலின் ஞானேந்திரியம் எனப்பட்டன. இவற்றிற்கு விடயமாக முறையே பரிசமும் இரதமும் உருவமும் கந்தமும் சத்தமும் ஆகிய பூதகுணங்கள் ஐந்தும் பொருந்தும். பின்பு ஏனை வைகாரி யகங்காரத்தினின்றும் வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். இவை தொழில் செய்யுங் கருவியாகலின் கன்மேந்திரியங்கள் எனப்படும். இவ்வைந்தின் தொழிலாவன:-முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமுமாம். அற்றேல் ஆன்மாவின் ஞானக்கிரியைகளை விளக்குதற்கு இந்திரியம் அந்தக்கரணம் கலாதியென்னும் முத்திறத்துள் ஒன்றேயமையுமாகலின், ஏனைய மிகையாம்போலுமெனின், ஆகாது, கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய அவ்விருவகையிந்திரியங்களும், ஒன்றனை விடயிக்கலுறுவார்க்கு உடம்பின் புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகளாம். மனமுதலிய அந்தக்கரணங்கள், அவ்வவ்விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை உடம்பின் அகத்தே நின்று விடயிக்கும் உட்கருவிகளாகும். ஏனைய கலாதிகளாவன: அவ்வந்தக்கரணங்களான் விடயிக்கப்பட்டுவந்த பயனை ஆன்மாவின் இச்சாஞானக்கிரியைகட்குப் பொருத்துவனவாகிய உள்ளந்தக் கரணங்களாம். இவை, தம்முள் வேற்றுமையாகலின். மாயையினிடத்துண்டாகிய இம்முத்திறக் கருவிகளாலும் உயிர் பந்திக்கப்பட்டிருக்கும் என்க.

அவ்விருவகை இந்திரியங்களும் தோன்றியபின் ஏனைப்பூதாதியகங்காரத்தினின்றும் சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தமெனக் கூறப்படும் தன் மாத்திரைகள் ஐந்தும் தோன்றி அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு ஊக்கஞ்செய்வித்து முதல்வன் ஆணையால் உடனிற்கும். இத்தன்மாத்திரைகள் ஐந்தும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டுங்கூடிப் புரியட்டக வுடம்பாமென்றறிக.



சிலவிடத்தில் சூக்குமதேகம் முப்பது தத்துவங்களால் ஆக்கப்பட்டது என்று கூறுவது மாறுகொளக்கூறல் என்று மலையற்க. அம்முப்பதும் எட்டிலுளடங்கும். எப்படியெனில், பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, குணம் ஒன்று, அதற்குக் காரணமாகிய பிரகிருதி ஒன்று, கலாதி ஐந்து என இவ்வெட்டிலுளடங்குதலால் குற்றமில்லையென்க.

இனி ஓசை-எழுத்து ஊப்பு மிருதுவு என்னும் விசேஷங்களின்றி, பொதுவில் சப்தமாத்திரமாயிருப்பது சப்ததன் மாத்திரை. குளிர்ச்சி வெப்பம் என்னும் பேதங்களின்றிப் பொதுவில் பரிசமாத்திரமாயிருப்பது பரிச தன்மாத்திரை. வெண்மை கருமை முதலான விசேடங்களின்றி, பொதுவில் ரூபமாத்திரமாயிருப்பது ரூப தன்மாத்திரை. தித்திப்பு புளிப்பு முதலான பேதங்களின்றி, பொதுவில் ரசமாத்திரமாயிருப்பது ரச தன்மாத்திரை. நற்கந்தம் துர்க்கந்தம் என்னும் பேதங்களின்றிப் பொதுவில் கந்தமாத்திரமாயிருப்பது கந்ததன்மாத்திரை. இந்தத் தன்மாத்திரைகளாலுண்டாக்கப்பட்ட தத்துவம் பூதமாகும். அது ஆகாச முதலான பேதத்தால் ஐந்து விதமாகும். அவை இந்திரியங்களால் கிரகிக்கப்படுங் குணங்களுக்கு ஆதாரமாகும். அவற்றுள் மற்றப் பூதங்களுக்கு இடங்கொடுத்தலாகிய செய்கையுள்ளது ஆகாசம். அது சப்ததன் மாத்திரையிலுண்டானதாகையால் சப்தகுணம் ஒன்றையேயுடையது. இந்த ஆகாசம் சப்தகுணம் ஒன்றையேயுடையது என்று எப்படிச்சொல்லலாம்? ஆகாசம் கருமையாய்த் தோன்றுகிறது என்னும் அனுபவத்தால் ரூபமுண்டாயிருக்கிறதே, பரிசமின்மையால் ரூபமில்லையென்னும் அனுமானம் பிரத்தியக்ஷத்தால் அடிபட்டுப் போயிற்றேயென்னில், உத்தரம்:—எந்தவிடத்தில் தூரத்திலிருந்து பார்க்கும்போது கருமைதோன்றுகிறதோ அந்தவிடத்திலேயே சமீபமாய்ப் போகும்போது அங்கு தோன்றாமையால் தூரக்குற்றத்தால் வந்ததென்றே கொள்ளப்படும். பின்னும் இந்த ஆகாசத்தைச் சகல மூர்த்த திரவியங்களின் அபாவமாதலால் வேறொரு தத்துவமென்று கற்பிப்பது வியர்த்தமென்னவுங் கூடாது. அப்படிச்சொல்லில் சப்தகுணத்திற்கு ஆதாரமில்லாமற் போகும். ஆகாசம் அபாவமா-

தில் மற்றப்பூதங்களுக்கு இடங்கொடுக்கமாட்டாது. மனிதர் முதலான யாவருக்கும் போக்குவரத்து வியாபாரமில்லாமற் போகும். ஆதலால் ஆகாசம் ஒன்று உள்ளது என்று அறியப் கொள்ளவேண்டும். சத்த பரிச தன்மாத்திரையிலுண்டானது வாயு. இதற்கு சத்தபரிசம் ஆகிய இரண்டு குணமும் உண்டு. இனி ஆகாசம் ஒன்றுக்குமே சத்தகுணமுண்டு; மற்ற நாலு பூதங்களுக்குச் சத்த குணமில்லையென்று வைசேடிகன் சொல்லில் அது கூடாது. சகசக, தமதம, சலசல, கடகட என்பன முதலிய ஓசைகள், வாயுமுதலான பூதங்களில் இருப்பதாகக் காணப்படுகையால் வாயு முதலானவற்றிலும் சத்தகுணமுண்டென்பது சித்தம். சத்த பரிச ரூப தன்மாத்திரையிலுண்டானது தேயு. இதற்குச் சத்த பரிச ரூபமென்னும் மூன்று குணம் உண்டு. சத்த பரிச ரூப ரச தன்மாத்திரையிலுண்டானது ஜலம்; இதற்குச் சலசலவென்னும் சத்தகுணமும் சீதப்பரிசமும் சுக்கில ரூபமும் மதுரரசமும் உண்டு. இளநீர் முதலானவற்றில் வேறு ரசம் தோன்றுவது ஆசிரயபேதத்தாலென்றறிக. சத்த பரிச ரூப ரச கந்த தன்மாத்திரையிலுண்டானது ப்ருதிவி. இதில் கடகட என்னும் சத்தமும் உட்டிண சீத பரிசமும் சுக்கில நீல பீத அரித ரத்தமென்னும் பேதங்களுள்ள ரூபமும், மதுரம் லவணம் கைப்பு புளிப்பு காரம் என்னும் பேதங்களால் ரசமும், சுரபி அசுரபியென்னும் பேதமுள்ள கந்தமும் இருக்கும். இப்படிப்பட்ட ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயமானது வெளியாதல் இடங்கொடுத்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். வாயுவானது சலித்தலும் பரந்தவற்றைத் திரட்டுதலும் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். தேயுவானது சுடுதல் ஒன்றுவித்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். அப்புவானது குளிர்தல் பதஞ்செய்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். பிருதிவியானது கடினமாதல் தரித்திடுதல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம்.

இவைகளுள் அக்கினி, காருகபத்தியம் தக்ஷிணாக்கினி ஆகவனீயம் என மூன்று விதமாயிருக்கும். வித்துவினுதரத்தில் உண்டாயிருக்கிற வைசுவாநராக்கினியென்பது அவற்றிற்கு வேறாகும். இந்த அக்கினி உலகத்தில் உயிர்கள் உண்ட அசனத்தைப் பாகஞ்செய்யுமாகை



யால் உள்ளாக்கினியாகிப் பிராணிகளுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். இன்னும், நிலம், நீர், தீ, வளி, ஆகாசம் ஆகிய அப்பூதங்கள் முறையே நாற்கோணமும் இருகோணமும் முக்கோணமும் அறுகோணமும் வட்டமும் ஆகிய ஐவகை வடிவுகளும், பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை ஆகிய ஐவகை நிறங்களும், லகாரம் வகாரம் ரகாரம் யகாரம் ஹகாரம் ஆகிய ஐவகைப் பீசங்களும், வச்சிரம் தாமரை சுவத்திகம் அறுபுள்ளி அமுதவிந்து ஆகிய ஐவகை அடையாளங்களும், அயன் மால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் ஆகிய ஐந்து அதிதெய்வங்களும் ஆகிய இவைகளை உடையனவாம். மேற்கூறிய முப்பத்தொரு தத்துவங்கள் உட்பட்ட தத்துவங்கள் முப்பத்தாறும். இவற்றுள் முற்கூறிய சுத்தத்துவம் ஐந்தும் சடமாயினும் சிற்சத்திக்குச் சுதந்திர வடிவமாகலின் சைதன்னியமெனப்படும். ஏனை முப்பத்தொன்றனுள் புருட தத்துவம் ஒன்றும் சார்ந்ததின் வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும். அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவேபடும் என்க.

மேற்கூறிய தத்துவ முப்பத்தாறனுள் சுத்தத்துவம் ஐந்தும் வித்தியாதத்துவம் ஏழும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் முறையே சுத்தம் மிச்சிரம் அசுத்தம் என்றும், பிரேரககாண்டம் போகசயித்திருகாண்டம் போக்கிய காண்டம் என்றும் காரணக்குறி பெற்று முத்திறப்படும் என்க. பிரேரகம்-ஏவுதல். அதாவது ஒருமரப் பொம்மைக்குக் கயிறுகட்டிச் சூத்திரிகன் ஆட்டுமாறு போல அசுத்த மாயா தத்துவங்களைச் சுத்தத்துவங்களால் இவனுடைய சிற்சத்தி சேட்டிப்பிக்கிறதினாலே பிரேரககாண்டமென்று பெயர். ஆன்மாவுக்குச் சகாயமாய் நின்று போகத்தை யுண்டாக்குகிறதினாலே போகசயித்திருகாண்டமென்று பெயர். புசிக்கப்படுவதாய் இருப்பதால் போக்கிய காண்டமென்று பெயர். போக்கியம் - புசிக்கப்படும் வஸ்துக்கள். இனி இத்தத்துவங்களுக்கு அதிதேவதைகளாவன: பிருதிவிக்குப் பூதேவி, அப்புவுக்கு வருணன், தேயுவுக்கு அக்கினிபகவான், வாயுவுக்கு வாயுபகவான், ஆகாயத்துக்கு வியாமரூபியாயிருக்கின்ற ஈசுவரன், சுரோத்திரத்துக்குத் திக்குருபி, துவக்குக்கு வாயு, சட்சுக்குச் சூரியன், சிங்குவைக்கு வருணன், கிராணத்துக்கு அசுவினிதேவர்கள், வாக்குக்கு அக்கினி, பாதத்துக்கு இந்திரன், பாணிக்கு உபேந்திரன், பாயுவுக்கு மிருத்தியு,

உபத்தத்துக்குப் பிரமா, மனத்துக்குச் சந்திரன், அகங்காரத்துக்குப் பிமோதன், புத்திக்குப் பிக்திராமசக்தி, தாமசகுணத்திற்கு விட்டுணு, ராசதகுணத்திற்குப் பிரமா, சாத்துவிககுணத்திற்கு உருத்திரன், இராக தத்துவத்திற்கும் புருடதத்துவத்திற்கும் அராகப்பிலன், வித்தியாதத்துவத்திற்கு வித்தியாதேவி, காலதத்துவத்திற்குக் காலேசுவரி, நியதிதத்துவத்திற்குக் காலருத்திரன், மாயாதத்துவத்திற்கு மாயாதேவி, சுத்தவித்தியாதத்துவத்துக்குச் சுத்தவித்தியாதேவி, ஈசுவரதத்துவத்துக்கு அனந்தேசுவரர், சாதாக்கியதத்துவத்துக்குச் சதாசிவன், விந்து நாததத்துக்குச் சத்தியும் சத்தராகிய சிவனுமாம். அருவம் உருவம் அருவுருவம் ஆகிய பிரபஞ்சம் அனைத்தும் இத்தத்துவ வடிவேயாம். தூல சரீரம் உருவப்பிரபஞ்சம். சூக்குமசரீரம் அருவுருவப்பிரபஞ்சம். காரணசரீரம் அருவப்பிரபஞ்சம்.

இம்முப்பத்தாறு தத்துவங்களும், தூலதத்துவம் சூக்குமதத்துவம் அதிசூக்குமதத்துவம் என ஒவ்வொன்று மூவகைப்பட்டு பொதுவும் பொதுச்சிறப்பும் சிறப்புமாய் நிற்கும். புவனசரீரமாகிய தத்துவங்கள், தூலதத்துவமென்னப்படும். ஒவ்வொரு உயிர்கள் தோறும் இருக்கின்ற தத்துவங்கள், சூக்கும தத்துவமென்னப்படும். தத்துவங்களின் அதிதேவதைகள் அதிசூக்கும தத்துவமென்னப்படும். ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் தூலமெனவும், வித்தியா தத்துவம் ஏழும் சூக்குமமெனவும், சிவதத்துவம் ஐந்தும் அதிசூக்குமமெனவும் கூறுவாருமுளர். புவனவடிவாகிய தத்துவங்கள் எல்லாருக்கும் பயன்றருதலின் பொது. தூலதேக வடிவாகிய தத்துவங்கள் தனக்குப்போக நுகர்ச்சிக்கும், சந்தனம் பூமாலை போல மனைவி முதலியோர் அநுபவத்துக்கும் இயைதலான் பொதுச்சிறப்பு. சூக்கும தேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப் போகநுகர்தற்கருவியாகலின் சிறப்பு. இத்தன்மையவாய தத்துவங்களை யதிட்டிக்கும் அனுபக்க சம்புபக்கத்து அதி தெய்வங்களும், அவ்வத் தத்துவப் பெயர்பெறும். ஆதலால் எல்லாப்பொருள்களையும் தத்துவங்களில் வைத்துக்காண்க. காணவே எல்லாப் பொருள்களும் இனிதுவிளங்கும். இன்னும் இதன்விரிவைத் திராவிட மாகாபாடியத்திற்காண்க.



இம்முப்பத்தாறு தத்துவங்களும் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களிலொடுங்கும்வழி, நிலமுதல் மூலப்பகுதியீறாகிய இருபத்துநான்கு தத்துவங்களும் ஸ்ரீகண்ட ருத்திரனிலொடுங்கும். மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறு தத்துவமும் அனந்ததேவரிலொடுங்கும். இவற்றின்மேலுள்ள சுத்த வித்தைமுதலிய மூன்று தத்துவங்களும் இலயத்தினின்ற சிவனால் ஒடுங்கும். ஏனைச் சத்திதத்துவம் சிவதத்துவம் இரண்டும் சுத்தசிவனால் ஒடுங்கும். இ[illegible]புகருற்பவ மா[illegible]று அவ்வவை அவ்வவராலாம். இவருட் சுத்தசிவன் ஒருவனே நித்தியன். மற்றவர்களை நித்தியர் என்கை உபசாரம் என்க. உலோகாயதம், புத்தம், மாத்திமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் ஆகிய புறப்புறச்சமயமும்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் ஆகிய புறச்சமயமும், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், அயிக்கவாதசைவம் ஆகிய அகப்புறச்சமயமும் என்னும் முக்கூற்றுச் சமயத்தெய்வங்களெல்லாம், பூதமுதல் அசுத்தமாயாதத்துவம் ஈறாகிய ஒவ்வொரு தத்துவங்களில் நிலைபெறும். சிவாகமங்களுட் கூறப்படும் "ஏகன் அநேகன் இருள் கருமம் சுத்தமாயை அசுத்தமாயை" என்னும் ஆறுபொருள்களுக்கும் உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படுந் தலையாகிய, பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், ஈசுவரவிகாரவாதம், சங்கிராந்தவாதம், சிவாத்துவித சைவம் என்னும் ஆறுவகைச்சமயத்தெய்வமாய் நின்ற அதிகார போக லய சிவ பேதங்கள் சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றினிலைபெறும். சித்தாந்த சைவத்தெய்வமாகிய நமது சுத்தசிவம் இம்முப்பத்தாறையுங்கடந்து நிற்குமென்க.

அவ்வத்தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ்வச்சமயத்தார்க்கு முத்தித்தானம் என்க. அவ்வவற்றின் மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க்கு முத்தித்தானம் அன்றென்க. அவ்வவற்றின் மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க்கு உணர்ச்சிசெல்லாமையின் அவ்வத்தத்துவத்தினளவன்றி அவருக்கு மேற்சேறல் கூடாமை யறிக. இனி உலோகாயதன் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்குபூதங்களையும் உணர்ந்தமையால் அவனுக்கு அவற்றின்கீழ்ப்

பட்ட புவனங்களிற் பிறவியொழியும். ஆருகதருக்குக் குணதத்துவத்தின் கீழ்ப்பட்ட பிறவியொழியும். நையாயிகர் வைசேடிகர்களுக்குப் புத்திதத்துவம் வரையும் பிறவியொழியும். பௌத்தருக்குப் புத்திதத்துவத்தின் கீழ்ப்பிறவி ஒழியும். சாங்கியருக்குப் பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலால் பிரகிருதிவரையும் பிறவியொழியும். பாஞ்சராத்திரிகளுக்குப் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட பிறவியொழியும். வேதாந்திகளுக்குப் புருடதத்துவத்தின் கீழ்ப்பிறவி ஒழியும். அவர்கள் அத்தத்துவத்தை அடைவர். பௌராணிகர் நியதிதத்துவத்தை அடைவர். காபாலிகர் காலதத்துவத்தை அடைவர். பாசுபதர் மாயாதத்துவத்தை அடைவர். மகாவிரதர் வித்தியாதத்துவத்தை அடைவர். பாடாணவாதசைவர் முதலியோர் சுத்ததத்துவங்களையடைவர். சித்தாந்த சைவர் இம்முப்பத்தாறுக்கு மேற்பட்ட சிவசாயுச்சியத்தை அடைவர். இம்முப்பத்தாறையுங் கடந்துநிற்கும் எம்மிறைவன் ஒவ்வொரு தத்துவங்களினின்று கொண்டு தத்தந் தொழில்களைச்செய்யும் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம் என்னும் ஒன்பது தெய்வங்களினும் வேற்றுமையின்றி நின்று அவ்வத்தொழில்களைச் செய்வன். அவனொடு தாதான்மியமாய் நிற்கும் பராசத்தியும் அப்பேதங்கள் எல்லாவற்றினும் அவனுக்குத்துணையாய் நின்று நடத்தும் என்க. சத்திக்கும் சிவத்துக்கும் செயல்களெல்லாம் நம்மனோர்பொருட்டாக நடித்துக்காட்டும் நாடகமாத்திரையே யன்றிப் பிறிதில்லையென்க. இனி இச்சாசத்தி காரியம் ஈசுவரதத்துவம். ஞானசத்தி காரியம் சுத்தவித்தியாதத்துவம். கிரியாசத்தி காரியம் சத்திதத்துவம். ஈசுவரதத்துவம் இராகதத்துவத்தைச் செலுத்தும். சுத்தவித்தியாதத்துவம் வித்தியாதத்துவத்தைச்செலுத்தும். சத்திதத்துவம் கலாதத்துவத்தைச் செலுத்தும். அராகதத்துவம் மனதத்துவத்தைச் செலுத்தும். வித்தியாதத்துவம் புத்திதத்துவத்தைச் செலுத்தும். கலாதத்துவம் அகங்காரதத்துவத்தைச் செலுத்தும். மனோ புத்தியகங்காரங்களால் புருடதத்துவவியாபாரம் உண்டாகும். காலத்தையும் நியதியையும் சத்திதத்துவஞ் செலுத்தும். இராகதத்துவத்தை ஈசுவரதத்துவஞ் செலுத்தும். சுத்ததத்துவத்தைச் சிவதத்துவஞ்செலுத்தும். புருடதத்துவத்தைச் சாதாக்கிய தத்துவஞ் செலுத்தும் என்றும் சில ஆகமங் கூறும்.



தனுகரண புவனபோகங்களும், அவை மூலமாவுள்ள பெத்த முத்திகளும், அப்பெத்தமுத்திகளிற்படும் பேதங்களனைத்தும், மேற்கூறிப்போந்த தத்துவங்களால் ஆயினவென்றும், அத்தத்துவங்கள் உயிர்களோடியைவனவன்றி முதல்வனோடியைவனவல்லவென்றும், நூல்களானும் பொருந்துமாற்றானுந் தெளியவுணர்ந்து, அத்தத்துவங்களைக் கழியு முறைமையினவைத்துக் கழித்து, அவற்றிற்கு மேலாய் நிற்பதொன்றனை ஐயந்திரிபின்றி உணரப்பெற்றோன்யாவன் அவனே உண்மையறிவுடையன் என்க.

இனி, புறக்கருவி அறுபதாவன:—பிருதிவியின் கூறு ஐந்து. அவை மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை. அப்புவின் கூறு ஐந்து. அவை நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை. தேயுவின்கூறு ஐந்து. அவை ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல். வாயுவின் கூறு ஐந்து. அவை ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல். ஆகாயத்தின் கூறு ஐந்து. அவை குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம். ஆகப் பஞ்ச பூதங்களின் காரியம் இருபத்தைந்து. பிரகிருதியின் வழிநாடி பத்து. அவை இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், சங்கினி, வைரவன், குகுதை. வாயுவின் வழிநாடி பத்து. அவை பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன். நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன். ஆகாயத்தின் வழித்தான ஏடணை மூன்று. அவை அருத்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை. ஏடணை-பிணக்கு. வாக்காதியின் தொழில் ஐந்து. அவை வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம். பிரகிருதியின் வழித்தான குணம் மூன்று. அவை சாத்துவிகம், இராசதம், தாமதம். விந்துவின் வழித்தான வாக்கு நான்கு. அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. ஆகப் புறக்கருவி அறுபதுங் கண்டுகொள்க.

இத்தத்துவங்கள் [illegible] வைப்பற்றி நிற்பன. எதன் பொருட்டெனில், இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும், அதனாற் பருவமெய்திய வழி மேலைக்கு வித்தாகாதவாறு தீக்கையான் அவற்றை முதிர்வித்துப் பற்றறக்கழித்தற்பொருட்டும், அவைகழியு முகத்தால் எல்லா வநர்த்தங்களுக்கு மூலமாகிய வாணவமலத்தைப்

போக்குதற் பொருட்டேயாமென்க. மேலே இருளெனக் கூறப்பட்ட ஆணவமலமும், அதன் பின்னாகக் கன்மமலமெனப்பட்ட நல்வினை தீவினைகளும், அதன் பின்னாக மாயை இரண்டு எனக் கூறப்பட்ட சுத்தாசுத்தமாயைகளும் ஆகிய மூன்று மலங்களும், நெல்லுக்கு உமி முளை தவிடு போல உயிரைப் பற்றிக்கொண்டு நின்று முறையே போத்திருத்துவமும் போகமும் பந்தமும் பண்ணுவனவாம். ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணுதலாவது நெல்லின்கணுள்ள முளை ஆன்றுத்தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோலத் தோற்றத்திற்கு நிமித்தகாரணமாகிய சுகதுக்கங்களை முறுகுவித்து நின்று அவற்றை உயிர்க்கு அருமாறு நிலைபெறுத்தல். கன்மமலம் போகம் பண்ணுதலாவது நெல்லின்கண் உளதாகிய முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல உயிரின்கட் சுகதுக்கங்களை முதற்காரணமாய்நின்று தோற்றுவித்தல். மாயாமலம் பந்தம் பண்ணுதலாவது முளைத்தற்கு அநுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடுபோல் அச்சுகதுக்கங்கள் ஆன்றுத் தோன்றுதற்குத் துணைக்காரணமாய்த் தன்காரியமாகிய தநுகரண முதலியவற்றையும் உயிரையும் பிணைவித்து நிற்றல். ஞானாமிர்த நூலுடையாரும் "பந்தம் போகம் போத்திருத்துவம் வந்தருமாயை வினைமலத்து" என்றார்.

இம்மலங்களோடு சுகதுக்கவினைகட்கெல்லாம் இடமாய்நின்று வியாபகமாகிய ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதாகிய மேற்கூறிப்போந்த மாயாகாரியமும் அவ்வம்மலங்களை யவ்வத்தொழிற்படுத்திப் பாகம்வருவிக்குந் திரோதசத்தியுமாகிய இரண்டையுஞ் சேர்த்து ஐந்தெனக் கூறுவாருமுளர். ஆன்மாவின் பிறப்பு இறப்புக்களெல்லாவற்றிற்குங் காரணம் இவ்வைவகைமலங்களாம். இம்மலங்களைப் போக்கி முத்தியிற்சேர்க்கின்றவர் சிவபிரானொருவரே. அவர் குறைவில்லாத மங்கலகுணங்களை உடையராயும், ஆணவமலத்தினின்றும் அநாதியே நீங்கினராயும், சி என்னுந்தாது கிடத்தலெனப் பொருள்படுதலானும், அநாதிகாலந்தொட்டு உலகமெல்லாம் தம்மிடத்தே ஒடுங்கிக் கிடத்தலானும், அடியார்களுடைய மனம் தம்மிடத்தே கிடத்தலானும், சி என்னுந்தாது மெலிவித்தலெனவும் மிகுவித்தலெனவும் பொருள்படுதலானும், ஆன்மாக்களின் பாசத்தை மெலிவித்து ஞானத்தை மிகுவித்தலானும், அழிவின்மையும்



பட்டவர்களால் சிவன் எனக் கூறப்படுவர். அவர் மேலெனப்படுவன எவைக்கும் மேலானவர். மாறெனப்படுவன எவையும் மாற்றுகின்றவர். நாமெனப்படுவன எவையும் நாவன்றவர். சிற்சத்தியை ஒரு பாகத்திலுடையவர். முதலில் பிரமதேவரைப் படைத்து அவரினின்றும் விட்டுணு முதலிய தேவர்களை உண்டாக்குகின்றவர். அவர் இலரெனில் எல்லா வுலகங்களும் மிகுந்த வலிய இருளினாலே மூடப்படுந் தன்மையுடையனவாம். பகல் இரவு உளது இலது என்னும் பகுப்பு இல்லாத அநாதிகாலத்தில் சிவன் ஒருவனே யுளன். அவனிடத்திலேயே மிகுந்த ஞானம் வெளிப்பட்டிருக்கும். எங்குமுள்ளனவும் இவன் வசத்தனவாம். எவ்விடத்திலும் இவன் ஒரு பொருளின் வசத்தையடையான். எவ்விடங்களும் இவனுக்கு விழிகளாம், முகங்களாம், கால்களாம், கைகளாம், உடல்களாம். இவன் இல்லாத இடம் இல்லை. விட்டுணு, பிரமா, தேவர்கள், அசுரர்கள், யோகிகள், வேதம், வேதாந்தம், மற்றுமுள்ள பொருள்கள் எல்லாம் இப்பரமேசுவரனுடைய திருவடிகளைக் காணவேண்டுமென்ற ஆசையால் இன்னுந் தேடுகின்றன. இச்சிவனையல்லாது முத்தியையடைவிக்கின்றவர்கள் ஒருவருமில்லை. இவ்விதமாக வேதங் கூறும்.

எல்லாரையும் முற்றத்துறந்து, யாவராலும், என்றும், தியானஞ்செய்யப்படு முதல்வன் சிவன் ஒருவனே யென நான்குவேதங்களின் முடிவாகிய அதர்வசிகை கூறியது. விட்டுணு முதலிய தேவர்களெல்லாம் அம்முதல்வன் திருவடிகளைத் தியானஞ்செய்யும் பசுக்களாம். அவன் அருள் சேர்தலால் ஒரோவிடத்து அவ்விட்டுணு முதலிய தேவர்களையும் தியானப் பொருளாகப் புனைந்து கூறும். ஆதலால் கிடைத்தற்கரிய மானுடதேகத்தைப் பெற்றவர்கள் சிவபிரான் திருவடிகளுக்கு அன்பு பூண்டொழுகி முத்தியையடையக் கடவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஏகன் அனேகன் [illegible] வெண்பாவின் விருத்தியுரையாகிய

**சைவசித்தாந்த விளக்கம் முற்றியது.**

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க.

சிவஞான யோகிகள் திருவடி வாழ்க.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 5 | பிறுவாய் | பிறுவாயன |
| 18 | 31 | இருத | கிருதி |
| 32 | 11 | டொண் | டோண் |
| 39 | 16 | அபுர்க்தி | அபுத்தி |
| 42 | 22 | ஈகல | சக்ள |
| 51 | 22 | பிராம | பிராமி |
| 64 | 6 | சாந்தி | வித்தை |
| 65 | 5 | வராவநர் | ஜொவான் |
| 69 | 27 | சினையைய் | சினையைப் |
| 72 | 2 | தத்துவம் | த்துவம் |
| ,, | ,, | பத்துவம் | பத்தும் |
| ,, | 3 | கொடாமை | கொடாமையால் |
| 87 | 4 | மெஞ்ஞான | மெய்ஞ்ஞான |
| 95 | 20 | பிரோ | பிரோக |
| 97 | 20 | பிரளாப | பிரளயா |
| 111 | 31 | சொன் | சொற் |
| 128 | 21 | சிவத்துக்கும் | சிவத்துக்குமுள்ள |

117679